THE RAMALINGA MISSION,
A.V.M. Rajeswari Kalyana Mandapam,
9/15, EDWARD ELLIOTS ROAD,
MYLAPORE :: MADRAS-4.

43

இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ்

JOURNAL OF THE RAMALINGA MISSION

18019

மலர் 1 இதழ் 2
Vol. I No. II
1-7-1968

ஆசிரியர்: ஊரன் அடிகள்
Editor: OORAN ADIGAL

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை

இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ்

ஆசிரியர் : ஊரன் அடிகள்

வெளியிடுவோர் : நா. மகாலிங்கம், பி.எஸ்ஸி., எம்.ஐ.இ.

தலைவர்

இராமலிங்கர் பணிமன்றம், சென்னை

மலர் 1 ஏப்ரல்—ஜூன் 1968 இதழ் 2

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை		2
வள்ளலார் ஓதாதுணர்ந்தவரே	ஆசிரியர்	8
வள்ளல் இராமலிங்க அடிகள் ஓதாது உணர்ந்தவரா ?	அ. கி. பரந்தாமனார், எம்.ஏ.	15
முறையாகப் படிக்காமலேயே முழு ஞானம் வாய்க்கும் முறை	கி. இராமலிங்கனார், எம்.ஏ.	16A
வள்ளலார் ஓதாது உணர்ந்தவரே !	துறவி கந்தசுவாமி	16C
திருவருட்பா	'சேலங்கிழான்'	17
வீறுடையார் முன் செய்த விண்ணப்பம்	ஔவை. சு. துரைசாமி	21
சைவசித்தாந்தத்தில் வினை	முரு. பழ. இரத்தினம் செட்டியார்	33
அருட்பிரகாசத் திரட்டு	பெ. தூரன், ஔவை நடராசன்	45
பண்பாடும் நாகரிகமும்	நா. கிரிதாரிப் பிரசாத், பி.ஏ., பி.எல்.	53
இறைநிலை விளக்கம்	அ. நடேச முதலியார்	57
திருவடிப் புகழ்ச்சி	திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள்	65
வள்ளலார் வழிபட்ட தலங்கள்—சென்னை கந்தகோட்டம்	'சமயபுரக்கிழார்'	70
Kodahanallur Sundaraswamigal	K. R. R. Sastry	77

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாமே

முன்னுரை

இவ்விதழின் சிறப்பு, வள்ளற்பெருமான் 'ஓதாதுணர்ந்தமை பற்றிய நான்கு கட்டுரைகள் இதனுள் இடம் பெறுவத்தாகும். இவ்வொன்றைப் பற்றியே நான்கு கட்டுரைகள் இடம் பெறுவதால் தொடர்கட்டுரைகள் சில இடம் பெற இயலாது போயின. அவை அடுத்த இதழில் தொடரும். ஓதாதுணர்தலைப்பற்றி நன்கு தெளிதற்கு இந்நான்கு கட்டுரைகள் பெரிதும் பயன்படும். இவறறைப் படிப்போர் இவற்றுட் கூறப்பெறாத புதிய கருத்துக்களை எழுதுவார்களாயின், அவை திட்ப நுட்பமும் சிறப்பும் பெற்றிருப்பின் வெளியிடப்பெறும்.

சைவ சித்தாந்தத்தில் வினை என்பது சமரச சன்மார்க்கத்திற்கும் பொருந்தும். தத்துவம், ஆசாரம், சடங்கு என முப்பகுதிகளாக சமயத்தைப் பிரிக்கலாம். சைவசித்தாந்த தத்துவங்களே சமரச சன்மார்க்கத்துக்கும் தத்துவங்களாம். ஆதலின் சன்மார்க்க அன்பர்கள் இதனை ஊன்றிப்படித்தல் நலம்.

கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் வள்ளற் பெருமானைக் கண்டு பழகியவர். சுவாமிகளைப்பற்றி முற்றிலும் அறிதற்கான கருவிகள் கிடைப்பது அருமையாக இருக்கின்றன. சுவாமிகளைப்பற்றிய செய்திகளைத் தேடிக்கொண்டிருந்த எமக்குப் பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி, எம்.ஏ., எம்.எல். அவர்கள் எழுதிய Sublime Biographies Tamil Mysticism என்ற ஆங்கில நூல் பார்வைக்குக் கிடைத்தது. கோடகநல்லூர் சுந்தர சுவாமிகளைப்பற்றிய கட்டுரையொன்றும் வள்ளற் பெருமானைப் பற்றிய கட்டுரையொன்றும் அந்நூலிலிருக்கக்கண்டு அகமிக மகிழ்ந்தோம். சுந்தரசுவாமிகளைப்பற்றிய கட்டுரை இவ்விதழில் இடம் பெறுகிறது. வள்ளற்பெருமானைப் பற்றிய கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும். சாஸ்திரியாரவர்களை எமக்கு நேரிற் பழக்கமில்லை; பார்த்ததுமில்லை. அவர்களும் எம்மை அறியார். அவ்வாறிருந்தும் இக் கட்டுரைகளை எமது இதழில் வெளியிட்டுக்கொள்ளும் அனுமதியை தொலைபேசியிற் பேசியபோதே எமக்கு வழங்கினார்கள். என்னே அவர்கள் பெருந்தன்மை! அவர்களுக்கு எம் நன்றி உரியது.

ஊரன்

(ஆசிரியர்)

வள்ளலார் ஓதாதுணர்ந்தவரே

(ஆசிரியர்)

1-4-1968-ல் வெளியான பத்மஜோதி இதழில் (சுடர் 11, கதிர் 10, 11) பைந்தமிழ்ப் பாவலர் திரு. அ. கி. பரந்தாமனார், எம்.ஏ., அவர்கள் 'வள்ளல் இராமலிங்க அடிகளார் ஓதாது உணர்ந்தவரா?' என்ற தலைப்பில் கட்டுரையொன்றை எழுதினார். அதன் அடுதத இதழில் (16-4-68. கதிர் 12) 'முறையாகப் படிக்காமலேயே முழுஞானம் வாயகக்கும் முறை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை ஆட்சிமொழிக் காவலர், திரு. கீ. இராமலிங்கனார், எம்.ஏ. அவர்களால் எழுதப்பெற்றது. வடலூரினின்றும் வெளிவரும் அருட்சுடர் பங்குனி இதழில் (15-4-68 சுடர் 6. கதிர் 6) அதன் ஆசிரியர் துறவி கந்தசுவாமி அவர்கள் 'வள்ளலார் ஓதாது உணர்ந்தவரே!' என்றொரு கட்டுரையை எழுதினார்.

வள்ளற்பெருமான் ஓதாதுணர்ந்தவரல்லர் என்பதூஉம், அவர் பாடுபட்டுப் படித்தார், யாப்பிலக்கணத்தை மிக மிக அழுத்தமாகப் படித்துப் பாவகைகளையும் பாவின வகைகளையும் இயற்றப் பயின்றார் என்பதூஉம் பரந்தாமனார் கண்ட முடிபுகள். இஃதன்றி 'ஓதாதுணர்தல்' என்பதையே திரு. பரந்தாமனாரவர்கள் ஒப்பவில்லை. ஓதாமல் உணர இயலாது; 'பாடுபட்டுப் படித்தவர்களே அறிவில் பீடுபெறுவர்' என்பதும் அவரது முடிபு. இம்முடிபுகளை திரு. இராமலிங்கனாரவர்கள் ஏற்கவில்லை. முறையாகப் படிக்காமலேயே முழுஞானம் வாய்க்கப் பெறலாம் என்பது இவருடைய முடிபு. ஓதாதுணர்தல் என்பதை 'முறையாகப் படிக்காமலேயே முழுஞானம் வாய்க்கும் முறை' என்று இராமலிங்கனார் எழுதுகிறார் 'ஓதாதுணர்தல்' என்பது பரிபாஷை போல கலைச் சொல்போலச் சிலருககுத் தோன்றலாம்; விளங்காதிருக்கலாம். ஆதலின் அதனை 'முறையாகப் படிக்காமலேயே முழுஞானம் வாய்க்கும் முறை' என விளக்கியிருப்பது நல்ல உத்தி. 'ஓதாது உணர்ந்தவரா?' என்ற வினவிற்கு 'ஓதாது உணர்ந்தவரே!' என்று விடையிறுக்கிறார் வடலூர் கந்தசாமி சுவாமிகள்.

இம்மூன்று கட்டுரைகளையும யாம் படிக்க நேர்ந்தது. அதன் பயனாக ஓதாதுணர்தலைப் பற்றியும், வள்ளற் பெருமான் ஓதாதுணர்ந்தவரா? என்பதைப்பற்றியும் எமது கருத்தை 'வள்ளலார் ஓதாது உணர்ந்தவரே' என்ற தலைப்பில் ஈண்டெழுதப் புகுந்தோம். எமது இக்கட்டுரையைப் படிக்குமுன் பரந்தாமனார், இராமலிங்கனார், துறவியார் ஆகிய மூவர் கட்டுரைகளையும் அறிதல் நலமாகும். அங்ஙனம் அறிதற் கேதுவாக அம்மூவர் கட்டுரைகளையும் எமது இக் கட்டுரையை அடுத்து அச்சிட்டுள்ளோம்.

ஆதலின் இக் கட்டுரையைப் படிப்பதை இவ்விடத்து நிறுத்தி இதன் பின் உள்ள மூன்று கட்டுரைகளையும் படித்து முடித்த பின் இதனைத் தொடர்ந்து படித்தல் நன்று.

ஓதாதுணர்தல்

வள்ளற்பெருமான் ஓதாதுணர்ந்தவர் என்ற உண்மையை விளக்குமுன் 'ஓதாதுணர்தல்' என்பதொன்றுண்டென்பதை முதற்கண் நிலை நாட்டல் நமது கடமையாகிறது. ஏனெனில் ஓதாதுணர்தல் இயலாது என்ற கருத்துடையோர் பரந்தாமனுரவர்களைப் போல் பலர் இருப்பராதலின் என்க. ஓதாதுணர்தலைப்பற்றிக் கூறவேண்டுமாயின் விரிவாகவே கூறவேண்டும். அதனைச் சுருங்கக் கூறி விளங்க வைத்தல் அரிது. இராமலிங்கனாரவர்களின் 'முறையாகப் படிக்காமலேயே முழு ஞானம் வாய்க்கும் முறை' என்ற கட்டுரை ஓதாதுணர்தலை ஓரளவு விளக்குகிறது. பின்னொருகால் ஓதாதுணர்தலைப்பற்றி விரிவாக எழுதுவோம். என்னும ஒரு குறிப்பை மாத்திரம் ஈண்டுத் தருகிறோம்.

மக்களை மூன்று வகையினராகச் சாத்திரம் கூறுகிறது.

1. பிராகிருதர்.
2. வைநயிகர்.
3. சாமு சித்தர்.

பிராகிருதர் என்பார் சாமானியர். லௌகிகர். உலகியலார். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்பவர். உலகில் பெரும்பாலோர் பிராகிருதரே. இவர்கள் ஓதியும் உணரமாட்டார்கள்.

வைநயிகர் என்பார் வினய சீலர். ஓரளவுக்குப் பக்குவம் வாய்ந்தவர்கள். இவர்கள் ஓதி உணர்வார்கள்.

சாமு சித்தர் என்பார் அதிதீவிர பக்குவிகள். முற்பிறப்புக்களிலேயே சரியை கிரியை யோகங்களை முடித்து இப்பிறப்பில் ஞானியாகவே பிறப்பவர்கள். திருஞானசம்பந்தர், மெய் கண்டார், இராமலிங்க அடிகள் போன்றோர் இத்தகையர். அதாவது பிறவி ஞானிகள் இவர்கள் ஓதாதே உணர்வார்கள்.

சாமு சித்தரைப் 'போத மிகுத்தோர்' என்றும், பிராகிருதரைப் 'பேதைமைக்கே பொருந்திஞேர்' என்றும், வைநயிகரை 'கதிப்பாற் செல்ல ஏது நெறி' எனும் அவர்' என்றும் அருணந்தி சிவாசாரியர் சிவஞான சித்தியாரிற் கூறுவர்.

போதமிகுத்தோர் தொகுத்த பேதைமைக்கே
　　பொருந்திஞேர் இவர்க்கன்றிக் கதிப்பாற்செல்ல
ஏதுநெறியெனுமவர் கட்கறிய முன்னாள்
　　இறைவன் அருணந்தி தனக்கியம்ப நந்தி
கோதில் அருட் சனற்குமாரற்குக் கூறக்
　　குவலயத்தின் அவ்வழி எங் குருநாதன்கொண்டு
தீதகல எமக்களித்த ஞான நூலைத்
　　தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தியென்றே.

—சித்தியார், பரபக்கம் 2.

பருவத்திலேயே பாடல் பாடத் தொடங்கிவிட்டனர். ஞானசம்பந்தர் மூன்றும் வயதில் பாடத் தொடங்கினர். வள்ளற் பெருமான் ஒன்பதாம் வயதில் பாடத் தொடங்கினர். இவர்களது தொடக்க காலப் பாடல்களே இலக்கணச் சுத்தமாக விளங்கின. இவர்கள் பிற்காலத்தில் பாடியவை எவ்வளவு சிறந்த இலக்கண இலக்கிய அமைதியுடையனவோ அவ்வளவு சிறந்த இலக்கண இலக்கிய அமைதியுடையன வாகவே இவர்களது அடிநாட் பாடல்களும் இருக்கக் காண்கிறோம். இவ்விருவரும் ஓதித்தான் உணர்ந்தார்கள் என்றால், பிறந்த மூன்றாண்டுக்குள்ளும் ஒன்பதாண்டுக் குள்ளும் யாப்பிலக்கணப் பயிற்சியை முடித்துவிட்டார்களா ?

எலும்பைப் பெண்ணாக்கும் வல்லமை கை வந்த ஒருவருக்கு இலக்கண இலக்கியச் சுத்தமாகப் பாடுகின்ற வல்லமை தானாக வாராதா? அவரும் இலக்கணம் படித்தால்தான் பாட்டு வருமென்றால் விஞ்ஞானம் படித்தால்தானே எலும்பைப் பெண்ணாக்க முடியும் ?

வள்ளற் பெருமான் ஓதாதுணர்தல்

''வள்ளல் பெருமான் ஓதாது உணர்ந்தவர் என்று இன்றும் பலர் இந்நாட்டில் கருதி வருகின்றனர்'' என்று பரந்தாமனாரவர்கள் தமது கட்டுரையைத் தொடங்குகிறார்கள். அப் படிக் கருதுவது சற்றும் தவறல்ல. அதுதான் உண்மை. அப்படித்தான் வள்ளற் பெரு மானே சொல்லியிருக்கிறார். தாம் ஓதாதுணர்ந்தமையைப் பெருமானே பல பாடல் களிற் குறித்துள்ளனர். அடிகள் ஓதாதுணர்ந்தமைக்கு அவையே அகச் சான்றுகள். அவற்றுட் சில வருமாறு :—

சாதி குலம் சமயம் எலாம் தவிர்த்தெனை மேல் ஏற்றித்
  தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே
ஆதி நடுக் கடைகாட்டாதண்ட பகிர் அண்டம்
  ஆர்உயிர்கள் அகம்புறம் மற்றனைத்தும நிறை ஒளியே
ஓதி உணர்ந்தவர் எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்
  ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே
சோதிமயமாய் விளங்கிததனிப்பொதுவில் நடிக்கும
  தூயநடத்தரசே என் சொல்லும் அணிநதருளே

— அருள் விளக்கமாலை 23.

தன்னை ஓதாமல் உணரச் செய்தான் எனக் கூறும் அடிகள் 'ஓதி உணர்ந்தவர் எல்லாம் என்னைக் கேட்க' என்று கூறுவதை உற்று நோக்குக.

ஏதும் அறியா திருளில் இருந்த சிறியேனை
  எடுத்து விடுத்தறிவு சிறிதேய்ந்திடவும் புரிந்து
ஓதுமறை முதற்கலைகள் ஓதாமல் உணர
  உணர்வி விருந்துணர்த்தி அருள் உண்மை நிலை காட்டித்
தீது செறி சமய நெறி செல்லு தலைத்தவிர்த்துத்
  திரு அருண் மெய்ப்பொது நெறியில் செலுத்தியும் நான்மருளும்
போதுமயங்கேல் மகனே என்று மயக்கெல்லாம்
  போக்கி எனக்குள்ளிருந்த புனித பரம்பொருளே.

— அன்புமாலை 25.

இதற்கு உரை எழுதும் சிவாக்கிரயோகிகள் ''ஞானாதிகாரியாகிய சாமு சித்தர்க்கும் உலக வாழ்வே பொய்யென்றும், தேகமே ஆன்மாவென்று மிருக்கும் பிராகிருத சனங்களுக்குமன்றி, மோக்ஷத்திற்கேது என்னை யென்று சிந்திக்கும் வைநயிகர்க்கு அறியும்படி'' என்றெழுதுகிறார்கள். மேலும்,

''சாமுசித்தராவார் சாமானியமான இஷ்டா பூர்த்தாதி தருமங்களுக்குப் பரமான சிவ தருமமாகிய சரியைகிரியா யோசமியற்றி அதனால் நின்மல அந்தக்கரணராய், அந்தத் தேகம்விட்டும அந்த ஞானம கெடாமல் மீளவும் ஜனிக்குமபொழுதும அந்த ஞானத்துடனேயே ஜனிதது சிவ பாவனை பண்ணுமவர்.''

''வைநயிகராவார் வினயசீலராய் உலகத்துக்கு உயர்ந்தோர் போதிக்கும் ஞானத்தினாலும் குரு உபதேசத்தினாலும சிவ சாஸ்திரத்தினாலும் நித்தியா நித்திய வஸ்து விவேகிகளாய், மனோவாக்குகாய வியாபாரங்களினால் சர்வ கன்மங்களையும் துடைக்கப் பட்டவர்களாகிக் கிரமத்தின் மோக்ஷத்தையடைபவர்.''

''பிராகிருதராவார் பூமியில் ஜனித்து மேற் சொப்பனத்தின் ஞானம்போல் அறிந்தறியாமலும் கிளிஞ்சலை வெள்ளியென்று அறிவதுபோல விபரீத ஞானியுமாய், அதனாலே தேகாதிகளை ஆன்மா என்றும் பிரகிருதி ஜன்னிய வஸ்துக்களைப் பர மென்றும் எண்ணுமவர்.''

என எழுதி சாமுசித்தர், வைநயிகர், பிராகிருதராவார் இத்தகையர் எனத் தெளிவாக விளக்குகிறார்.

திருஞான சம்பந்தர் இராமலிங்க அடிகள் போன்றோர் சாமு சித்தர்கள்; அஃதாவது பிறவி ஞானிகள். இவர்களது இலக்கணத்தைச் சிவாக்கிரயோகிகள் ''அந்தத் தேகம் விட்டும் அந்த ஞானம் கெடாமல் மீளவும ஜனிக்கும் பொழுது அந்த ஞானத்துடனே ஜனித்து'' எனக் கூறுவதை உற்று நோக்குக. இத்தகைய பிறவி ஞானிகள் இப்பிறப்பில் படிகக வேண்டியதில்லை. படிக்கவேண்டியதையெல்லாம் அவர்கள் முற்பிறப்புகளிலேயே படித்து முடித்துவிட்டார்கள். முற்பிறப்பில் எவ்வளவு அறிவோடு இருந்து இறந்தார்களோ அவ்வளவு அறிவோடு இப்போது பிறந்திருக்கிறார்கள். விட்ட இடத்தில் தொட்டிருக்கிறார்கள். இதுதான் விட்ட குறை தொட்ட குறை என்பது. அதாவது முற்பிறப்பில் எஸ்.எஸ்.எல்.சி., படித்தவர் இப்பிறப்பில் புகுமுக வகுப்பில் தொடங்குவது, முற்பிறப்பில் பி. ஏ. படித்தவர் இப்பிறப்பில் எம். ஏ.யில் தொடங்குவது என்பது போலாம். இத்தகைய சாமு சித்தர்களுக்கே,

> ஒருமைக் கண்தான் கற்ற கல்வி ஒருவற்
> கெழுமையும் ஏமாப் புடைத்து

என்ற குறள் (398) முற்றிலும் பொருந்துவதாம். நமது கல்வி அரிச்சுவடியில் தொடங்குகிறது. முற்பிறபபில நாம் எவ்வளவு படித்திருந்தோமோ தெரியவில்லை. எவ்வளவு படித்திருந்தாலும் அந்த அறிவு நாம் பிறக்கும்போது உடன் வரவில்லை. பிறந்த பின் அரிச்சுவடியிலிருந்து, அ—ஆ—இ—ஈ—யிலிருந்து நமது கல்வியைத் தொடங்கினோம். திருஞான சம்பந்தரும் இராமலிங்க அடிகளும் தமது கல்வியை அரிச்சுவடியில் தொடங்கவில்லை. அவர்கள் முற்பிறப்புக்களிலேயே கற்பன கற்று முடித்து விட்டார்கள், முற்பிறப்பிலேயே அவர்கள் கவிபாடும் திறனுடையராயிருந்தனர். ஆதலின் இப்பிறப்பிலும் தொடக்கத்திலேயே, பள்ளி சென்று அரிச்சுவடி பயில வேண்டிய

நாதா பொன் அம்பலத்தே அறிவா நந்த நாடகஞ் செய்
பாதா துரும்பினும் பற்றுக என்னைப் பணிகொண்டெல்லாம்
ஓதா துணர உணர்த்தி உள்ளே நின்றுளவு சொன்ன
நீதா நினை மறந்தென் நினைக்கேன் இந்த நீணிலத்தே.

—2 திருமுறை. தனித்திருவிருத்தம் 49.

ஓதி யுணர்தற் கரிய பெரிய
வுணர்வை நண்ணியே
ஓதா தனைத்து முணர்கின்றேனின்
னருளை யெண்ணியே.

(கீர்த்தனை) மெய்யருள் வியப்பு 41.

ஓதா துணர்ந்திட ஒளி அளித் தெனக்கே
ஆதாரம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி.

— அருட்பெருஞ்ஜோதி அகவல் 12.

சில பாடல்களே மேலெடுத்துக் காட்டப்பட்டன இவைபோல் இன்னும் பல உள. 'நான் ஓதாது உணர்ந்தேன்' என்று வள்ளற் பெருமானே கூறியபின் வள்ளல் இராமலிங்க அடிகளார் ஓதாது உணர்ந்தவரா?' என்ற கேள்விக்கு இடமேது? அங்ஙனம் கேட்பது சூரியன் தோன்றுவது பகலிலா? என்று கேட்பதனை ஒக்கும்.

வள்ளற் பெருமான் எப்பள்ளியிலும் கல்வி பயின்றதில்லை. தன்னைப் பள்ளி பயிற்றாமே இறைவன் கல்வி பயிற்றினான் என்பதைப் பெருமானே தமது பாடலொன்றிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தனர் அடியார்
சிவ சிவ போற்றி என்றுவகை கொள்கின்றார்
நினைப்பள்ளி உண்ணத் தெள் ஆரமுதளிக்கும்
நேரம் இந்நேரம் என்றுரியர் புகன்றார்
முனைப்பள்ளி பயிற்றா தென தனைக் கல்வி பயிற்றி
முழுதுணர்வித்துடல் பழுதெலாம் தவிர்த்தே
எனைப்பள்ளி யெழுப்பிய அருட்பெருஞ்சோதி
என்னப்பனே பள்ளி எழுந்தருள்வாயே

— திருப்பள்ளி எழுச்சி 7.

வள்ளற் பெருமான் எவ்வாசிரியரிடத்திலும் படித்தவரல்லர். இளமையில் ஆசிரியரையின்றி இறைவனே தனக்குக் கல்வி பயிற்றினான் என்பதைப் பெருமானே தமது சத்தியப் பெருவிண்ணப்பத்திற் குறிப்பிட்டுள்ளார்கள். விண்ணப்பத்தின் அப்பகுதி வருமாறு

''எல்லாமானவராயும் ஒன்று மல்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற தனித் தலைமைக் கடவுளே! குமாரப் பருவத்தில் எனைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரையின்றியே என்றரத்திற் பயின்றறிதற் கருமையாகிய கல்விப் பயிற்சியை எனதுள்ளகத்தே யிருந்து பயிற்றுவித்தருளினீர்.''

வள்ளற் பெருமானது கல்வியும் கேள்வியும் இறைவனிடத்துப் பெற்றதே யொழிய வேறு எவ்வாசிரியரிடத்தும் பெற்றதல்ல என்பது,

சுற்றது மற்றவ்வழி மா சூதது என்றென்னுத்
தொண்டரெ லாங்கற்கின்றார் பண்டு மின்றுங்காணுர்
ஏற்ற தும்பு மணி மன்றில இன்ப நடம் புரியும்
என்னுடைய துரையே நான் நின்னுடைய அருளால்
கற்றது நின்னிடத்தே பின்கேட்டது நின்னிடத்தே
கண்டது நின்னிடத்தே உட்கொண்டது நின்னிடத்தே
பெற்றது நின்னிடத்தே இன்புற்றது நின்னிடத்தே
பெரியதவம் புரிந்தேன் என் பெற்றி அதிசயமே.

— அற்புதமாலை 16.

என்னும் அவர்களது அருட்பாடலானும் அறியப்படும்.

இனிப் பரந்தாமனரது கட்டுரைக்கு வருவோம். தனது கட்டுரையைப் பரந்தாமனர் பின் வருமாறு தொடங்குகிறார்.

> ''வள்ளல் பெருமான் ஓதாது உணர்ந்தவர் என்று இன்றும் பலர் இந்நாட்டில் கருதி வருகின்றனர். இவரை மட்டும் அல்லாமல் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் கம்பரையும் தேசியக் கவிஞர் பாரதியாரையும் இப்படியே பலர் நினைத்து வருகிறார்கள்; எழுதியும் வருகிறார்கள்; மேடையில் பேசியும் வருகிறார்கள். இவர்கள் எல்லாரும் அருள் பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை; கருவிலே அமைந்த திருவுடையவர்கள் என்பதிலும் மாறுபட்ட கருத்தும் இல்லை. அருளினலேயே இவர்கள் எல்லாரும் பாடத் தொடங்கி விட்டார்கள் என்பதில்தான் உண்மை இல்லை.

இங்ஙனம் எழுதுபவர் ஆழ்வார்கள் நாயன்மார்கள் கம்பர் பாரதியார். இராமலிங்க அடிகள் ஆகியோரின் யாப்பிலக்கணப் படிப்பைப்பற்றி எழுதிக்கொண்டு செல்கிறார். வள்ளற்பெருமான், நாயன்மார்கள், ஆழ்வார்கள், கம்பர், பாரதியார் ஆகிய இவர்கள் ஒரேதரததினர் அல்லர் 'இவாகள் எலலாரும் அருள் பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை' எனக் கூறியுள்ளது தவறு. கம்பரும் பாரதியாரும் கவிஞர்கள். அருளாளர்கள் ஆகார். பெருங் கவிஞர் உலக மகா கவிஞர் என்றெல்லாம கூறலாமே யன்றி அருட் புலவர்களாக, அருட் கவிஞர்களாக, இவர்களைக் கூறுவதற்கில்லை. கமபரும் பாரதியாரும் ஓதி யுணர்ந்தவர்களே கம்பர் இளமையில் கம்பங்கொல்லை காத்துக் கொணடிருந்தபோது காளியின் அருள் பெற்றுப் பாடினர், என்பது கற்பனைக் கதை இக்கதை அறிஞர்களால் என்றே தள்ளப்பட்டுவிட்டது. பாரதியார் சிறுவராயிருக்கும்போதே கவிபாடும திறன் பெற்றிருந்தார். அவர் படித்தாரெனினும், திரிசிரபுரம மகாவித்துவான மீனுட்சி சுந்தரம பிள்ளையவர்களிடத்து டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் படிததது போல, ஒருவரிடமோ பலரிடமோ பாரதியார் முறையாகப் படிக்கவில்லை, பாடங் கேட்கவில்லை. இளமையில் பாரதியார் சிலரிடத்துச் சிலகாலம் படித்தாரேனும் அது அக்காலப் புலவர்கள் முறையாகப் பாடங் கேட்டது போன்றதாகாது. ''கண்டது கறகப் பணடிதராவார்'' என்றது போலப் பாரதியார் தாமே பலவற்றையும கற்றுத தெளிந்து புலமை பெற்றார். பாரதியார் கருவிலே திருவுடையவர் என்பது உண்மையே. ஆயின் அருள் பெற்றார் என்று

சொல்லி, திருமூலர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், இராமலிங்கர் ஆகியவர்களோடு கம்பரையும் பாரதியாரையும் சேர்த்தல் பொருந்தாது.

இனி நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் காண்போம். நாயன்மார்கள் அறுபத்து மூவர். இவ்வறுபத்து மூவரும், ஒரே தரத்தினர் அல்லர். கொண்டிருந்த அழுத்தமான சிவபக்தியால் ஒரே தரத்தினராவரல்லது பெற்ற பேற்றால், செய்த தொண்டினால் ஒரே தரத்தவராகார்; இவர்களுள் படித்தோர் உண்டு. படிக்காதோர் உண்டு. பாடல் செய்தோர் சிலர். பலர் பாடல் செய்வதையே அறியார். 'நாயன்மார்கள்' எனப் பரந்தாமனார் சுட்டியது சமய குரவர் நால்வரையே எனக் கருதுகிறோம். நால்வரிலும் ஞானசம்பந்தர் பள்ளியிற் பயின்றதில்லை. வேறு யாரிடமும் முறையாகப் படித்ததுமில்லை. திருநாவுக்கரசர் நன்கு கற்றவர். பல்வேறு சமயங்களையும் கற்றுத் தெளிந்தவர். சமணராக விளங்கிய போதும் தலைவராகவே விளங்கினார். சுந்தரமூர்த்திகளும் நன்கு படித்தவரே. மாணிக்க வாசகர் கல்வியாற் சிறந்து அமைச்சராக விளங்கினார். அப்பரும் சுந்தரரும் மாணிக்க வாசகரும் படித்தனரெனினும் அவர்களது அறிவு அவர்கள் இளமையிற் கற்ற ஏட்டுக் கல்வியோடு அடங்கிவிடாது. அறிவு பல வகை அதில் நூலறிவு ஒரு வகை. நூலறிவு இறைவனைக் காட்டிவிடாது. 'நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க' என்றருளுவர் மாணிக்கவாசகர். 'நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந் தன் உண்மை அறிவே மிகும்' என்னும் குறட்பாவும் (373) ஈண்டு சிந்திக்கத்தக்கது. திருநாவுக்கரசர் மாணிக்க வாசகர் போன்றோர் இலக்கணங் கற்றுப் பாட வேண்டியதில்லை. அவர்கள் பாடியதே இலக்கணமாகும். ஈண்டு ஒன்றைச் சுட்ட விரும்புகிறோம். எள்ளிலிருந்து எண்ணெய் எடுபடுவதுபோல இலக்கியத்திலிருந்து இலக்கணம் எடுபடும் என்பர் இலக்கண நூலார். இலக்கியங்களே முதலில் தோன்றின. பின்னர் அந்த இலக்கியங்களுக்கு இலக்கணங்கள் தோன்றின. இலக்கணத்திலிருந்து இலக்கியமெழவில்லை. இலக்கியத்திலிருந்தே இலக்கணமெழுந்தது. முதன் முதலில் தோன்றிய இலக்கியத்திற்கு எது இலக்கணம்?

இலக்கணந் தோன்றுதற்கு முன்னமே இலக்கியஞ் செய்தவன் முற்றுணர்வினனாக இருக்க வேண்டுமன்றோ. உலகின் ஆதி நூலை இறைவன் செய்தான் என்பதும் முதனூலாசிரியர்கள் அறிவர்கள் என்பதும் இது குறித்தேயாம். மாணிக்க வாசகர் அறிவாற் சிவனே என்பது திணணம் என்பர் இலக்கணக் கொத்துடையார். பின் வந்த இராமலிங்கரும் அறிவாற் சிவனேயாவர். 'இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது' என வள்ளற் பெருமானே தமது பேருபதேசத்தில் அருளியிருக்கின்றனர்.

கம்பரின் கல்விப் பயிற்சியையும் பாரதியாரின் படிப்பையும் கூறி முடிக்கும் பரந்தாமனாரவர்கள்,

> ''முன் குறிப்பிட்டவர்களைப் போலவே வள்ளலாரும் யாப்பிலக்கணத்தை மிக மிக அழுத்தமாகப் படித்து பாவகைகளையும் பாவின வகைகளையும் இயற்றப் பயின்றிருப்பதோடு இக்காலத்திற்கேற்ற இசைப்பாக்களையும் இயற்றத் திறமை பெற்றிருப்பதைக் காண்கிறோம்.''

என்றெழுதுகிறார். வள்ளற்பெருமானும் அவர்களைப் போன்ற ஞானிகளும் யாப்பிலக்கணங் கற்றே பாட வேண்டுமென்பதில்லை; அவர்களது பாடல்களில் யாப்பிலக்கணம் தானே வந்தமையும். இதுவே அருட்புலமையாம். அருட்புலமையுள் மொழிப்புலமை அடங்கும். மொழிப்புலமையின் ஒரு கூறே இலக்கணப் புலமை.

தொல்காப்பியத்தில் வரும் தொண்ணூறு தொள்ளாயிரம் என்பன பற்றி வள்ளற்பெருமான் கூறியுள்ள கருத்தினைப் பரந்தாமனாரவர்கள் விரிவாக எடுத்துக் காட்டி,

> ''இப்படிச் சொல்லக்கூடிய அளவு தொல்காப்பிய இலக்கணத்தை வள்ளலார் கற்றுச் சிந்தித்திருக்கிறார்.''

என்றெழுதுகின்றார்.

வள்ளற்பெருமானது இலக்கணப்புலமை இன்றுள்ள எவரது புலமைக்கும் குறைவானதல்ல. ஒழிவிலொடுக்கப்பாயிரவிருத்தியுள்ளும், தொண்டை மண்டல சதகத்தின நூற் பெயரிலக்கணம், வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை ஆகியவற்றுள்ளும் தொல்காப்பியச் சூத்திரங்களை மேற்கோளாகப் பெருமான் எடுத்தாண்டுள்ளனர். ஒழிவிலொடுக்கக் கப்பாயிரவிருத்தியுள் புறப்பொருள் வெண்பாமாலையும் ஓரிடத்தெடுத்தாளப் பட்டுள்ளது. இதனாலெல்லாம் வள்ளற்பெருமான இலக்கண நூலகளை நம் போன்று உருப்போட்டுக் கற்றவராக மாட்டார். நாம் கற்றது கை மண்ணளவு, கல்லாதது உலகளவு. வள்ளற்பெருமான் கற்றது உலகளவு, கல்லாதது ஒன்றுமில்லை. கற்றதும் நம்மைப் போலல்ல. அது ஓதாதுணர்ந்த கல்வி.

வள்ளற்பெருமானின் இளமைக்கால நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதும் பரந்தாமனாரவர்கள்,

> ''வள்ளலார் தமையனார் சென்னையில் வாழ்ந்து வந்தவர்; தமிழ்ப்புலமை மிக்கவர். அவரே இராமலிங்கருக்குத் தொடக்கக் கல்வி கற்பித்தார். பின்பு தமையனார் இராமலிங்கரைத் தம் ஆசிரியரான காஞ்சீபுரம் மகா வித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயிலுமாறு அனுப்பி வைத்தார்' இராமலிங்கர் ஆசிரியர் பாடஞ் சொல்லுவதைக் கவனிக்காமல் கந்தப் பெருமான் மீது பாடல் இயற்றுவதில் கருத்தைச் செலுத்தி வந்தார். என்று இராமலிங்கர் வரலாற்றை எழுதியவர் கூறியுள்ளார். ஒரு சிலர் பாடஞ் சொல்வதைக் கவனிக்காமல் இருப்பதுபோல், தோன்றுமே ஒழிய கற்றுக் கொள்ளாமலிருப்பதில்லை. இப்படியே விவேகானந்தரைப் பற்றியும் குறை கூறுவதுண்டு.''

என்றெழுதுகின்றார். தமையனாரே தம்பிக்குக் கல்விப் பயிற்சியைத் தொடங்கி வைத்தது உண்மையாகலாம். தம்பியைப் பயிற்றுவதில் தமையன் வெற்றி பெறவில்லை என்பது வெளிப்படை. பின்னர் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் கல்வி கற்க அனுப்பப் பட்டதாகவே வரலாறெழுதும் அனைவரும் (தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களைத் தவிர) எழுதியுள்ளனர். இவரிடமும் பெருமான பல நாள் பயிலவில்லை. பேருக்கு ஓரிரு நாள் சென்றாரோ யாதோ அறியோம். இளைய இராமலிங்கர்க்கு உலகியற் படிப்பில் நாட்டமில்லை. பாடத்தைக் கவனிக்காதது போல் இருந்து கவனித்துக் கற்றுக் கொண்டார் என்பது நாமாகச் செய்து கொள்ளும் சமாதானம். அப்படியும் சில மாணாக்கர் இருப்பர் என்பது உண்மையே. ஆனால் இராமலிங்கருக்கு அது பொருந்தாது.

தொடர்ந்து எழுதும் பரந்தாமனாரவர்கள்,

> ''ஆசிரியரை விட்டதும் இராமலிங்கரே படித்துக்கொண்ட நூல்கள் பல உண்டு. அறிவுள்ள மாணாக்கர்கள் எல்லா நூலகளையும் ஒன்று விடாமல் ஆசிரியரிடமே கற்க வேண்டுவதில்லை. இப்படி எல்லா நூலகளையும் ஒன்று விடா

> மல் ஆசிரியரிடம் கற்பவர் கடை மாணாக்கர் என்பதில் ஐயமில்லை! இராமலிங்கர் கடை மாணாக்கராக விளங்கவில்லை; கருவிலமைந்த திருவோடு முதல் மாணாக்கரினும் முதல் மாணாக்கராய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும். இவர் வரலாற்றை எழுதியவர் தலை மாணாக்கர் தன்மையை உணராது கடை அளந்து விட்டார். அதை நம்பிய பலர் இராமலிங்கரை ஓதாது உணர்ந்தவர் என்று கூறலாயினர்.''

என எழுதுகின்றார். கற்கவேண்டிய எல்லா நூல்களையுமே ஆசிரியரிடத்துக் கற்க வேண்டுவதில்லை என்பது உண்மை. 'வேண்டுவதில்லை' என்பதிலும் 'இயலாது' என்றே கூறலாம். தமிழிலுள்ள நூல்கள் அனைத்தையும் ஆசிரியர் ஒருவரிடம் பாடங் கேட்க வேண்டுமாயின் ஆயுள் முழுதும் கேட்டாலும் முடியாது. ஆசிரியரும் தம் ஆயுள் முழுதும் சொல்ல வேண்டும், கேட்போரும் ஆயுள் முழுதும் கேட்க வேண்டும். அப்படியும் எல்லா நூல்களையும் முடித்தல் சாலாது. தமிழ் நூற் பரப்பு அவ்வளவு பெரிது. ஆதலின் வகைக்குச் சிலவாக அந்தந்த வகையில் சிறந்த சில நூல்களையே பாடங் கேட்பது வழக்கு. புராணங்களில் சில, காப்பியங்களில் சில, தூதில் சில, உலாவிற் சில, கலம்பகங்களிற் சில, இப்படிப் பலவற்றைப் பாடங் கேட்ட பின், பின்னுளில் மாணாக்கர்கள் ஏனைய நூல்களைத் தாங்களாகவே படித்துக் கொள்வர். இப்போதுள்ள கல்லூரிப் பாடத்திட்டத்தைப் பார்ப்போமே. ஷேக்ஸ்பியரில் ஒன்றையோ இரண்டையோ பாடமாக வைக்கிறார்கள். எம். ஏ. படித்த ஒருவர் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஒன்று அல்லது இரண்டைத்தான் கல்லூரியில் கற்க முடியும். பிறவற்றை அவர் பின்னுளில் தான் படித்துக்கொள்ள வேண்டும். எம். ஏ. படித்தவர் அடுத்த ஆண்டே கல்லூரியில விரிவுரையாளராக வந்துவிடுவார். இவர் கல்லூரி வாழ்க்கையில் படிக்காத ஷேக்ஸ்பியர் பகுதிகள் பாடமாக வைக்கப்பட்டு விடுகிறது. இவர் எங்ஙனம் வகுப்பு நடத்துவார். நான் படிக்கும்போது இது எனக்குப் பாடமாக வரவில்லை என்று சொல்ல முடியுமா. ஆசிரியராக வந்தபின் அவர் தாம் முன்னர் படிக்காத பலவற்றைப் படித்தே தீர வேண்டும்.

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பிள்ளையவர்களிடத்தில் சங்க நூல்களைப் பாடங்கேட்டதே இல்லை. சங்க நூல்கள் எனப் பல இருக்கின்றன என்பதே ஐயரவர்களுக்கு அவர் படித்த காலத்தில் தெரியாது. பின்னர் குடந்தையில் ஆசிரியப் பணியாற்றும்போதுதான் சங்க நூல்களின் இருப்பையே அறிந்தார். அவற்றைத் தேடிப் பதிப்பித்தார். சங்க நூல்களை அதுவரை, படிக்காத, கண்ணாலும் பார்க்காத ஒருவருக்கு அவற்றைப் பதிப்பிக்கும் அறிவு—திறன்-எஙகிருந்து வநதது. ஓரின மொழியில் ஒன்றை நன்கு கற்ற ஒருவர்க்கு அவ்வினத்தில் பிறிதொரு மொழியைக் கற்பது எளிதென்பது மொழியியலார் ஒபபும் உண்மையாகும்.

> ''ஆசிரியரை விட்டதும் இராமலிங்கரே
> படித்துக் கொண்ட நூல்கள் பல உண்டு.''

எனப் பரந்தாமனார் எழுதுகின்றார். வள்ளற் பெருமான் முறையாக ஒருவரிடமோ பலரிடமோ படித்ததில்லை, ஆனால தாமாகவே பலவற்றையும் பாடுபட்டுக் கற்றார் என்பதே பரத்தாமனார் கருத்து. முறையாகப் படிககாமலேயே கண்டது கற்றுப் பண்டிதராவார் உண்டு வள்ளற் பெருமானும் அப்படிப்பட்டவரே எனப் பரந்தாமனார் கருதுகின்றார்.

1-7-68

வள்ளற்பெருமான் ஏடுகளைத் தொட்டதே இல்லை, புத்தகங்களைத் தொட்டதே இல்லை என்று யாம் சொல்லவில்லை. பெருமான் சில நூல்களை இயற்றியுள்ளார்கள். சில நூல்களைப் பதிப்பித்துள்ளார்கள். சில நூற் பகுதிகளுக்கு உரையெழுதியுள்ளார்கள். இவற்றையெல்லாம் செய்ய அந்நூல்களையும் அவைதொடர்பான பிறவற்றையும் அவர்கள் 'பார்த்திருக்க' வேண்டும். தொல்காப்பியச் சூத்திரங்களைப் பெருமான தமது உரைகளில் எடுத்தாளுகின்றனர். அதனைப்படிக்காது எடுத்தாண்டிருக்க முடியுமா? எனக் கேட்கலாம். பெருமான் தொல்காப்பியத்தைப் பார்த்திருக்கிறார்கள் என்பது உண்மை. நாம் தொல்காப்பியத்தைப்படிககிறோம், பல முறை படிக்கிறோம். ஆனால் வள்ளற் பெருமானும் அவரனையவர்களும் படிக்கமாட்டார்கள், பலமுறை படிக்கமாட்டார்கள். ஏடுகளைப் புரட்டிப் பார்ப்பார்கள். கண்ணோட்டஞ் செய்து கொண்டே போவார்கள். இதுதான் அவர்கள் கற்பது. இதனைக் 'கற்பது' என்றோ 'படிப்பது' என்றோ கூறலாகாது. 'பார்ப்பது' எனறே கூறவேண்டும். 'சுவாமி கைவல்யம் பார்த்திருக்குமே', 'திருககோவையார் பார்த்திருக்குமே' எனறு பெரியவர்களைக் கேட்கிறோம். இந்த மரபு மேற்கூறிய உண்மையைப்பற்றி வந்ததே. இவ்வளவு பெரிய எடுததுக் காட்டு ஏன்? சிறு செய்தி ஒன்றேபோதுமே. 'பேப்பர் பார்த்தீர்களா' என்று கேட்கிறோம், 'செய்தித்தாள் படித்தீர்களா' என்று கேட்கிறோம் செய்திததாள் கற்றீர்களா என்று யாரும் கேட்பதில்லை. கற்பது வேறு. படிப்பது வேறு, பார்ப்பது வேறு. மூன்றும் வெவ்வேறு அளவுடையவை. கற்பது (Study) என்பது ஆழ்ந்து படித்தல், ஊன்றிப் படித்தல், பலகால் படித்தல். படிப்பது Reading. பார்ப்பது Glance. தொல்காப்பியத்தை வள்ளற்பெருமான் கண்ணோட்டம் (Glance) செய்தார்கள். மேலோட்டமாகப் பார்ப்பதை நாமும் 'ஒரு கிளான்ஸ் பார்த்தல்' என்று சொல்லுகிறோமல்லவா? 'அந்தப் பேப்பரைக் கொடு, ஒரு கிளான்ஸ் பார்த்துவிட்டுத் தருகிறேன்' என்று சொல்வதைக் கேட்கிறோமன்றோ ? மாணவர்கள் தேர்வு அறைக்குச் செல்லு முன் புத்தகங்களை 'ஒரு கிளான்ஸ் புரட்டுகிறேன்' என்கிறார்களல்லவா ?

செய்தித்தாள் படிப்பதற்கு நமக்கு எவ்வளவு முயற்சி தேவையோ, அவ்வளவு முயற்சிதான் தொல்காப்பியம படிப்பதறகு வள்ளற் பெருமானுக்குத்தேவை. செய்தித்தாள் படிப்பதுபோல் நாம் நூல்களைப் படித்தால் பின்னர் மறநது விடுவோம். வள்ளற் பெருமான் போன்றோர் அப்படியல்லர். எனவே முடிவாகக கூறுமிடத்து வள்ளற் பெருமான தொல்காப்பியம் முதலிய நூல்களைத் திருக்கணணோட்டஞ் செய்திருக்கின்றனர் (Glance; Refer*) என்பதே உண்மையாகும்.

உண்மை இவ்வாறிருப்பவும் பரந்தாமனாரவர்கள்,

> ''உண்மையில் வள்ளல்பெருமான் இராமலிங்க அடிகளார் மிகப் பாடுபட்டு இலக்கிய இலக்கணங்களையும் சமய சாஸ்திரங்களையும் மருத்துவத்தையும் நனகு பயினறு சிந்தனைச் செல்வராய் நுண்மாண் நுழைபுலம் மிககவராய்த் திருவருள் பெற்றவராய் இலங்கினர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை, பாடுபட்டுப் படிததவர்களே அறிவில் பீடு பெறுவர் என்பது பேருண்மை.''

என்றெழுதித் தம் கட்டுரையை முடிக்கின்றனர். இதனுள் 'மிகப் பாடுபட்டு' என்பதனை

* Glance—கணணோட்டம. Refer—எடுத்துப்பார், வேணடும்போது உதவி நாடு; (சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ் அகராதி)

நாம் அகற்றி விடுகிறோம். 'நன்கு பயின்று' என்பதை நீக்கி அவ்விடத்தில் 'ஓதாதுணர்ந்தவராகி' என்பதைச் சேர்க்கிறோம். இம்மாற்றஞ் செய்யப்பெறின் பரந்தாமனாரவர்கள் கூற்று உண்மையாம்.

''பாடுபட்டுப் படித்தவர்களே அறிவில் பீடு பெறுவர் என்பது பேருண்மை'' எனப்பரந்தாமனார் கூறுவது பேருண்மையே. உலகியலில் இது மறுக்க முடியாத உண்மையாகும். நாமும் மறுக்கவில்லை. மறுத்தால் எம்மைப் போன்ற குறையுடையோர் வேறு யாரும் இரார். எம்மையாளுடைய பெருமான் இராமலிங்க அடிகளே இதனை மறுக்கமாட்டார்கள். ஆனால் இப்பேருண்மை அருளியலுக்குப் பொருந்தாது. அருளியலில் பாடுபட்டுப் படிக்க வேண்டியதில்லையா? என்று வினவலாம். பாடுபட்டுப் படித்தல் அவரவர் தரத்தைப் பொறுத்தது. வள்ளற் பெருமானும், பெருமானை ஒத்த தரத்தினரும் பாடு பட்டுப் படிக்கவேண்டியதில்லை கணநேரட்டஞ் செய்வதே போதும என்று முன்னரே கூறினேம். இந்தத் தரத்திலுள்ளவர்கள் இலக்கண இலக்கியங்களையும் சமய சாத்திரங்களையும் மருத்துவத்தையும் படிப்பது அவ்விலக்கண விலக்கிய சமய சாத்திர மருத்துவ ஆசிரியர்கள் அவ்வவாகளாற் செய்யப்பட்ட நூல்களைப் படிப்பதுபோலாம தம்மாற் செய்யப்பட்ட தொலகாப்பியததை மீணடும் ஒருமுறை படித்துப் பாாப்பதற்குத் தொல்காப்பியர் என்ன பாடுபட்டிருப்பாரோ அந்தப் பாடுதான வளளற பெருமான் தொலகாப்பியம்படிப்பதற் குட்பட்டிருப்பார்.

வள்ளற் பெருமானை ஓதாதுணர்ந்தவர் என்போர் இலக்கணமறியாதார் என்று கூறும் பரந்தாமனாரவர்கள்,

> ''இப்படிக் கூறுவது அறியாதார் கூற்று; இலக்கணமே கல்லாதார் கூற்று;...........திருவருட்பாவை யாப்பிலக்கண அறிவோடு படியாதவரே இப்படிக் கூறுகின்றனர் என்பது தெளிவு.''

என்றெழுதுகின்றார். வள்ளற் பெருமானை ஓதாதுணர்ந்தவர் என்று கூறும் எல்லாருமே அறியாதார் அல்லர், இலக்கணங்கல்லாதாரல்லர். திருவருட்பாவை யாப்பிலக்கண அறிவோடு படியாதவரல்லர். இலக்கணங்கற்ற, திருவருட்பாவை யாப்பிலக்கண அறிவோடு படித்த, படித்தது மட்டுமன்றி அதனைத் தொகுத்துப் பதிப்பித்த தொழுவூர் வேலாயுத முதலியாரவர்கள் வள்ளற்பெருமானை ஓதாதுணர்ந்தவர் எனக் கூறுகின்றார்கள். தொ. வே. அவர்கள் இலக்கண இலக்கிய அறிவில் பரந்தாமனார்க்குச் சற்றும் குறைந்தவரல்லர். வள்ளற் பெருமானை ஓதாதுணர்ந்தவரெனக் கூறும் யாமும் சிறிது இலக்கணங்கற்றவரென்றும் திருவருட்பாவை யாப்பிலக்கண அறிவோடு படித்தவரென்றும் தம்மை அறியாதார் மாட்டுக்காட்ட வேண்டியிருத்தலின் அதனையும் ஈண்டுக் குறிக்கின்றோம். வரலாறெழுதியோர் ஓதாதுணர்ந்தவரென்று 'கதை அளந்து விட்டார்' என்று பரந்தாமனாரவர்கள் எழுதுகின்றனர். தற்போது நூல் வடிவிலும் செவி வாயிலாகவும் வழங்கும் வரலாறுகளில் கதை அளக்கப்பட்டன, சில உண்டு. ஆனால் ஓதாதுணர்ந்தாரென்பது 'கதையும்' அன்று 'அளப்பும்' அன்று உண்மை உண்மை உண்மை.

இதுகாறும் கூறப்பட்டவற்றால்,

1. வள்ளற்பெருமான் எப்பள்ளியிலும் பயிலவில்லை,
2. எவ்வாசிரியரிடத்திலும் பயிலவில்லை.
3. கல்விகேள்விகளை இறைவனிடமே பெற்றார்.

4. வள்ளற்பெருமான் பிறவி ஞானி.
5. ஓதாதுணர்ந்தவர்.
6. ஒன்பதாம் வயதிலேயே பாடத்தொடங்கிய பெருமானுர் யாப்பிலக்கணங் கற்றுப் பாடவில்லை. அருளாற்றலால் ஓதாதுணர்ந்தே பாடினுர்.
7. நூல்களைப் பதிப்பித்த காலத்தும், பாடஞ் சொன்ன காலத்தும் உரையெழுதிய காலத்தும் அதற்கு வேண்டிய நூல்களைப் பார்வையிட்டார். இவ்வொன்றுபற்றியே பெருமானைப் பாடுபட்டுப் படித்தவராகக் கூறுவது பொருந்தாது.

என்பன பெறப்பட்டன. எனவே வள்ளலார் இராமலிங்க அடிகள் ஓதாதுணர்ந்தவரே எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேம்.*

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே.

* சென்னை லைப் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷனில் எழுத்தராகப் பணி செய்யும் திரு. சேதுராமன் என்பார் திருக்கோயில்களிலும், வீடுகளில் தெய்வ சந்நிதிகளிலும் பாடுகின்றனர். இவரது பாடல்கள் 'அருட்புகழ்' எனப் பெரிடப்பட்டு செந்தமிழ்ச் செல்வி இதழிலும், தனிச் சிறு நூலாகவும் வெளிவந்துள்ளன. அருட்கவி சேதுராமனுர் என்று இவர் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர். யாப்பிலக்கணம் படிக்காத இவ்விளைஞர் பாடல்கள் யாப்பிலக்கண வழுவின்றி அமைந்துள்ளன. சதபங்கி போன்றவற்றையும் பாடியுள்ளார். இலக்கண இலக்கியங் கற்ற பெரும புலவர்கள் இவர் பாடல்களுக்கு உரை எழுதுகின்றனர். இவர் யாப்பிலக்கணத்தைப் படித்துப் பாடப் புகவில்லை. மனப்பாடம் செய்துள்ள பாடல்களை ஒப்புவிப்பது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதாக இவர் பாடுகிருர். இவரது அன்னுர் உடனுக்குடன் பாடல்களை எழுதிக்கொள்கிருர். இவர் பாடுவது ஓதி உணர்ந்தா? ஓதாதுணர்ந்தா? ஆராய்க.

இராமலிங்கா பணிமன்ற முத்திங்களிதழ்,

வள்ளல் இராமலிங்க அடிகளார் ஓதாது உணர்ந்தவரா?

பைந்தமிழ்ப் பாவலர் அ. கி. பரந்தாமனார், எம்.ஏ.,

வள்ளல் பெருமான் ஓதாது உணர்ந்தவர் என்று இன்றும் பலர் இந்நாட்டில் கருதி வருகின்றனர். இவரை மட்டும் அல்லாமல் நாயன்மார்களையும் ஆழ்வார்களையும் கம்பரையும் தேசியக் கவிஞர் பாரதியாரையும் இப்படியே பலர் நினைத்து வருகிறார்கள்; எழுதியும் வருகிறார்கள்; மேடையில் பேசியும் வருகிறார்கள்; இவர்கள் எல்லாரும் அருள் பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை; கருவிலே அமைந்த திருவுடையவர்கள் என்பதிலும் மாறுபட்ட கருத்தும் இல்லை. அருளினாலேயே இவர்கள் எல்லாரும் பாடத் தொடங்கி விட்டார்கள் என்பதிலே தான் உண்மை இல்லை.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் யாப்பிலக்கணம் படித்தே பாடியுள்ளார்கள் என்பதை யாப்பு இலக்கணம் நன்கறிந்த புலவர்கள் நன்குணர்வார்கள்.

கீர்த்தி ஆங்கிலக் கவிஞன் மில்டனைப்போல முத்தமிழையும் யாப்பிலக்கணத்தையும் நன்கு கற்ற பெருங் கவிஞர், பாரதியாரும் எட்டயபுரத்திலிருந்த தமிழ்ப் புலவரிடம் போதிய அளவு இலக்கணம் கற்றார் என்று அவர் தோழராகிய பசுமலை டாக்டர் ச. சோ. பாரதியார் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

யாப்பிலக்கணம் நன்கு அறிந்தவர்கள் பாரதியார் பாக்களைப் படிக்கும்போது இவ்வுண்மையை நன்கு அறியலாம். பாரதியார் சித்தர் பாடல்களையும் இராமலிங்கர் பாடல்களையும் சிந்து, நொண்டிச் சிந்து பாடல்களையும் நன்கு படித்து அப்பாடல்களைப் பின்பற்றிப் பாடல்கள் இயற்றியிருக்கக் காணலாம். ஆசிரியப்பா, வெண்பா, தரவு கொச்சகப்பா, அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம் முதலிய பாக்களை யாப்பிலக்கண வழுவின்றிப் பாடியிருக்கப் பார்க்கிறோம். மேலும் அவர் இசைப்பாக்கள் இயற்றவும் பயின்று பலப்பல இசைப்பாக்களை நலமுற இயற்றியிருப்பதைக் காணலாம்.

முன் குறிப்பிட்டவர்களைப் போலவே வள்ளலாரும் யாப்பிலக்கணத்தை மிகமிக அழுத்தமாகப் படித்துப் பாவகைகளையும் பாவின வகைகளையும் இயற்றப் பயின்றிருப்பதோடு இக்காலத்துக்கேற்ற இசைப் பாக்களையும் இயற்றத் திறமை பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

அடிகளார் பாவகையிலும், பாவின வகையிலும் ஏறக்குறைய 4723 பாக்களை இயற்றியுள்ளார். இவ்வளவு பாடல்களையும் திருவருள் துணையினால் மட்டும் பாடிவிடவில்லை; யாப்பிலக்கணம் அறிந்த புலமையோடு தான் பாடியுள்ளார். திருவருட்பா உரைநடைப் பகுதியில் (அருட்பெருஞ்சோதி அச்சகப் பதிப்பு-வசன பாகம்)

''இதுபோல் வியாகரணம்-தொல்காப்பியம்-பாணினீயம் முதலியவைகளில் சொல்லியிருக்கின்ற இலக்கணங்கள் முழுவதும் குற்றமே. அவைகளில் குற்றமே சொல்லியிருக்கிறார்கள். எவ்வாறெனில் தொண்ணூறு தொள்ளாயிரம் என்கிற கணிதத்தின் உண்மை நான் சொன்ன பிறகு தெரிந்து கொண்டீர்களல்லவா?''

''தொல்+நூறு தொண்ணூறென்றும். தொல்-ஆயிரம் தொள்ளாயிரம் என்றும் வழங்குகின்றன. தொல் என்பது ஒன்று குறையத் தொக்கியது. தொன்மை தொல் எனப் பிரிந்து, வழக்கத்தில் தொள்ளாயிரம் தொண்ணூறு என மருவியது. இதற்குப் பத்திடத்திற்கு ஓரிடம் குறைந்த முன் ஆயிரம் என்றும், ஒன்று குறைந்த பத்து என்றும் ஒருவாறு கொள்க. இப்படி நான் சொன்னதுபோல் சொன்னால் சிறு குழந்தைகள்கூட அறிந்து கொள்ளும்.''

என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்க்கும்போது வள்ளல் பெருமான் சமய சாத்திரங்களைக் கற்றிருப்பதோடு பழந் தமிழிலக்கணமாகிய தொல்காப்பியத்தையும் வட

மொழியின் பண்டை இலக்கணமாகிய பாணினீயத்தையும் அறிந்திருந்தார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி என விளங்கவில்லையா? இவர் தொல்காப்பியத்தைக் கற்றதோடு நில்லாமல் தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவற்றைச் சிந்தித்து இப்படித்தான் அவற்றிற்குப் பொருளிருக்க வேண்டுமென்றும் அறுதியிட்டு உறுதியோடும் விளக்கியிருக்கவும் காண்கிறோம்

இக்கருத்தை இன்று முப்பதாண்டுகளாக மொழிநூல் வல்லுநர்கள் கூறிவருகிறார்கள். ஆனால், நம் வள்ளல் பெருமான் 80 ஆண்டுகளுக்கு முன்னரே இக்கருத்தை வெளியிட்டிருப்பது வியப்பிலும் வியப்பாகும் என்று சொல்லவும் வேண்டுமோ?

உண்மையில் தொண்ணூறுக்கும் தொள்ளாயிரத்துக்கும் தொல்காப்பியர் கூறியிருக்கும் இலக்கணம் பொருத்தமாயில்லை என்று அறிகிறோம். இவற்றிற்கு நன்னூலாரும் தொல்காப்பியர் கூறிய கருத்தையே கூறித் தவறி விட்டார். இன்று ஒன்பது என்பதும், தொண்ணூறு என்பதும் தொள்ளாயிரம் என்பதும் தமிழில் நெடுங்காலமாகத் தவறாகவே வழங்கப்பட்டு வந்துள்ளன. சரியாகப் பார்த்தால் ஒன்பது என்பதற்கு 90 என்றும், தொண்ணூறுக்கு 900 என்றும், தொள்ளாயிரத்துக்கு 9000 என்றும் இருக்கவேண்டும். இன்று ஒன்பதை 9க்குச் சரியாகவும் தொண்ணூறை 90க்குச் சரியாகவும் தொள்ளாயிரத்தை 900க்குச் சரியாகவும் கருதி வருகிறோம். தொண்டு என்னும்சொல், 9க்குப் பழங்காலத்தில் வழங்கி வந்தது. மூன்றாவது பரிபாடல் "ஆறென ஏழென, எட்டெனத் தொண்டென" ஒன்பதைக் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம். 'உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம் போல், தொண்டாயிரவர் தொகுபவே" என்னும் நாலடியாரின் வெண்பா அடிகளில் 9000 என்பதைத் தொண்டாயிரம் என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். தொல்காப்பியர் கூறிய தவற்றை உணர்ந்து ஒரு பத்துக் குறைந்த நூறு என்றும் ஒரு நூறு குறைந்த ஆயிரம் என்றும் முறையே தொண்ணூறுக்கும் தொள்ளாயிரத்துக்கும் பொருள் கூறியுள்ளார் வள்ளலார். இப்படிச் சொல்லக்கூடிய அளவு தொல்காப்பிய இலக்கணத்தை வள்ளலார் கற்றுச் சிந்தித்திருக்கிறார், இது மட்டுமா? இல்லை, இல்லை அகத்திணை இலக்கணத்தை நன்கறிந்து பெரும் புலமையுடன் இங்கித மாலை என்னும் நூலை அடிகளார் இயற்றியுள்ளார்.

இப்படி இலக்கிய இலக்கணங்களையும் சமய சாத்திரங்களையும் கரைகண்டு 4723 பாக்களையும் கவிதைச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியிருக்கும் இராமலிங்க அடிகளாரை இலக்கணமே அறியாத பாமர மக்களைப்போலப் பலர் அவரை ஓதாது உணர்ந்தவர் என்பது எப்படிப் பொருத்தமாகும்? இப்படிக் கூறுவது அறியாதார் கூற்று: இலக்கணமே கல்லாதார் கூற்று.

வள்ளலார் தமையனார் சென்னையில் வாழ்ந்து வந்தவர்; தமிழ்ப் புலமை மிக்கவர். அவரே இராமலிங்கருக்குத் தொடக்கக் கல்வி கற்பித்தார். பின்பு தமையனார் இராமலிங்கரைத் தம் ஆசிரியரான காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயிலுமாறு அனுப்பி வைத்தார். இராமலிங்கர் ஆசிரியர் பாடஞ் சொல்லுவதைக் கவனிக்காமல் கந்தப் பெருமான் மீது பாடல் இயற்றுவதில் கருத்தைச் செலுத்தி வந்தார் என்று இராமலிங்கர் வரலாற்றை எழுதியவர் கூறியுள்ளார். ஒரு சிலர் பாடஞ் சொல்வதைக் கவனிக்காமல் இருப்பதுபோலத் தோன்றுமே ஒழிய வேறு இல்லை. ஆனால், ஆசிரியர் சொல்வதைக் கவனிக்காமலிருப்பது போலத் தோன்றுமே ஒழியக் கற்றுக் கொள்ளாமலிருப்பதில்லை. இப்படியே விவேகானந்தரைப்பற்றியும் குறை கூறுவதுண்டு. ஆசிரியரை விட்டதும் இராமலிங்கரே படித்துக்கொண்ட நூல்கள் பல உண்டு. அறிவுள்ள மாணாக்கர்கள் எல்லா நூல்களையும் ஒன்று விடாமல் ஆசிரியரிடமே கற்கவேண்டுவதில்லை. இப்படி எல்லா நூல்களையும் ஒன்று விடாமல் ஆசிரியரிடம் கற்பவர் கடைமாணாக்கர் என்பதில் ஐயமில்லை. இராமலிங்கர் கடைமாணாக்கராக விளங்கவில்லை; கருவிலமைந்த திருவோடு முதல் மாணாக்கரினும் முதல் மாணாக்கராய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும். இவர் வரலாற்றை எழுதியவர் தலை மாணாக்கர் தன்மையை உணராது கதை அளந்துவிட்டார். அதை நம்பிய பலர் இராமலிங்கரை ஓதாது உணர்ந்தவர் என்று கூறலாயினர். திருவருட்பாவை யாப்பிலக்கண அறிவோடு படியாதவரே இப்படிக் கூறுகின்றனர் என்பது தெளிவு. உண்மையில் வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் மிகப்பாடுபட்டு இலக்கிய இலக்கணங்களையும் சமயசாத்திரங்களையும் மருத்துவத்தையும் நன்கு பயின்று சிந்தனைச் செல்வராய் நுண்மாண் நுழைபுலம் மிக்கவராய்த் திருவருள் பெற்றவராய் இலங்கியவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பாடுபட்டுப் படித்தவர்களே அறிவில் பீடு பெறுவர் என்பது பேருண்மை.

—பத்ம ஜோதி 1-4-1968

முறையாகப் படிக்காமலேயே முழுஞானம் வாய்க்கும் முறை

கி. இராமலிங்கனார், எம். ஏ.

ஆசிரியரிடம் அமர்ந்து நூல்களை அவரிடம் பாடங்கேட்ட பின்பே அறிவைப் பெறவேண்டும் என்பது பொதுவான கருத்து. ஒரே ஆசிரியரிடம், ஒரே வகுப்பில் ஒரே பாடத்தைப் படிக்கும் பல மாணவர்களும் ஒரே வகையான அறிவைப் பெற்று விடுவதில்லை என்னும் உண்மையை நாம் நன்கு அறிவோம்.

"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்பது பொய்யாமொழி. இப்பிறவிக்கு முன்னைய பிறவிகளில் ஒருவர் படித்துப்பெற்ற அறிவுத்திட்பம், இப் பிறவியில் அவர்க்கு உறுதுணையாக நின்று, ஆசிரியர் ஒரு பொருளைப் பாடஞ் சொல்லும்போதே, அதைச் சார்ந்த பிற பொருள்களையும் உய்த்துணரும் திறமை அவரிடம் விளங்குவதை எத்தனையோபேரிடத்தில் காண்கிறோம். எனவே முன்னைப் பிறவிகளில் செய்த அறிவு திரட்டும் வினை இந்தப் பிறவியில் முறையாகப் படிக்காமலேயே அறிவு வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பாக அமைகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

அறிவு என்பது உயிருடன் இயற்கையிலேயே பொருந்தியிருப்பது. அதனை வெளிக் காணவொட்டாமல் தடுப்பது ஒன்று உண்டு என்பதைப் பேரறிஞர்கள் அறிந்து கூறுகிறார்கள். அத்தடுக்கும் பொருளை 'ஆணவம்' என்கிறார்கள். இவ்வாணவம் உயிருக்குக் கவசமிட்டதுபோல் அதனைக் கவ்விக் கொண்டிருக்கிறது. இதனை அப்புறப்படுத்தினால் அறிவு தானாக விளங்கும்: ஆணவத்தை அப்புறப்படுத்துகின்ற வேலையையே நூல் படிப்பு, கேள்வி ஞானம் இவை செய்கின்றன.

'கல்வி' என்னும் சொல்லே, கல்லி யெடுப்பது, அதாவது தோண்டியெடுப்பது என்னும் பொருளில்தான் இருக்கிறது என்பதை யாவரும் அறிவர். ஆணவத்தை உயிரினது அறிவின் மீதிருந்து தோண்டியெடுப்பதே கல்வி கற்பதாகும். ஆங்கிலச் சொல் 'Education' என்பதற்கும் இதே பொருள் இருப்பது நமக்குத் தெரியும 'Educate' என்பதற்கு 'To draw out' என்பது பொருள் அழுந்திக் கிடக்கும் அறிவை வெளியே இழுப்பதே கல்வி செய்யும் வேலை எதில் அழுந்திக் கிடக்கின்றது என்ற கேள்விக்கு, 'அறியாமையில்', 'ஆணவத்தில்' என்னும் விடைகள் இயல்பாகவே கிடைத்துவிடும்.

ஆணவத்தை அப்புறப்படுத்தி அறிவை வெளிக் கொணரும் வேலையைக் கல்வி செய்வது ஓர் அளவே யாகும். நூல் படிப்பு இல்லாமலேயேகூட முழு அறிவும ஒளி வீசுமாறு செய்வதற்கு வேறு ஒருமுறை இருக்கின்றது என்கிறார் வள்ளற் பெருமான். மற்ற முழு ஞானியரும் அவர் சொல்லியதையே சொல்கின்றனர். ஆறு அந்தங்களைப்பற்றி வள்ளலார் கூறுவதை,

அவர்களது ஞானப் பாடல்களைப் படித்த எவரும் அறிவர். 'ஷடாந்தம்' என்னும் வட சொல்லால் அந்த ஆறு முடிவுகளையும் சொல்லுகிறார் பெருமான்.

அவை யாவன :

1. யோகாந்தம்
2. கலாந்தம்
3. நாதாந்தம்
4. போதாந்தம்
5. வேதாந்தம்
6. சித்தாந்தம்

இனி இவற்றின் பொருளை ஒரு சிறிது ஆராய்வோம். 'யோகம்' என்னும் சொல்லுக்குப் 'பொருந்துதல்', 'ஒன்றுதல்' என்று பொருள். ஐம்புலன்கள் மனத்தோடு ஒன்றி, மனம் அறிவோடு ஒன்றுவது ஐம்புலன்களாலும், மனத்தாலும் நாம் பெற முடியாத ஞானத்தை, மனத்தை யிழந்து, அறிவு நிலையில் நிற்கும்போது, உயிர் பெறுகிறது என்பது பேரறிஞர் பெருமக்கள் கைவரப் பெற்ற உண்மை. கல்வி கற்பது, படிப்பது, பாடங் கேட்பது, ஓதுவது, என்பவெல்லாம் ஐம்புலன்களாலும், மனத்தாலும் நிகழும் நிகழ்ச்சிகள். ஆனால் பாடங் கேளாத நிலையிலே, ஓதாத நிலையிலே, ஞானம் வாய்ப்பது, ஒன்றுவதால், யோகத்தால் கிட்டும் அரிய செயல்.

யோகம் முதிர முதிர, 'கலை' அதாவது அறிவு, தானாகவே வெளிப்படுகிறது. இது இயற்கையின் பண்பு. கலை வெளிப்பட்டு முதிரும் செயலே கலாந்தத்தில் நிகழ்வது. கலை இரண்டு பிரிவுகளாக வெளிப்படுகிறது என்கின்றனர். 'விஞ்ஞானக் கலை', 'மெய்ஞ்ஞானக் கலை' என்னும் இரண்டுமே முகிழ்த்து வளரும் இடம் யோகத்தின் பயனாய்க் கிட்டும் கலாந்த நிலையாகும். எவ்வகைப்பட்ட உலகியல் அறிவையும் இந்நிலையில் ஓதாமலேயே பெற்று விட முடியும். உலகியல் அறிவை ஒதுக்கிவிட்டு, மெய்ஞ்ஞானத்தில் நாட்டம் செலுத்தினால், அது முழுமையுற்று அடுத்துள்ள நாதாந்த நிலைக்கு உயிரைத் தானே கொண்டு செல்கிறது. மேலுள்ள போதாந்தம், முதலிய பற்றி இங்கு இப்போது விளக்கத் தேவையில்லை.

விஞ்ஞானத்தில் தலைசிறந்தவர்கள் மனத்தின் ஒருமைப்பாட்டாலேயே அங்ஙனம் சிறந்தவர்கள் ஆனார்கள் என்பதை ஒப்புக்கொள்வோம். சிறந்த சிற்பி, ஒன்றிய ஓவியர், பிற எவரானாலும் உள்ளம் எவ்வளவு ஒன்றப் பெறுகின்றாரோ அவ்வளவுக்கவ்வளவே அவர் சிறந்து விளங்குகிறார். எனவே சுருங்கக் கூறின் நுண்ணறிவும் ஆற்றலும் பெறுவதற்கு ஓதுவது என்பது கட்டாயம் இருந்தாக வேண்டிய செயல் அல்ல. ஓதாமலேயும் யோகநிலையில் நின்று வளர்ந்து, கலைகளை யெல்லாம் உணர்ந்துவிடக் கூடும். வள்ளற் பெருமானின் இக் கருத்தினை என் மேதகு ஆசிரியப் பெருந்தகையார் திரு வி. க. அவர்கள் தமது 'இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்' என்னும் அரிய நூலில் அழகாக விளக்குவதைக் காண்க.

—பத்மஜோதி 16-4-68.

வள்ளலார் ஓதாது உணர்ந்தவரே!

துறவி கந்தசுவாமி

பைந்தமிழ்ப்பாவலர் அ. கி. பரந்தாமனார் எம். ஏ. அவர்கள் வள்ளலார் ஓதாது உணர்ந்தவரல்ல என்பதை விளக்கி, பத்மஜோதிக்களித்த கட்டுரையில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அவற்றின் சுருக்கமும், வள்ளலார் ஓதாது உணர்ந்தவர் என்பதின் விளக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. வாசகர்கள் ஊன்றி வாசித்து உண்மையறி வார்களாக.

வள்ளலார் ஓதாது உணர்ந்ததாகப் பலர் எண்ணுகின்றனர். ஏட்டில் எழுதுகின்றனர், கூட்டத்தில் கூறுகின்றனர் இப்படிக் கூறுவது இலக்கணம் அறியாதார் கூற்று. இலக்கணம் கல்லாதார் கூற்று, திருவருட்பாவை யாப்பு இலக்கண அறிவோடு பயிலாதாரின் பகட்டு என்று கூறுகிறார் பரந்தாமனார்.

மரபறியாதவர் பணம் பேச வந்தது போன்று, அருளாளர்களின் திறம், ஞானவான்களின் தன்மை ஓதாது உணர்வதின் உண்மை இவைகளை அறியாதோரே முன் கூறியபடி அறிவிப்பர். ''அருள் பெறில் துரும்பும் ஓர் ஐந்தொழில் புரியும்'' என்ற வள்ளலாரின் பறையறையை, நாம் அறிவுரையாக ஏற்றால், வள்ளலார் கற்றுத் தெளிந்தார் என்ற நமது அறியாக் குறையை அகற்றிக் கொள்ளலாம் ''அருள்'' என்பது மறைப்பைத் தவிர்ப்பது, ஒன்றுக்கும் மற்றொன்றிற்கும் இடையில் உள்ள தடையை தகர்ப்பது. அண்டத்திலும் பிண்டத்திலும் ஆழ்ந்து ஒளிந்து கிடப்பவற்றைக் கண்டமாக தெளிய வைப்பது இன்று இப்போது மட்டுமல்ல. ஏழேழு பிறவிகளிலும் ஊழூழி காலம்வரை உள்ளவற்றையும் தெள்ளத் தெரிவிப்பது என்றால் இந்த அருளைப் பெற்றவர்கள் ஓதாது ஏன் உணரமாட்டார்கள். ஊனம் ஒழிந்து, அஞ்ஞானமகன்று ஞானக் கண்கொண்டு பார்ப்பின் இவை நன்கு புலப்படும் இந்த அருளை 5 மாதக் குழவியிலேயே தில்லையில் ஆடலரசன் அருட்பாடம் கற்பித்து, பட்டப்பகல்போல அனைத்தையும் வெட்டவெளியாகக் காட்டினான் என்பதை ''தாய் முதலாரோடு'' என்ற பாடலில் நமக்குச் சுட்டி காட்டுகிறார் வள்ளலார்.

தொல்காப்பியம் வியாகரணம், பாணினீயம் முதலான இலக்கணங்கள். தொண்ணூறு தொள்ளாயிரம் என்னும் கணித உண்மையை மறைத்துக் கூறுகிறது என்று எடுத்துக்காட்டியுள்ளார். அதாவது தொல் என்பது ஒன்று குறையத் தொக்கியது தொன்மை தொல் எனப் பிரிந்தது இதன்படி. தொல் என்பது பத்திடத்திற்கு ஒன்று குறைந்த ஒன்பது, அதாவது தொண்ணூறு தொண்ணூறு என்பது ஒன்பது நூறு. தொள்ளாயிரம் என்பது ஒன்பது ஆயிரம். இதுதான இலக்கண கணிதவரன் முறை. மேற்கூறிய இலக்கணங்களில் ஒன்பது நூறைத் தொண்ணூறென்றும், ஒன்பதுஆயிரத்தை ஒன்பது நூறென்றும (தொள்ளாயிரம்) கூறியுள்ளதென்று விளக்கியுள்ளார வள்ளலார் வள்ளலார் இவ்விளக்கம் தந்தமையால், தொல்காப்பியம் முதலான இலக்கணம் கற்றுத் தெளிந்தவர் என்று கூறுகின்றார் பரந்தாமனார். நம் போன்ற சிற்றறிவு உள்ளவர்களே ஒரு நூலைப் பயின்று அதன் நுண்பொருளைக் கூற முடியும். பேரறிவு அருளறிவு, உண்மையறிவு, ஞான அறிவு படைத்தவர்கள், தங்களது திருநோக்கால் அண்ட பிண்ட நுணுக்கங்களை அறிந்து கூறும் ஆற்றலுண்டு இவ்வாற்றலைப் பெற்றவர்களில் இராமலிங்க வள்ளலார் முதலிடம் பெற்றவராவர் மின்சாரம் தோன்றுவதற்கு முன்னே நீரால் விளக்கெரித்து, நீரில் நெருப்பு இருக்கிறதென்றும், ரஷியர், அமெரிக்கா சந்திரமண்டலம் செல்லு முன்னே, வெண்ணிலவு மண்டலத்தில் யான் வீற்றிருக்க வேண்டும் என்றும்; நமக்குத் தெரியும் ஓருலகம் நாம் அறியும் ஈருலகம தவிர 2008 உலகங்கள் இருப்பதாகவும், மணவனை ஏற்று அவரோடு மனங்கலவாத துறவெய்தியும், கருக்குழியில் நாம் உருவாகும் தன்மையையும், கடவுள் நம்மை காப்பாற்றும் உண்மையையும், நம் உயிர் அண்டங்களில் உலாவும் விதத்தையும், தந்தையிடத்தில் வந்து தங்கும் காலத்தை

யும், தாயிடத்தில் தங்கும் கோரத்தையும், உடலை விட்டு உயிர் பிரிந்தால் அது உலாவும் உண்மையையும் ஐயந்திரிபின்றி அறிந்துரைக்கும்போது, சாதாரண ஏட்டிலிருப்பதை ஒருவர் காட்டித்தான் தெரிந்துகொள்ளவேண்டுமா? என்பதை எண்ணில எளிதில் புலனாகும்.

மேலும் அகத்திணையை அறிந்தே இங்கிதமாலையை சுவை நனி சொட்டச் சமைத்துள்ளார். அண்ணன் சபாபதி ஆரம்பக்கல்வி போதித்துள்ளார காஞ்சிபுரம் மகாவித்வான சபாபதி முதலியாரிடம் கல்வி பயின்றுள்ளார். சமயசாத்திரங்களையும் கற்றுக்கரைகண்டிட்டு சுவை நனி சொட்ட 4723 பாடல்களைப் பாடியுள்ளார். இப்படியிருக்க இவரை எப்படி ஓதாதுணர்ந்தவர் என்று கூறுவது என்றும் கூறுகிறார் பரந்தாமனர்.

அருள் சுரப்பால் அகத்திணையும் சமய சாத்திரங்களையும் அறிந்துரைககலாம் என்பதை முன்னர் கூறினோம். அண்ணன சபாபதியிடமோ, காஞ்சிபுரம் மகாவிதவான சபாபதி முதலியாரிடமோ தான் கல்வி பயிலவல்லை. எல்லாவற்றையும தனககு இறைவனே உணர்த்தினன் எனறு வள்ளலாரே கூறும்போது, துறையில அடி நுனி தெரியாத நமககு ஏன் இந்த ஐயம்! ''ஓதாது உணர்ந்திட ஒளியளித தெனக்கே, ஆதாரமாகிய அருட்பெருஞ் ஜோதி'' என்றும், ''கல்வியெலாம் கற்பித்தாய நினபால் நேயம் காணவைததாய'' என்றும, ''கற்றதும் நினனிடத்தே. கேட்டதும் நின்னிடத்தே'' எனற பல பாககளாலும் தான் ஓதாது உணர்ந்ததை வலியுறுத்தியதோடு, நாமும் ஓதாது உணரலாம என்று அதற்கொரு தந்திரமும் சொலலுகிறா வள்ளலா. அத்தநதிரமாவது. ''பத்து ஆள சுமை ஒரு வண்டி பாரம, இருபது வண்டி பாரம் ஒருசூல் வணடி பாரம இதுபோனற ஆயிரமாயிரம் சூல வண்டி நிறைந்த நூல்களை, ஒருவன ஆயிரமாயிரம் பிறவியெடுததாலும படிதது முடிகக இயலாது இதனை சுத்த சிவ அருள் நோக்கால் படிககத் தொடங்கில் கண நேரத்தில் படித்துவிடலாம்'' என்று கூறுகிறார். இப்போது நாம் கற்பதை விட்டு, அருள் நோக்கம் பெற முயலுவது அவசியமாகினறது! தனககு இளமையிலேயே அந்த அருள் நோக்கம் கிட்டிற்று என்பதை, ''இனித்த சுகம் அறிந்துகொளா இளம்பருவந்தனிலே மகிழ்ந்து வந்து மாலையிட்டார்'' என்றும் பலப்பல பாக்களால் பட்டப்பகல் போலத தெரிவிப்பதோடு, உரை நடை ஒன்றிலும ' இறைவன் தன்னை இளம்பருவத்திலே ஆசிரியர் இனறியே கல்வி பயிற்றுவித்தான்'' எனறு கூறுவதிலிருந்து, நமக்கு ஏற்பட்ட இம்மயக்கததைத் தயக்கமில்லாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் வள்ளல் பெருமானது அணுக்கத் தொண்டாகளில் முதல் தொண்டரான அல்லது முதல் மாணாக்கரான உபய கலாநிதிப் பெரும்புலவர் என்று வள்ளற் பெருமானே வழங்கிய பெயரையுடைய தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்கள் ''வள்ளற் பெருமான் ஓதாதுணர்ந்தவர்'' என்று குறிப்பிடும் பாடலை கீழே கண்டு தெளிக. முதல் மாணவர் கூறுவது முழுதும் உண்மையென்று சொல்லலாமல்லவா? இதோ பாடலைக் கவனி! கவனித்து சிந்தனை செய்!! சிந்தித்துதெளி!!! தெளிந்து அமைதியுறு !!!!

மீதானத் துயாபள்ளி மேவ எமை வைக்கும் எங்கள்
மேதாவைப் பள்ளிவிழைந் தருளிற் றென்றுரைப்ப தெவன்
ஓதாமே எமையெல்லாம் உணர்த்தும் உருவெளியை அச்சோ
ஓதாமே உணாந்த தென்பார் உ ணாகிலார் ஒருவியப்போ.

--அருட்சுடர் 15-4-68.

திருவருட்பா

'சேலங் கிழான்'

திரு+அருள்+பா - 'தெய்வத்தின் அருளை - கடாட்சத்தைப் பெறப்பாடிய - அல்லது பெற்றுப்பாடிய - பக்திச்சுவை கனிந்த பாடல்களின் தொகுப்பு நூல்' என்று விரிந்து பொருள் படும் தலைப்பு இங்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது. 27-4-68 முதல் 4-5-68 முடிய உள்ள ஏழு நாட்களிலேயும் சென்னை மல்லீசுவரன் திருக்கோயிலின் அனுபூதி மண்டபத்திலே நிகழ்ந்த 'திருவருட்பா திருநாளில்' உருவாகியிருக்கும் ஒரு அற்புதச் சேம நிதியமாகி, பிறவிப் பிணி நீக்கவல்ல அருமருந்தினை மீண்டும் ஒருமுறை நினைவு கூறும்படி நம் இளைஞரும், பின் சந்ததியார்களும் போற்றிப் பயன் கொள்ளத் தக்கவாறு - யானறிந்த அளவு எழுதி மனநிறைவு பெறும் பொருட்டேயாம். இங்ஙனம் எழுதத் தூண்டிய திருவருளுக்கு முதற்கண் அஞ்சலி செய்வோம்.

அடிகளார் இராமலிங்க சுவாமிகள் வாழ்ந்திருந்த காலத்திலே அவர்களது இளம்பருவப் பேரருள் தெய்வநலம் கனிந்த திருப்பாடல்களை, வயதிலும் அனுபவத்திலேயும் மிக முதிர்ந்த மதுரை வேதாகம சுத்த சைவ சித்தாந்த சமயாசாரிய பீடமாய் விளங்கிய திருஞானசம்பந்த சுவாமிகளாதீனம் தவப்பெருந்திரு-சிதம்பர சுவாமிகளாலே திருநோக்குறப்பெற்று மனங் கசிந்து இளகித் தளுதளுத்த நிலையில் அவர்களால் பாராட்டிப் பாடியருளப்பெற்ற ''திருவருட்பா மகிமை'' என்ற மகுடமிட்டுக்கொள்ளக் கிடைத்த, ஓரமுத வெள்ளத்தின் ஓர் துங்சுவைச் சொட்டான நேரிசை வெண்பா இது:--

> 'தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல மாந்தர்கள்தம்
> உள்நீர் சிவம் விளங்க ஓங்குவிக்கும்---கண்மணியாம்
> நங்கள் இராமலிங்கன நல்லஅருட்பா முறையைத்
> துங்கமுற மாணத் தொழு.'

என்பதாம்.

ஓதாதுணர்ந்தவரும், சமரச சன்மார்க்க சங்கத்தாபன ஆசிரியரும், அருட்பெருஞ் சித்தரும் ஜீவகாருண்ய ஒழுக்கம் தழைத்து ஓங்க அவதரித்தருளிய தயாமூல தன்மரும், திருவருட்பிரகாச வள்ளலாருமாகிய வடலூர்ப் பெருமான் சிதம்பரம இராமலிங்க சுவாமிகளைப்பற்றி இக்காலத்தில் அறியாத மக்கள் எந்நாட்டிலும இலா என்றே கொள்ளலாம். இவ்வுண்மை எலலோராலும ஒப்ப முடிநததேயாம ஆயினும, சுவாமிகள் திருவாய் மலாந்தருளிய திருப்பாடல்களில் கருத்தூன்றி மனம நிறைந்து ஒருமையுளளததுடனே குறிப்பிட்ட சில பாடல்களையன்றிப் பெரும்பான்மையான அமுதப்பாடல்கள் பயிலப்பெறாமலே இருக்கின்றன. எண்ணிறந்த அந்தத் தண்டமிழின்பப் பாடல்கள் பரவாதிருப்பதற்குக் காரணம் அவ்வருமைப் பாடற்களஞ்சியமாம் பொக்கிஷத்

தினைப் பொதுமக்களும் பாமரமக்களும் வாங்கிப் பயின்று பழகிட வாய்க்காதிருந்ததேயாகும். என்றாலும், இப்போது நல்லறிஞர்கள் பல்லோர் திருக்கரங்களிலும் எளிதில் கிடைத்து உண்மைப் பொருள் உணர்ந்து பயன் நுகரும்படி பல திருவருட்பாப் பதிப்புக்கள் விதம் விதமான வகையிலே வெளியாக்கப்பெற்று வந்த வண்ணமிருக்கின்றன. அவற்றுக்குள்ளே, நுணுகி ஆய்ந்த பிழையற்ற. உயர்ந்த கருத்துக்களை எளிதிலே விளக்கக்கூடிய சிறந்த பதிப்பு நூல்கள் அமரர் ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற 12 நூல்கள் — தனித்தனிப் பதிப்புககளுடனும் மேனாட்டவர்க்கும் இதனருமை புலப்பட அவர்கள் ஆக்கிய ஆங்கில மொழிபெயர்ப்புப் பகுதியும் எளிதிலே கிடைக்கின்றன என்றால், இந்நாள் நாமனைவரும் செய்த புண்ணியத்தின் பலனேயாம் என்னலாம்.

அரிய பொருள் ஒன்று அவாவுடையவன் கையகப்படின், அதனை அவன், அனந்தம் எடுத்து எடுத்து, கூர்ந்து நோக்கி நோக்கி அதனாலாறும் இன்பப்பெருக்கினை நுகர்ந்து நுகர்ந்து ஆனந்தமடைதல் இயல்பு. அது பொன்னாயினுஞ் சரி, பொருளாயினும் சரி, புத்திரராயினும் சரி, என்னாயினும் சரியே. ஆவல் உடையார்கது அரியதொன்று சிரமேற்கொண்டு போற்றற் பாலதே. இன்ன பெருமைத்து நமது இராமலிங்க சுவாமிகள் அருளிய பாடற்பொக்கிஷமாகிய 'திருவருட்பா' என்னும் தெய்வீக நூல்

இந்நூலினை அனுபவிப்போர் எவரும் மேற்கூறிய உலகப் பெரும்பொருள்களுக்கு மேலாய் இதனைக் கொண்டு '--

'அளவாத பேரன்பு சொரிந்து அருளை விளைவித்துத்
தளவாரும் நகைக் கயற்கண் தையலிடங் கொண்ட பிரான்
வளமாரும் கழன்மலரோடு இரண்டறுத்து வாழ்விக்கும்
உளவாலே அருட்பா என்றொரு நாமம்பூண்டதுவே'

என்றபடி தமக்கு அரும்பெறல் முத்திப்பேறு இதனாலே எளிதில் கிட்டிற்று என்ற களிப்பில் தம்மை மறந்து களிவர் என்றால, அந்த நூலின இன்பத்தில திளைப்பார்கள் எனின், அந்நூற் பொருளாகிய பரம்பொருள தன்மையில ஆனந்த வாரிதியில் படிந்து, மெய் மறந்து, களிப்படைவாாகள். அத்தெய்வீகம பொருந்திய பிறப்பறுக்கும் அமுதச் சேமவைப்பாகிய 'திருவருட்பா' வைக கற்போருள்ளங் களிவிக்கும ஓர் அரிய - அற்புத ஞான சிந்தாமணி எனறே நவிலுவோம.'

நான்மறை என்னும (இருக்கு, யசுா, சாமம், அதாலவணம்) வடமொழி வேதங்கள் உலக முதல் நூல்களாகக் கருதப்படுகின்றன. ஆனால, அவ்வேத மனனத்தால சித்தம் உருகி அன்பராகும் தன்மை பெறுதல் அவற்றுள் யாண்டும இன்று. தமிழ் வேத மாகிய திருவாசகத்தை ஒருதரம் ஓதினாலே, ஓதுவோரும பக்கம் நின்று கேட்போரும், மெய்ம்மயிர்ப்பொடிக்க, கண்கள் நீர் வார, மனம நெக்குருகி நின்று கனிந்து அனை வோரும் திருவருளுக்கு அனபா ஆகுநர் அன்றி, மன்பதை உலகில் மற்றையர் இலரே எனறொரு தமிழ்ப் பெரியாா கூறிப்போந்தாா. இது மிகமிகப் பொருந்திய வாசகமே. இருதிற வேதங்களையும் சீர்தூக்கிப் பாா்த்து நேருற நிலை நாட்டிய முடிபுரை எனறே எவரும் போற்றி மேறகொளளுகின்றாாகள.

இங்ஙனம நிறையுரை கூறிய அபபெரியாா நமது இராமலிங்க சுவாமிகள் திருவருட் பனுவலகளைக காணும பேறு படைத்திருப்பாராயின, தமிழ்வேதமருளிய மணிவாசகப்பெருமான் முதலிய நாலவரையும்தனது மெய்யனுபவத்தால்-ஞான வடிவாலே- உணர்ந்து அவாகளின் தெய்வீக இயலபினை வியந்து -

'வாட்டமிலா மாணிக்கவாசக, நின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கிழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும பொல்லா விலங்கினமும மெய்ஞ்ஞான
நாட்டம் உறும் என்னில், நானடைதல் வியப்பன்றே'

என்று போற்றித் துதித்து மகிழ்ந்த நமதிராமலிங்கா பெற்றியை உயரிய மேல்நிலையில் வைத்துப் பாராட்டிக் கூறுதிரார் என்ற துணிவுண்டாகிறது.

ஆகவே தேவார திருவாசகங்களைக் காட்டிலும் சித்தம உருக்கும மிக்க எளிய நடையில் இனிய முறையில, பாமரரும் மனமிளகி நின்று அனுபவித்துப் பண்பட்டு வரும்படிப் பேரின்பம் பயப்பதாய்ச் சகல துறைகளிலும் சிறக்கப் பயின்று தேவாரம், தாயுமானர், திருமந்திரம இவற்றினுட் கிடக்கைகளையெல்லாம் செம்பாகமாகத் தம் மகத்தே வாரி வழங்கிக் கொண்டும், வேத வேதாங்க, சைவ சித்தாந்தமாகிய பல சமயப் பன்னூல்களின் திரண்ட கருத்துக்களைக் கூறிப் போதரும் அரும்பெறல் அருள்நூலே நமது 'திருவருட்பா' என்பது உள்ளங்கை நெல்லிக் கனியென அகமும் புறமும் வெளிப்பட்டு விளங்குவதாகும் என்று அறிஞர்கள் போற்றுகின்றனர்.

படிப்போர்க்கும கேட்போர்க்கும் இன்பம் விளைவித்து, மனங்களை ஈர்த்துக் கவரும் குணமுடையதாய், ஆறந்த சாத்திரங்களின் துறைகளை ஊடுருவிக்கண்டு கொண்ட சமரச சுத்த சன்மார்க்க நிலைமையிலே நம் அடிகளார் நம்மோர்க்குக் கருணையாலே போதிக்க விரும்பி, அவ்வவர் தரத்திற்கு ஏற்ற அற்றம் நோக்கித் தொகுத்தும், விரித்தும், விளக்கியும, புதுக்கியும், மயங்காமை திருத்தியும, வரன்முறை வகுத்தும, பலதுறை ஆய்ந்தும் தெளிய வைத்துள்ளதே நமது திருவருட்பாவேயாகும். மேலும் கருத்துக்களை மிக ஆழ்ந்து கொள்வோன், கொடுப்போன், அறிவோன, அனுபவிப்பவனாகிய பலதிற நிலையினர்க்கும் அவரவர் தரத்திற்கேறறவாறு தெய்வத்தின் எல்லையற்ற கருணையியறகையின்பப் பெருநிலையினைப் புலப்படுத்தி நிற்கின்றது இத்திருவருட்பாப் பனுவல் நூல் என்போம். வேதாகமங்களின் தன்மையுமிதுவேயாதலின் இத்திருவருட்பாவும வேதாகமத்தின்பாற் பட்டதே என்பது தேற்றமாயிற்று.

இம்மட்டோ, நமது திருவருட்பா ஆறந்த நூல்களின் முடிபுகளை மேற்சொல்லியபடி அடக்கிக் கொண்டிருப்பதனாலும், சாங்கியம், யோகம், நியாயம், பூருவமீமாம்சை, உத்தரமீமாமசை, வைசேடிகம், சாந்தேயம், காணாபத்தியம், வைணவம் முதலிய சமயவாதிகள் அனைவரும் தாமதாம கொண்ட கருத்துடன் ஆராயுங்கால், அவ்வவர்க்கு ஏற்ற விளக்கங்களையும், மேற்கோள் பிரமாணங்களையும், விவகரணங்கள், விருத்திகள், சூர்ணிகைகள், பாடியங்கள் முதலியவற்றை விளக்கிக்கொண்டு திகழ்வதாலும் ஒளியுலகத் தத்துவஞானிகள, உண்மையுணர்ந்தறியும் அனுபவிகள் உலகுக்குணர்த்தும் வேகமுடையவர்களாகி, ஒருமைப்பாட்டினது அருமையுரைத்து மகிழ்வடைகின்றனர். இது மிக அற்புதமே. என்றால் இவ்வரும் பெறல் பொககிஷமோ, பூஷணமோ, சேமவைப்பு நிதியமோ இவ்வனைத்திற்கும் மேலான-மரணபயம் போக்கவல்ல-திருவருட்பாவைப்பற்றி அதன் அருமைத் தன்மைகளைப்பற்றிப் பேசுவதோ-எழுதுவதோ-மனித தரத்தது அன்று. சுவானுபூதியிற் கண்டறிவதே காட்சியாம. சாட்சியாம என்று கூறி நிறைவுறுகின்றேன். மற்றுமுள்ள அன்பர்களாகிய நீங்களும் உணர்ந்து இன்பூறி மகிழ்ந்து கொள்வீர்களாக என்று அமைகின்றேன் அமைதி கொள்கின்றேன்.

எல்லா உயிர்களும் இன்புற்றுவாழ வழி வகுத்து அருளிய நம பெருமான் திருவருள் உலக மெங்கணும் ஒளிபரப்பி வருவதறிகின்றோம். வாழ்க அவர்தம் தண்ணருட்கருணை, வாழிய சமரச சன்மார்க்கம். வாழியவர் கண்ட வழி!

1 – 7 - 68

அஞ்சாமை வேண்டும், அவசியம் வேண்டும், உடலுக்கு ஊறு உண்டாகுமே, பிணி பீடிக்குமே, மானம் நேருமே, பொருளெல்லாம் போகுமே, குடும்பம் குலையுமே, புகழ் பொன்றுமே என்று அஞ்சுதல் கூடாது.

— *காந்தியடிகள்*

விளம்பர உதவி :

தி இந்தோ ஸ்விஸ் சிந்தடிக் ஜெம் மானுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

மெயின் ரோடு, மேட்டுப்பாளையம்,
கோயமுத்தூர் ஜில்லா.

வீறுடையார் முன்செய்த விண்ணப்பம்

பேராசிரியர், சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்
ஔவை சு. துரைசாமி, மதுரை

வடலூர் வள்ளலார்க்குச் சிவஞானம் எய்தியதும், அதனைப் பலவகையாலும் பேணிப் பயன் கொள்ளற்கு உள்ளம் துள்ளுகிறது. சிவனது நினைவே சிந்தையில் நிறைந்திருப்பினும், தாம் இருக்கும் சூழ்நிலை அதனைச் சிதைத்து விடுமோ என்ற அச்சம் தோன்றி அலைக்கின்றது. மக்களுலகில் பிறந்து வளர்ந்து அவரிடையே வாழும் வள்ளலார் அம்மக்கள் அனைவரும் பல திறப்பட்ட நினைவும் சொல்லும் செயலுமுடையராய் இருப்பது காண்கின்றார். அவர்களின் கூட்டுறவால் தம்முடைய மனமும் மொழியும் செயலும் வேறுபட்டு எண்ணிறந்த குற்றங்கட்கு இடமாகுமே என்ற நினைவு எழுந்து வருத்துகிறது. ''என்றும் எங்கும் சிவஞானிகளோடே கூடியுறைக; அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவர்'' என்ற அறவுரை வள்ளலார் நெஞ்சில் எழுந்து ஒளி நல்குகிறது. தொண்டர் கூட்டத்தைச் சேர்தற்குப் பேரார்வம் பிறக்கின்றது. சிவத்தொண்டரைச் சிந்திக்கின்றார்

தொண்டர்களின் வேடமோ அவர்களாற் செய்யப்படும் தொண்டோ அவர் கண்கட்குப் புலனாகவில்லை. அவர்களுடைய நெஞ்சினை நோக்குகின்றார். அவர்தம் உள்ளந்தோறும் சிவமே விளங்குகிறது. புறத்தே சிவபரம்பொருள் கோயில் கொண்டிருக்கும் திருக்கோயில்கள் பலவும் வள்ளலார் உள்ளத்தே காட்சியளிக்கின்றன. அவற்றைச் சைவத் திருமுறைகள் காட்டும் முறைப்படி நோக்குகின்றார்.

திருமுறைப்படி நமது தமிழகம், சோழநாடு, ஈழநாடு, பாண்டிநாடு, சேரநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு எனப்படுகிறது. தென்னாட்டின் புறப்பாகத் துளுநாடும் வடநாடும் உள்ளன.

எதனையும் முறைப்படி நோக்கும் அருளாளராதலால வள்ளலார், மேற்கூறிய முறையில் சோழ நாட்டில் சிவபெருமான கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகளைத் தமது மனக்கண்ணில் கண்டு வழிபடுகின்றார். சோழ நாட்டிற்கு உயிர்நாடியாக இருப்பது காவிரியாறு. தமிழகத்தில் தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருநை எனப் பலவுண்டு. எனினும் சிவம் பெருக்கும் பெரு நிலையில காவிரிக்குத் தனிச்சிறப்பு உண்டு. காவிரி பாயும் கவின் மிக்க நாட்டில் உள்ள திருக்கோயில்களைக் கணக்கிட்டு நோக்கினால் உண்மை புலனாகும். சிவநெறிக்குக் காவிரி தந்த செல்வத்தளவு ஏனையாறுகளில் ஒன்றும் செய்ததில்லை. இன்ன தகைமை நோக்கியே காவிரி பாயும் நாட்டையே முதற்கண் எடுத்துள்ளனர். மேலும் சிவனுறையும் திருக்கோயில்கள் பலவும் ஆற்றங் கரைகளையே இடமாகக் கொண்டவை. அதனால் சோழ நாட்டுத் திருக்கோயில்களை வடகரை, தென்கரை என இரண்டாக வகுத்து வடகரையில் தில்லையம்பலத்தை முதலாக வைத்து முன்னோர் முறை செய்தனர்.

1-7-68

வள்ளற் பெருமானின் திருவுள்ளம் பரந்து விரிந்த பான்மைத் தாதலால் வடகரைப் பகுதியை தமது மனககிழியில் எழுதிப் பார்க்கின்றார். தலைமை பெற்றுத் தோன்றும் தில்லைப்பதியை நோக்கியதும்,

''சொற்பெறும மெய்ஞ்ஞானச சுயஞ்சோதியாம் தில்லைச்
சிற சபையில வாழ தலைமைத் தெய்வமே''

என்று பாடிப் பரவுகின்றார். பின்பு சிற்சபையை அடுத்து விளங்கும் திருப்புலியூரை வழி படுகின்றார். பெரும் பற்றப் புலியூர் என்பதும் அதுவே. அதன்பின் திரு வேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை முதலிய திருக்கோயிலகளைக் காண்கினறார். இவ்வாறு காவிரி கடலொடு கலக்கும் கீழ்த்திசையினினறு, கண்டு கொண்டே செல்லும் வள்ளற் பிரான் மேற்கில் திரு ஈங்கோய் மலையடியை அடைகின்றா. அங்கே, காவிரியின் வடகரை அதற்கே கீழ்க்கரையாக மாறி விடுகிறது அதனால் வள்ளலார தென்கரையே நோக்குகின்றார்.

பச்சைப் பசுங்கம்பலம் விரித்ததுபோல் பசிய நெல்வயல பரந்து, காணும் கண்ணுக்குக் கண் கொள்ளாக் காட்சியளித்து வானுறவுயர்நது நிற்கும் வாட் போக்கி தோன்றுகிறது.

''நாட்போக்கி நிற்கும் நவையுடையார் நாடரிதாம்
வாட்போக்கி மேவுகின்ற வளளலே''

என்று வாயாரப் பாடுகின்றா. இங்கே வாட்போக்கி நிற்கின்ற வள்ளலே என்னாமல் ''வாட்போக்கி மேவுகின்ற வள்ளலே'' என்பது குறிக்கத்தக்கது வாட்போக்கி நிற்கின்ற என்றால் போர்க்களத்தே வாளைப் போக்கி நிற்கும் மறநிலை பொருளாகி விடும்; அருளுக்கு மாறான அக்கருத்துக்கு வள்ளலாா உள்ளம் இடம்தராமல், வாட்போக்கி என்ற திருப்பதியில் எழுந்தருளுகின்ற வள்ளலே என்ற இனிய பொருள் தோன்ற ''வாட்போக்கி மேவுகின்ற வளளலே'' என உரைப்பது எவ்வளவு இனபம தருகிறது, காண்மின்.

வாட் போக்கியிலிருந்து காவிரித்தென்கரையே நோக்கி அவரது திருவுள்ளம், கடம் பந்துறை, பராய்த்துறை, கற்குடி, உறையூர், மூக்கீச்சுரம் சிராப்பள்ளி முதலிய திருப்பதி களைக கண்டு பாடிப் பரவுகின்றது.

இங்ஙனம் காவிரியின் தென்கரையிலும் அதன் கிளைகளின் கரையிலும் மேவுகின்ற கோயில்களை வழிபட்டுக் கொண்டே கீழ்க்கடற்கரையை அடைகின்றார். அங்கே மறைக் காடு, அகத்தியான்பள்ளி, கோடிக்கரை என்ற பதிகளில் எழுந்தருளும் பரமனை வழிபடு கின்றார். மறைக்காட்டில் இறைவனை ''என் எய்ப்பில் வைப்பே'' என்றவர், அகத்தியான் பள்ளியில்,

''நின் அகத்தியான் பள்ளி நேர்ந்தேன் என்று ஆட்கொண்ட
தென அகததியான் பள்ளிச் செமபொன்னே''

என்றும் கோடிக்கரைப் பெருமானை,

''ஞானநெறியோர்
நாடிக்குழுக நலம் அருள் என்று ஏத்துகின்ற
கோடிக் குழகர் அருட் கோலமே''

என்றும் பரவுகின்றார்.

கோடிக் கரைக்குக் கிழக்கில் பரந்த கடலே காட்சி தரினும், அதற்கு அப்பாலுள்ள ஈழ நாட்டையும் அங்குள்ள திருக்கோண மலையையும் திருக்கே தீச்சரத்தையும் வள்ளலார் தமது உள்ளத்தே காண்கின்றார்.

''நாட்டும் புகழ் ஈழநாட்டில் பவவிருளை
வாட்டும் திருக்கோண மாமலையாய்—வேட்டுலகில்
மூதீச்சரம் என்று முன்னோர் வணங்குதிருக்
கேதீச் சரத்தில் கிளாகின்றோய்''

என்று பாடுகின்றார். கேதீச்சரத்தை வள்ளலார் ''மூதீச்சரம் என்று முன்னோர் வணங்குவர்'' என்றதற்கேற்ப அப்பகுதியிலுள்ளோர் அது மிகமிக முதுமையான ஊர் என்று கூறுகின்றார்கள். இலங்கையரசின் புதைபொருள் ஆராய்ச்சித்துறையினர் திருக்கோயிலின் தென்புறத்தே நிலத்தைத் தோண்டும் முயற்சியில ஈடுபட்டுப் பல தொல் பொருள்களைக் கண்டெடுத்துள்ளனர். இக்கட்டுரையாளர் கேதீசசரத்துக்குச் சென்றிருந்த போது அங்குள்ளவாக்கு வள்ளலார் அருளிய இச்செயதியைச் சொன்னாராக, அவர்கள் பெரிதும் வியப்புற்று மகிழ்ந்தனர்.

பின்பு, வள்ளற்பெருமானார் பாண்டிநாட்டை நோக்குகின்றார். மதுரை ஆலவாய் அவர் மனக்கண்ணில் தோன்றி மாண்பு தருகிறது.

''—ஓதுகின்றோர்
பால் அவாய் நிற்கும் பரையோடு வாழ்மதுரை
ஆலவாய்ச் சொக் கழகானந்தமே''

என்று பாடுகின்றார். சொக்கு என்ற சொல்லுக்கு அழகு என்று பொருளாதலால், சொக்கழகு ஆனநதமே என்று குறிக்கின்றார். மதுரை அங்கயற் கண்ணி சிவசத்தியாதலால், அவ்வுண்மை தோன்ற ''ஓதுகின்றோா பால் அவாய் நிற்கும் பரை'' என்று வள்ளலார் வடித்துறைக்கின்றார்.

மதுரையைத் தொடர்ந்து சூழவுள்ள ஆப்பனூர் பரங்குன்றம் ஏடகம் முதலியவற்றைக் கண்டு கொண்டு முடிவில் நெய்வேலியை மனததால் தரிசித்துப் பாண்டித் திருக்கோயில்களை வணங்கி மகிழ்கின்றார்.

''—பொற்றும
நல்வேலி சூழ்ந்து நயனபெறும் ஒண்செஞ்சாலி
நெல்வேலி உண்மை நிலையமே''

என்று திருநெல்வேலி சிறப்பிக்கப் பெறுகிறது. தண்ணான் பொருநையின் தனி நீரால் விளையும் செந்நெல்லின் சிறப்பை ''நயன்பெறும் ஒண்செஞ்சாலி'' என்பது இன்றைக்கும் உண்மையாகும்.

தென்பாண்டி நாட்டை அடுத்திருப்பது சேரரது குட்டநாடு. அதன் தலையாயவஞ்சி நகரை நினைப்பித்து விளங்கும் அஞ்சைக்களத்தை வள்ளலார் அருட்கண்ணால் கண்டு அன்பு மிகுகின்றார். அஞ்சைக் களத்து அடியார்கள், சிவனை நோக்கி நஞ்சைக் கழுத்தில் வைத்து உலகவரை வாழ்வித்த அவனது அருள் நலத்தை வியந்து,

''நஞ்சைக் களத்து வைத்த நாத எனத்தொண்டர்தொழ
அஞ்சைக் களஞ்சேர் அருவுருவே''

என்று புகழ்கின்றார்.

சேரநாடு சென்ற வள்ளலாரது திருவுள்ளம் கொங்கு நாட்டிற் புகுகின்றது. கொங்கு நாடு என்றவுடனே ''கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லவும்'' தான் உண்ட பாலனை முதலை உமிழ்ந்த சிறப்பமைந்த திருப்புக் கொளியூர் அவிநாசி நம் நினைவில் எழுகிறதன்றோ? வள்ளலார் அப்பெரும்பதியை நினைக்கின்றார். அவருடைய மனக் கண்ணில் அங்கே உறையும் சான்றோர் இறைவன் அருள் பெற்று மகிழும் அன்புநிலை தோற்றமளிக்கின்றது.

''—நெஞ்சடக்கி
ஆன்று நிறைந்தோர்க்கு அருள்அளிக்கும் புக்கொளியூர்த்
தோன்றும் அவிநாசிச் சுயம்புவே''

என்று பாராட்டுகின்றார். பின்பு திருமுருகன் பூண்டி, கொடிமாடச் செங்குன்றூர் முதலிய பதிகளைப் பரவிக் கொண்டு கருவூர் வந்து சேர்கின்றார். கருவூர் ஆனிலையைக் கண்டு பரவுபவர், சிவனடியே பரவும் திருத்தொண்டரைக் காண்கின்றார். தொண்டர் கூட்டத்தை அடைவதே குறிக்கோளாகக் கொண்டு சிவம் வளர்க்கும் திருக்கோயில்களை வழிபட்டு வருகின்றாராதலால், தொண்டரது அழகிய தோற்றத்தை நோக்குகின்றார். அறிவை மறைத்து இருள் செய்யும் இயல்பினதாகிய வினைத் தொடர்பிலிருந்து நீங்கிய மேன்மை புலனாகிறது.

''வெங்கருவூர் வஞ்ச வினைதீர்த்தவர் சூழ்ந்த
நங்கருவூர்ச் செய்யுள் நவரசமே''

என்று பாடுகின்றார். நாடு தோறும் எழுந்தருளும் சிவபரம் பொருளை நினைந்து பாடும் பாட்டுக்களை நோக்குகின்றார். ஆற்றொழுக்குப் போல இடையறவின்றி அடுக்கடுக்காகப் பெருகி வரும் சொற்களையும் அவை நல்கும் பொருட் சுவையையும் எண்ணுகின்றார். எல்லாம் சிவத்தின் திருவருள் வண்ணமாய் இருப்பது கண்டு'' செய்யுள் நவரசமே'' எனறு சிறப்பிக்கின்றார்.

பின்னர், தென்பெண்ணைக்கும் வெள்ளாற்றுக்கும் இடையிலுள்ள நடுநாட்டைக் காண்கின்றார். கொங்கு நாட்டினின்றும் கிழக்கு நோக்கிக் கொல்லிக் கூற்றத்தைக் கடந்து வருவோர்க்கு வெள்ளாற்றின் கரை மருங்கிலுள்ள நெல்வாயில் அரத்துறை காட்சி தருகின்றது.

''—தங்கு அளற்றின்
தீங்கார் பிறதெய்வந் தீக்குழியில் வீழ்ந்த வரைத்
தாங்கும் அரத்துறையில் தாணுவே''

என்று பரவுகின்றார். பிற தெய்வ நெறிகள் தீங்கான நரகத்திற் சேர்ப்பன ; அத்தீய நெறியில் வீழ்ந்தவர்க்குத் திருவருள் எளிதில் கிடைப்பதில்லை. இதனைத் திருஞான சம்பந்தர் இத்திருவரத் துறையை அடைந்தபோது உரைத்தருளினர்

''எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால்''

அரத்துறை அடிகளின் அருள் ''சென்று கைகூடுவதென்றால்'' என்று ஞான சம்பந்தர் நவில்கின்றார். அதன் கருத்து நினைவில் எழுதலும், வள்ளற்பெருமான் ''தீங்கார் புறதெய்வத் தீக்குழியில் வீழ்ந்தவரைத் தாங்கா அரததுறைத தாணுவே'' என்று உரைக்கின்றார்.

இவ்வாறு திருவரத்துறைத திருப்பதிகததின் திரண்ட கருத்தை இரண்டடிகளில் உரைதத அருள்வள்ளலார், அதற்குக் கிழக்கிலுள்ள பெண்ணாகடம், கூடலையாற்றூர் முதலிய திருப்பதிகளைப் பரவிக் கொண்டு திருவண்ணாமலை வந்து சேர்கின்றார்.

''—யாம ஏத்தும

உண்ணாமுலையாள் உமையோடு மேவுதிரு

அண்ணாமலை வாழ அருட்சுடரே''

என்று பாடி மகிழ்கின்றார்.

உண்ணாமுலை என்றாலே, உமாதேவியைக் குறிக்கும்; உமையோடு என்று கூறுவது ஏன்? எனின், வள்ளலார் தமக்கு அருட்குருவாகக் கொண்ட ஞானசம்பந்தர், ''உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்'' என்று அண்ணாமலையானைக் குறித்தலால் இவ்வாறு அடிகளார் உரைக்கின்றார்.

திருவண்ணாமலைக்குரிய நாட்டை அடுத்திருப்பது தொண்டைநாடு. அந்த நாட்டிற்குள் கோயில் கொண்டிருக்கும் சிவனை நினைக்கின்றார். அந்நாட்டின் தலைநகரான காஞ்சி மாநகா நினைவில் தோன்றுகிறது. திருவேகம்பரைத் திருவுள்ளத்தே கண்டு பேரின்பம் எய்துகின்றார்.

''நாகமபராம தொணடை நாட்டில் உயர் காஞ்சி

ஏகம்பம் மேவும் பேரின்பமே''

என்று பாடுகின்றார். நாகம் பராவும் தொண்டை நாடு என்றது நாக நாட்டவர் பரவும் தொண்டைநாடு என்று பொருள்படும். தொண்டை நாட்டு மன்னனுக்குத் தாய் நாகநாட்டு நங்கை. ஆதலால் நாகநாடு அவனது தொண்டை நாட்டைப் புகழ்கின்றது. பராவும் என்பது பராம் என வந்தது.

இவ்வாறு காஞ்சியேகம்பத்தைக் கண்டவர், அந்நகரக் கண் உள்ள கச்சி மேற்றளி, ஓணகாந்தன் தளி, அநேக தங்காபதம், திருநெறிக் காரைக்காடு ஆகிய திருப்பதிகளைப் பாராட்டுகின்றார். அந்நாட்டுப் பதிகள் பலவற்றையும் முறையே கண்டு வரும் வள்ளலார் முடிவில் அந்நாட்டின் தென்கிழக்கில் கடற்கரை மருங்கில் இரும்பை மாகாளத்தைத் தரிசிக்கின்றார்.

''—பத்தியுள்ளோர்

எண்ணும் புகழ்கொள் இருபமை மாகளத்து

நண்ணும் சிவயோக நாட்டமே''

என்று பணிந்து பரவுகின்றார். சிவத்தோடு ஏகமாதல் வேண்டித் தியானிப்பது சிவயோகம். சிவயோகிகள் ''ஞானக் கண்ணினில் சிந்தையில்'' நாடுவராதல், அந்த நாட்டத்துக்கு இலக்காணமை பற்றிச் சிவபரம் பொருளைச் ''சிவயோக நாட்டமே'' என்று செப்புகின்றார்.

இந்த நாட்டம் வள்ளற்பெருமான் திருவுள்ளத்தைத தமிழ் நாட்டினின்றும் நீக்கித் துளுநாட்டிற் செலுத்துகிறது. துளுநாட்டில் திருக்கோகரணம் தோன்றுகிறது.

1 - 7 - 68

''கோபாலத்திற் காண்பரிய கோகரணம் கோயில்கொண்ட

மாபலத்து மாபலமாம மாபலமே''

என்று பரிந்துரைக்கின்றார். கோகரணத்தார் ஊரைக் கோகரணம் என்றும், திருக்கோயில் உள்ள பகுதிக்கு மாபலம் என்று பெயர் கூறுவர். அதனால், கோகரணப் பெருமானை மாபல நாதர் என்பது வழக்கமாயிற்று. அவ்வுண்மை விளங்க, ''கோகரணம் கோயில் கொண்ட மாபலத்து மாபலமே'' என்று வள்ளலார் வழங்குகின்றார்.

துளுநாடு கண்ட சேரமன்னர் வடநாடு நோக்கியதுபோல, வள்ளலாரும் வடநாட்டை நினைக்கின்றார். திருப்பதிகள் அவர் சிந்தையில் காட்சி தருகின்றன.

''பாகியற்சொல் மங்கையொடும்பாங்கார் பருப்பதத்தில்

யோகியர்கள் ஏத்திடவாழ் ஒப்புரவே''

என்று பரவுகின்றார் திருப்பருப்பதத்தை இந்நாளில் சிவசைலம் என்று கூறுகின்றனர் வைணவர்கள் திருமலை திருப்பதியை ஸ்ரீசைலம் என்பதால் சைவர்கள் இதனைச் சிவசைலம் என்பாராயினர். தவநெறி வேண்டுவோர் மிக விரும்பி வழிபடும் இடமாதல் பற்றி வள்ளலார் ''யோகியர் ஏத்திடவாழ் ஒப்புரவே'' என்று போற்றுகின்றார். ஞானசம்பந்தரும் ''[illegible]கெழு சிறப்போவாச் செய்தவ நெறி வேண்டில் ஏர்கெழு மடநெஞ்சே இரண்டுற மனம் வையேல் கார்கெழு நறுங்கொன்றைக் கடவுள திடவகையால பார்கெழு புகழோவாப் பருப்பதம் பரவுதுமே'' என்று பாடிப் பரவுகின்றார். இங்ஙனமே இந்திரநீலப் பருப்பதம் அனேக தங்காபதம் முதலிய சிவப்பதிகளை எண்ணிப் பரவி வெள்ளி மலையையும் கயிலை மலையையும் கருத்திற் கொண்டு பாடும் வள்ளலார்,

''இந்திரரும் நாரணரும் எண்ணில் பிரமர்களும்

வந்திறைஞ்சும் வெள்ளிமலையானே—தந்திடும்நல்

தாய்க்குமிகிடையாத தண்ணருள் கொண்டு அன்பருளாப்

வாய்க்குங் கயிலை மலையானே''

என்று சொன்மாலை பாடித்துதிக்கின்றார்.

இங்ஙனம் தில்லையம்பலம் முதலாகத் திருக்கயிலை ஈறாக எங்கும் சிவபெருமான் திருக் கோயில் கொண்டருளும் சிறப்பை எண்ணின வள்ளலார், வட இமயம் தென்குமரி இடைப் பட்ட நிலப்பரப்பில் எங்கும் நிறைந்த பரசிவத்தைத் தமது சிந்தையிற் காண்கின்றார்

''—தூயக்குமரன்

தந்தையே என் அருமைத் தந்தையே தாயே எனை

சிந்தையே கோயில்கொண்ட தீர்த்தனே''

என்று பாடிப் பரவுகின்றார்.

சிந்தையிற்கண்ட சிவபரம் பொருளின் திருக்கோலத்தை நெஞ்சால நோக்குகின்றார். அப்பெருமான் அணிந்த கொன்றை மாலையும அவரது பொன் போன்ற மேனியும், மின் போன்ற செஞ்சடையும், திருநடம்புரியும் திருவடியும அவர்க்கு இன்பம் செய்கின்றன இத் தெய்வத்திருவுருவில் தோய்ந்த வள்ளலார் இவ்வுருவையும இதற்கு அப்பாலான அருவ்

நிலையும் இவ்விரண்டையும் கடந்த சாதாக்கியம், விந்து, நாதம் ஆகிய சுத்த தத்துவங்களுக்கு அதீதமாய் நிலவும் பரசிவத்தையும் எண்ணி யறிந்து மகிழ்கின்றார். இவற்றைத் தமக்கே யமைந்த இனிய எளிய இன்பத் தமிழ் நடையில்,

'வெண்மைமுதல் ஐவண்ணமும் மேவி ஐந்து தேவர்களாய்த்
திண்மை பெறும ஐந்தொழிலும் செய்வோனே—மண் முதலாய்
ஐந்தாய் இருசுடராய் ஆன்மாவாய் நாதமுடன்
விந்தாகி எங்கும் விரிந்தோனே."

என்று சொல்லி உள்ளத்தில் ஊறிவரும் உயர் ஞானத்தேனையுண்டு உவகை மிகுந்து தமது உட்கோளை உரைக்கின்றார். திருத்தொண்டர் கூட்டத்துள் தன்னையும் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது வள்ளலார் குறிக்கோள். தொண்டர் தம் பெருமையை முன்னமே சேக்கிழார் பெருமான் நன்கு அறிவுரைத்துள்ளார். "உலகெலாம்" என்னும் மெய்ம் மறைக்கு விளக்கம் எண்ணிய போதே தொண்டர் இலக்கணத்தைக் கண்டவர் நம் வள்ளற் பெருமானார். தொண்டராவது எளிய செயலன்று. மக்கட்டன்மையால் உளவாகும் குற்றம் பலவும் நீங்கி இறைவன் அருள் நோக்கில் நிற்றல் வேண்டும். நிழலையடைந்தால் தான் வெயிலின் வெம்மை விளங்கும்; அம்முறையே வள்ளலார் சிவனடியே சிந்திக்கும் செம்மைநெறி சேர்ந்து மக்கள்பால் தோன்றும் குற்றங்களைக் காண்கின்றார். அவற்றை யெல்லாம் தம்பால ஏற்றிமுறையே எடுத்துரைத்துக் குற்றங்களைக் களைகின்றார்.

' நீறுடையாய ஆறுடைய நீள முடியாய் ஏறுடைய
வீறுடையாய் நின்றனக்கு ஓர் விண்ணப்பம்"

என்று தொடங்கி, யான்கூறும் குற்றங்களைக் கண்டு என்னைத் தொண்டுக்கு ஆகாதவன் என மாறுபட நினைத்தலாகாது; உள்ளத்தில் உள்ளதை ஒளியாமல் உரைக்கின்றேன்.

"—மாறுபட
எள்ளல் அடியேன் எனக்குள் ஒளியாமல்
உள்ளபடியே உரைக்கின்றேன்"

என்று கூறுகின்றார்.

"அருள் வள்ளலே உனது அன்பர்க்கு இன் சொல்லுடன் பணிந்து ஒன்றும் ஈந்ததில்லை, பொய்யுரைக்க எழுவது போல் மெய்யுரைக்க என்றும் வீழ்ந்ததில்லை, கொல்லா விரதத்தைக் கொண்டதில்லை; நின் புகழைக் கேட்க நினைந்ததில்லை; உன் பொன்னடிக்குத் தொண்டு புரிந்ததில்லை; காமம வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றம தன்னை முறித்ததில்லை; நின்கோயில் வலங் கொள்ளக் குறித்ததில்லை; உன்சந்நிதியில் கை கூப்பித் தாழ்ந்ததில்லை; நின தொண்டரோடு கூடிச் சூழ்ந்ததில்லை; யாரையும் கடுகடுத்துப் பார்ப்பது அல்லால என்றும் முகமலர்ச்சி ஏற்றதில்லை; நின் சீர உரைப்பார் உரைக்கக் கேட்டு நெஞ்சம் கரைந்ததில்லை; தமிழ்ப்பாமாலை சாற்றிக் கண்ணீர் கொண்டு மனம கனிந்ததில்லை; நின் அன்பர்போல என்னை அஞ்சல் என்று அருள்க எனக் கேட்டு உன் திருவடியை நான் அடுத்ததில்லை, என்று இவ்வாறு தொண்டர்பால இருக்க வேண்டிய நற்பண்புகள தம்பால இல்லை என்று முறையாகக் கூறுகின்றார்.

குணமில்லாமையை உரைத்த வள்ளலார், குணமின்மை குற்றமுடையாகாது என்ற தருக்க முறை பற்றிக் குற்றங்களை எடுத்து நிரலே மொழிகின்றார்.

1 - 7 - 68

அண்ணலே, உலகவர் வியக்குமாறு நின்பொன்னடிக்குப் பொய்யடிமை வேடங்கள் பூண்டதுண்டு; வேட்கை விளக்குழியில் வீழ்ந்ததுண்டு; பின்னொன்றும் முன்னொன்றும் மொழிந்ததுண்டு; இரப்போர்க்குத் தானம் செய்பவரைத் தடுத்ததுண்டு; வழக்காடுங்கால் ஓரம் உரைத்ததுண்டு; வன்னெஞ்சர் கூட்டத்தில் தாழ்ந்ததுண்டு, நின்சந்நிதி நேர் வந்து தாழாது ஒதி மரம்போல் நின்றதுண்டு; சிவநிந்தை சொல்லக் கேட்டதுண்டு, நல்லவரை மதம்கொண்டு வசையெல்லாம் சொன்னதுண்டு; சிவபூசை செய்யாமல் சோற்றுக்கு அலைந்ததுண்டு, இரப்பவரைக் கண்டால் கோபத்தால் நாய்போல் குரைத்ததுண்டு; நினைவும் சொல்லும் செயலும் வேறு வேறாகச் செல்ல விட்டு உன்னை ஏத்தாமலே இருந்ததுண்டு; நல்லோர் சொன்ன புத்தி மதி கேளாமல் எலலைக் கல்போல இருந்ததுண்டு; அற்ப மகிழ்ச்சியினால் உன்னை வாழ்த்தாமல் மறந்ததுண்டு; உன் பொன் வடிவம் காணாமல் வீழ் நாள் கழித்ததுண்டு; உலக வாழ்வில் மாடுபோல் நின்று உழைத்ததுண்டு; காமக் கடுங்காட்டில் கொள்ளிவாய்ப்பேய் போல் குதித்ததுண்டு; இழிசுவைக் கல்விகளைக் கள்ளுண்ட பித்தனைப் போல் கற்றதுண்டு; என்னைப் பேராசைப் பேய் பிடித்ததுண்டு, பாதகம் என்றால் எனக்குப் பாற்சோறு; இனிய வாய்மை என்றால் எனக்கு வாய்க்கு மட்டும்; இன்சொல்லுக்கும் எனக்கும் வெகுதூரம் சிவபுண்ணியம் எனக்குப் போராட்டம்; கோள் சொல்லல் என்றால் எனக்குக் கொண்டாட்டம் சிவாகம நூல் வாசிக்க என்றால் எனக்கு வாய் நோகும்; வீண் வேடிக்கை என்றால் நான் விடுவதில்லை, சிவயோகம் என்றால் என் உள்ளம் நடுங்கும், கள்ளம் என்றால் என் உள்ளம் களித்தெழும்பும், சிவசிவா என்று ஒரு சொல் சொல்லென்றால் எனக்குத் தூக்கம் வரும், சோம்பல் என்பது என்னுடைய சொந்தம், தூக்கமே எனக்குச் சோபனம்; ஈனர் மனையாயினும் சோறு கிடைத்தால் அதுவே எனக்குச் சொர்க்கம்; நல்லவரைத் தாழ்வுரைத்தல் என்னுடைய சாதகம்; எப்பொழுதும் சண்டையென்பது எனக்குத் தாய்தந்தை, வஞ்சரோடு வாதாட என்றால் என் வாய் துடிக்கும்; தரும நிந்தை என்பது என் பழைய நேசம்.

இவ்வாறு குற்றம் பலவும் கூறுபவர், முடிவில் சூதென்பதெல்லாம் என் சுற்றம்; வஞ்சமெல்லாம் என் கைவசமே; ஆணவமே என் காணியாட்சி; புல்லறிவே என் உட்பொருள்; மூடருக்குள் யானே முதல்வன்; பேதை என்பது எனக்கு உரிமைப்பேர் என்று சுருங்கச்சொல்லி,

"ஓதுவது என்பற் பலவாய, உற்றதவத்தோர் நீத்த
தீதுகள் எல்லாம் எனது செல்வமகாண் — ஆதலினால்
பேயினை ஒத்து இவ்வுலகில் பித்தாகி நின்ற இந்த
நாயினை நீ ஆண்டிடுதல் நன்கு"

என்று முறையிடுகின்றார்

உலகில் மக்கள் பால காணப்படும் குற்றம் அனைத்தும் தம்பால் உள்ளனவாக உரைக்கும் வள்ளலார் தன்னை ஆண்டருளுதல் நன்கு-நல்லறம்-என்று ஆண்டவனை வேண்டுவது எங்ஙனம் பொருந்தும்; குற்றம் மிகவுடையவரை விலக்குவது தானே முறை என்று கேட்கலாம். சிவபரம் பொருளின் அருட்செயல்களை நோக்கின், எத்துணைக் கீழான உயிரையும் அப்பெருமான் விலக்குவதின்றி அருளுவதே இயல்பாக இருப்பது தெரிகிறது. அவற்றை நமது வள்ளற்பெருமான் முறையாக எடுத்து மொழிகின்றார். "இறைவனே, மண்ணவர் விண்ணவர் யாவரும் உய்தற் பொருட்டு இரக்கமே வடிவாய் நின்று ஒருவரும் உண்ணாத கொடுவிடத்தை உண்டாய்; நீ வீற்றிருக்கும் மலையை எடுத்த இராவணனாகிய அரக்கனுக்கும் வாய்த்த வரமெல்லாம் வழங்கினாய், முனிவர் வேள்வி செய்துவிட்ட கொடும்பாம்பை எல்லாம் தோளில் தாங்கினாய்; முப்புரம் எரிந்தபோது எஞ்சிய இருவரையும் ஆட்கொண்டாய்; பன்றிக் குட்டிகளுக்குத் தாயாய்த் தோன்றி ஆதரித்தாய்; வந்திக்கு ஆளாய்த் தோன்றி மண் சுமந்தாய்; மாணிக்கவாசகர் பொருட்டுக் குதிரைச் சேவகனாய் வந்தாய்; விசயனால் வில்லடிபட்டதோடு சாக்கிய நாயனார் எறிந்த கல்லடியும் பட்டாய், மூக்கனையும் எலியும் சிலந்தியும் செய்த

செயல் கண்டு உவந்து அரசவாழ்வு பெற்று இன்புறச் செய்தாய்; நாவரசர் பொருட்டுக் கட்டுச் சோறு கொணர்ந்தளித்தாய்; சுந்தரர் பொருட்டுப் பரவை மனைக்குத் தூது சென்றாய் என்று இவ்வாறாகக் உரைக்கும் வகையால் எத்துணைக் குற்றமுடையாரேனும், குண மாகக் கொண்டு அருள் புரிவது ஈசன் செயலாவது காணுகின்றார்.

மக்கள் செய்யும் குற்றமனைத்தையும் குணமாகக் கருதி மகிழும் உலகியல் தாய் தந்தையரை வள்ளலார் தமது மனக்கண்ணால் நோக்குகின்றார்

''—பெறுமதிய

அன்புடைய தாயர்கள் நூறாயிரம் பேர் ஆனாலும்
அன்புடையாய் நின்னைப் போல் ஆவாரோ —இன்புடன்
ஈடை வரும் தந்தையர்கள் எண்ணிலரோ, ஆயினும் என்
ஆண்டவனே நின்னைப்போல் ஆவாரோ''

என்று மொழிந்து, ஒருசில வேண்டுகோளைச் சிவன்பால் செய்கின்றார்

இறைவனே, நீ என்னைக் கூற்றனுக்குக்காட்டிக் கொடுக்காதே; மேன்மேலும் பிறந்து இறந்து உழலும் பிறவிக் கடலில் என்னை அழுத்தாதே; உன் திருவடி நினையாதவர் மனையில் உணவுண்டு வாழும் சிறுமை எனக்கு வரவிடலாகாது; வேறு தீ நெறிகளில் என்னைச் செலுத்தக் கூடாது

இவ்வாறு கேட்டுக்கொண்டவர், தமதுமன நிலையை உள்ளவாறு எடுத்துரைக்கின்றார்

அடங்கா மனத்தால் இளைக்கின்றேன்; பொய்யுலகை விரும்பும் நெஞ்சத்தால் கலங்குகின்றேன்; உன் திருவடியை வணங்காதவரிடம் சென்று மயங்குகின்றேன் அடுத்தடுத்து வரும் துன்பக்கடலில் வீழ்ந்து அலைகின்றேன் உன் திருவடிபரவும் அடியார் முன் சிலர் நாத்திகம் பேசுவது கேட்டு மனம் நடுங்குகின்றேன். இவற்றை மேலும் எண்ணும்போது செய்வகையறியாதபடி திகைப்புண்டாகிறது. சிவநெறிக் கண் நிறைந்து நிற்கும் திருவருள் இப்போது உண்டோ இலையோ என்று உள்ளம் எண்ணி இளைக்கின்றது. இந்நிலைக்கு ஏற்றதொண்டு புரியலாமெனில் கூற்றுவன் குறுகினால் என் செய்வது என்ற எண்ணம் எழுந்து இளைப்பிக்கின்றது.

உடல் சிலிர்க்க உளளம் பதைக்கக் கண்ணீர் பெருக வள்ளற்பெருமான் வாய்விட்டு அரற்றுகின்றார் முன்னை வினையின் கொடுமையும் எண்ணுகின்றார். அகம் மெலிந்து. ''ஐயோ; நான் தாமரையின் நீர்போல் தயங்குகின்றேன். வள்ளலாகிய சிவபெருமான் அருள் கொடுக்க இன்னும் வரவில்லையே என்று உள்ளம் நீராக உருகுகின்றேன். உலகியல் மயக்கத்தால் என்னென்ன துன்பம் வருமோ என்று நெஞ்சம் அலைபாய்ந்து அழிகின்றேன் மண்ணக வாழ்க்கையில் சிறைப்பட்டு மீட்பார் இலலாத நிலைகண்டு விழிக்கின்றேன்''. என்று புலம்புகின்றார்.

வாழ்வாங்கு வாழும் மனை வாழ்விலும், துன்ப விடுதலைக்குரிய துறவு வாழ்விலும் கருத்து இரண்டு பட்டு வருந்துவதை உணர்கிறார்.

''விடபாகும்

ஆற்றில ஒருகாலும அடங்காச சமுசார
சேற்றில ஒருகாலும வைத்துத் தேயகின்றேன''

என்று செப்புகின்றார்.

1 - 7 - 68

இதற்குப்பற்றுக் கோடாவது சிவனது திருவருளே என்ற உண்மை புலனாகிறது. அதனைப் பெறுவது எங்ஙனம் என்ற கவலைமிகுகிறது. உலக வாழ்வே திருவருளால் உண்டாயிருதால், அவ்வாழ்விடையே திருவருளைத் தேடுகின்றார். அதுபசையற்ற பாலைவனமாய் நிலவுகிறது. திருவருளைக் காணமல் சிந்தை கலங்குகின்றார்.

'' தோற்று மயல்
பாகமுறு வாழ்க்கையெனும் பாலைவனத்து உன்அருள்நீர்த்
தாகமது கொண்டே தவிக்கின்றேன்''

என்று சாற்றுகிறார்

திருவருட்காட்சி எய்தாமைக்கு உரிய காரணத்தை எண்ணுகிறார். கண் காது முதலிய ஐம்பொறிகள் திருவருளைக் காட்டாமல் உலகியற் பொருள்களைக்காட்டி அறிவை மயக்குவதை உணர்கின்றார்.

'' —மோகமதில
போய்ப்படும் ஓர்பஞ்சப பொறிகளால் வெமபாமபின்
வாய்ப்படுமோர் தேரையைப் போல வாடுகின்றேன''

என்று வருந்துகிறார்.

பொறிவழிச் சென்ற மனம்பெண் மயக்கத்தில் பேதுறுவது காண்கின்றார்.

'' மாய்ப்பவரும்
மீன்போலும் மாதர் விழியால் வலைப்பட்ட
மான்போலச் சோாநது மடங்குகின்றேன்''

என்று கூறுகின்றார். அருள் நெறிச் சென்ற மனம் வலைப்பட்ட மான் போலத் தடைப்பட்டு உலகியலில் வாழ்விலே மடங்கினமை பற்றி வலைப்பட்ட மான் போலச் சோர்ந்து மடங்கினேன் என்று குறிக்கின்றார்.

மடங்கி நோக்கியபோது உலகவாழ்வு, சாதி சமய வேற்றுமைச் சங்கற்ப விகற்பங்கள் தனித்தனித்தோன்றி வெள்ளம் போல் பெருகி மீளாவாறு சுழித் தடிப்பதை உணர்கின்றார்.

'' —கான் போல
வீறறும்உலக விகாரப் பிரளயத்தில்
தோறறும் சுழியுட் சுழல்கின்றேன''

என்று சொல்லிச் சலிக்கின்றார்.

இந்நிலையில், உலகியற் பொருட் சார்பிலிருந்து நீங்கித் திருவருட் சார்பு கொண்ட தொண்டர் தொடர்பு தவிரவேறு பற்றுக்கோடு இல்லை என்று தெளிகின்றார். தொண்டராவார் சிவன்பால் பேரன்பும் வெண்ணீற்று நன்னெறியும் விடாப் பிடியும் உடையவர். கொலை புரியும் கள்வனாயினும் வெண்ணீறணிந்து வருவனேல் அவனிடம் பரிவு கொள்வதும், நீறணியாதவரைக் கண்டால் அஞ்சி நீங்குவதும் வெண்ணீற்று நெறியாகும். இதனைத் திருத்தொண்டர் வரலாறு முன்னமே காட்டியுள்ளது. அக்கொள்கை தன்னிடம் இருக்கிறது என்று கூறும் வள்ளற் பெருமான்,

'' ஆற்றவும் நான்
இப்பாரில்உனமேல் அன்பு இல்லெனினும் அன்பனென
ஒப்பாரியேனும் உடையேன் காண்''

என்று விளம்புகின்றா. ஒப்பாரி, ஒத்திருத்தல், திருவள்ளுவரும் ''மக்களே போல்வர் கயவர் அவரன்ன ஒப்பாரியாம் கண்டதில்'' என்று கூறுவா. வெண்ணீற்றுக் கொள்கையை,

'' தப்பாய்ந்த

மட்டு விடேன் உன்றான்மறக்கினும் வெண்ணீற்றுநெறி

விட்டுவிடேன் என்றலைக் கைவிட்டு விடேல்''

என்று எடுத்துரைத்துத் தன்னைக் கைவிடலாகாது எனச் சிவபரம் பொருளை வேண்டுகின்றார்.

தொண்டர்பால் இருக்கக்கூடாத துட்டத்தனம் என்னிடம இருப்பது கண்டு திருமால், பிரமன் தேவர்கள் முதலியோர் வந்து நின்தொண்டர் கூட்டத்தில் சேர்த்தல் கூடாது எனத் தடுப்பராயினும் நீ என்னைத் தள்ளி விடலாகாது எனறு முறையிடுகின்றார்.

'' —துட்டன் என

மாலும திசைமுகனும வானவரும் வந்து தடுத்

தாலும் சிறியேனைத் தள்ளி விடேல்''

பேரருட் கடலாகிய சிவபிரான் ''துட்டத்தனத்தைப்'' பொருளாக எண்ணுமெனினும், திருமால் பிரமன் முதலிய தேவர்கள் வந்து தடுக்கலாம்; தடுத்த செய்திகளைப் புராணங்கள் உரைக்கின்றன; அதனால்தான், ''மாலும் தடுத்தாலும் சிறியேனைத் தள்ளி விடேல'' எனறு கூறுகின்றார்.

சிவன்பால் அன்பும் வெண்ணீற்று நெறியும் உடையனாயினும், உலகியல் வாசனை யுடையவன் என்று மக்கள் இனத்தில் சிலர் தன்னைப் பற்றிச் சொல்லித் தொண்டரினத்துள் சேர்க்கலாகாது என்று தடுப்பர்; அவாகளது சொல்லைக் கேட்டுத் தன்னைப் போக்கலாகாது என்று சிவனிடம் வேண்டுகின்றா.

'' —சால் உலக

வாதனை கொணடோன என்று மற்றெவராலுமம வந்து

போதனை செய்தாலும் எனைப் போக்கி விடேல்''

என்று வணங்குகிறார் இங்கிலையில் தனக்கு மாறாய் நின்று தொண்டரினத்தில் தன்னைச் சேர்க்க விடாமல் தடுப்பவா உண்டு எனபதை நினைந்து கூறுமிடத்தும், அவர்கள் வெறுத்தோ இகழ்ந்தோ ஒரு சொல்லும் கூறாமல் திருத்தொண்டர் சார்பே நினைந்து, ''தள்ளி விடேல் ''போக்கி விடேல்'' என்பதுதான் வடலூர் வள்ளலின் வாய்மையாக இருக்கிறது. அன்றியும், அவர்,

'' —நீ தயவு

சூழ்நதிடுக என்னையும் நின் தொண்டருடன சேர்த்தருள்க

வாழ்ந்திடுக நின்தாள் மலா''

என்று தமது உட்கோளை விண்ணப்பித்து வாழ்த்துகின்றா

இங்கும் எல்லோரையும் தொண்டரினத்தில் கூட்டும் செயலில் ஈடுபடாது சிலரை விலக்கும் சிறுமையால் தேவர் முதலியோா குற்றமே எடுத்துரைத்தாலும், அவர்களை அதுபற்றி வெறுக்காமல அவரையும் அருளுதல் வேண்டும் என்ற கருத்துப் பட, ''நீ தயவு சூழ்ந்திடுக'' எனறு மொழிந்து அங்நிலையில் என்னை மறுக்காமல் நின் தொண்டர் கூட்டத்தில் சோத்துக் கொள்ளவேண்டும் என்பாராய் ''என்னையும் நின்

தொண்டருடன் சேர்த்தருள்க'' என்று இறைஞ்சுகின்றார். இங்ஙனம் தனக்குத் துணை யாய் நின்று ஊறு செயபவர்க்கும் அருளே நினையும் செம்மை நோக்கியே அறிஞர் உலகம வடலூர் வள்ளலை அருள் ஒளி வள்ளல் என்று பாராட்டுகின்றது.

தொண்டராயினா முடிவில் பெரும்பேறு சிவபரம் பொருளின் திருவடிச் சிவா னந்தப் பெருவாழ்வு ஆதலால் ''வாழ்க்திடுக நின்தாள் மலர்'' என்று திருவடியை வாழ்த்துகின்றார்.

இனி, விரிந்தது தொகுத்தல் என்றமுறையே நோக்கின இறைவன் எழுந்தருளும் இடம் கூறல், அவனது உருநலம் உரைத்தல், இல்லாத குணமெடுத்துரைத்தல், குற்றம் உள்ளன கூறல், குற்றங்களைக் குணமாகக் கொண்டருளும் இறைவன் அருட் செயல் உரைத்தல், வள்ளலார் தமது வருத்த மிகுதியுரைத்தல், தொண்டரினத்துச் சேர்க்குமாறு வேண்டல் என்று பாகுபாடுமுறையில் இவ்விண்ணப்பக் கலிவெண்பா உருவாகியுளளது.

சிவபரம பொருளின் தொண்டரினத்துள் ஒருவனாதல வேண்டுமென்ற நினைவு எழுந்தவுடன், தொண்டருள் தலைசிறந்து விளங்கும் ஞானசம்பந்தர் முதலிய பெரு மக்களை எண்ணுகின்றார்; அவர்கள் கண்டு பரவிய திருக்கோவில்களை நோக்குகின்றார். அவர்கள் வழிபட்ட திருக்கோயில்களை அவர்களின் திருமுறைகள் காட்டும் நெறியிலே வள்ளலார் மனக்கண்ணில் காண்கின்றார். அககோயிலில் எழுந்தருளும் சிவன் அருட் கோலங்களை நினைந்து வழிபடுகின்றா. வழி படுங்கால் தம்பால் இருக்க வேண்டிய குணநலங்களை எடுத்தோதி அவற்றிற்கு மாறாகத்தம்பால் உள்ளனவாக மிகப்பல குற்றங்களை இனிய எளிய சொற்களால் உரைப்பது படிப்பவா உள்ளமெல்லாம் அக் குற்றம் தம்பால் இருப்பது கண்டு நாணி வருந்தச் செய்கிறது. வள்ளலார் படுவதாகக் கூறும் துன்பம் யாவும் படிக்கின்ற நம்மனோர் மனத்தை உருக்குகின்றன. இக்குற்றங் களும் இவற்றால் விளையும் துன்பங்களும் நீங்கித் தூய இன்ப வாழ்வு பெறுவதற்குச் சிவத்தொண்டர் கூட்டத்தையடைந்து சிவஞான ஒழுக்கங்களை மேற்கொள்வதே நேரிய வாயிலாம் என்ற உண்மை ஒளிர்கிறது. அந்நிலையில் வள்ளலார்,

''—நீ தயவு

சூழ்ந்திடுக என்னையும் நின்தொண்டருடன் சேர்த்தருள்க

வாழ்ந்திடுக நின் தாள் மலர்''

என்பது மனத்துக்கு அமைதியும் இன்பமும் தருகிறது.

வாழ்க வடலூர் வள்ளல்!

சைவ சித்தாந்தத்தில் வினை

புலவர் மணி; சித்தாந்த வித்தகர்
முரு. பழ. இரத்தினம் செட்டியார்

1. இயற்கைக்கு அறிவு உண்டா?

உலகில் உயிரினங்கள் பிறந்து வளர்ந்து அழிவதைக் காண்கின்றோம். இந்நிகழ்ச்சிகள் இயற்கையில் நிகழ்வன என்றும் இவற்றை நடத்துவிக்க இறைவன் ஒருவன் இருக்க வேண்டிய தேவை இல்லை என்றும் நாத்திக அறிஞர்கள் கருதுகின்றனர். இயற்கையினிடத்தே உள்ள ஆற்றல், தானே வளர்வித்தல் அழிப்பித்தல் ஆகிய செயல்களைச் செய்யும் என்பது இவர்கள் கொள்கை.

வளர்வித்தலாகிய செயற் தன்மை அழிப்பித்தலாகிய செயற் தன்மைக்கு நேர்முரணானதாகும். இயற்கையினிடத்தே உள்ள ஆற்றலில் வளர்விக்கும் செயற் தன்மை கூடுதலான வலியுடையதாக இருந்தால், அஃது அழிப்பிக்கும் செயற் தன்மையை இயங்கவிடாமல் நிறுத்திவிடும். இதுபோலவே அவ்வாற்றலில் அழிப்பிக்கும் செயற்தன்மை கூடுதலான வலியுடையதாக இருந்தால் அது வளர்விக்கும் செயற்தன்மையை இயங்கவிடாமல் நிறுத்திவிடும். இரு செயற்தன்மைகளும் அவ்வாற்றலில் சமவலியுடையனவாக இருந்தால் இருவகைச் செயல்களுமே நடைபெறாமல் நின்றுபோகும். அறிவற்ற சடப்பொருட்டுத் தன் ஆற்றலை இருவேறு வகையாக விகற்பித்துச் செயல் படுத்தத் தெரியாது. இருக்கும் செயற் தன்மைகளை அது அப்படியே தான் வெளிப்படுத்தும். அறிவுடைய பொருட்குத்தான், தன் செயற் தன்மைகளைக் கட்டுப்படுத்தி வேண்டியவாறு விகற்பித்துச் செயற்படுத்தத் தெரியும்.

இயற்கை அறிவற்ற பொருளாக இருந்தால் அது தன் செயற்தன்மைகளை அப்படியே தான் வெளிப்படுத்தும். அப்படி வெளிப்படுத்தினால் ஏதேனும் ஒரு செயல்தான் நிகழ இயலும்; அல்லது இருவகைச் செயல்களுமே நிகழ முடியாமற் போகும். ஆனால் உலகில் இருவகைச் செயல்களும் நடைபெறுதல் கண்கூடு. எனவே இயற்கையை அறிவுடைப் பொருளாகவோ, அறிவுடைப் பொருள் ஒன்றால் அது இயக்குவிக்கப்படுவதாகவோதான் கொள்ள வேண்டியதிருக்கிறது. எப்படிக் கொண்டாலும் அது பேரறிவுப்பொருள் ஒன்றன் இருப்பினை ஒப்புக்கொண்டதாகவே முடியும். இப்பேரறிவுப் பொருளே ''கடவுள்'' என்று சொலலப்படும். இயற்கையை என்றும் உள்ள பொருளாகவே நாத்திக அறிஞர்கள் கொள்கின்றனர். எனவே பேரறிவுப் பொருளாகிய ''கடவுளும்'' யாராலும் உண்டாக்கப்படாத என்றும் உள்ள பொருள் என்பதை அவர்கள் மறுப்பதற்கில்லை.

2. கடவுள் ஏன் உலகைப் படைக்க வேண்டும்?

கடவுள் எத்தேவையும் அற்றவர். எனவே அவர் இவ்வுலகிற் காணப்படும் உயிர்களையோ, இவ்வுலக மூலகாரணப் பொருளாகிய "இயற்கை" யையோ படைக்கவேண்டிய அவசியம் இல்லை. இதனாலேயே சைவசித்தாந்தம் உயிர்களும் இயற்கையும் இறைவனைப் போலவே யாராலும் படைக்கப்படாத என்றும் உள்ள பொருட்கள் எனக் கொள்கிறது. இயற்கை, அறிவற்றதாகக் காணப்படுவதால் அது தானே பல்வேறு வகைப்பட்ட உலகமாக மாறியிருக்க இயலாதென்றும் பேரறிவுப் பொருளாகிய இறைவனே இயற்கையிலிருந்து இவ்வுலகைப் படைத்திருக்கின்றான் என்றும் சைவசித்தாந்தம் கருதுகிறது.

உயிர்கள் அறிவோடும் அறியாமையோடும் கூடியிருக்கின்றன. உலக வாழ்வால் உயிர் அறிவு விளக்கம் பெறுவதால் உயிர்க்கு அறியாமை செயற்கையாகவே இருக்க வேண்டும். இவ்வறியாமையைப் பேரறிவுப் பொருளாகிய இறைவனும் விளைவித்திருக்க மாட்டான்; அறிவு விளங்கத் துணை செய்யும் இயற்கையும் விளைவித்திருக்காது. எனவே வேறொரு பொருளே இதனை விளைவித்திருக்க வேண்டும். இப்பொருட்கு "ஆணவ மலம்" எனப் பெயர் என்றும், அறியாமையைச் செய்யும் இப்பொருள் அறிவற்ற சடமே என்றும், இப்பொருளை இறைவன் உண்டாக்கியிருக்க மாட்டானாதலால் இஃதும் யாராலும் உண்டாக்கப்படாத என்றும் உள்ள பொருள் என்றும், உயிர்கள் தம் எளிய இயல்பால் மயக்குந் தன்மையுடைய இப்பொருளை அநாதியே பற்றி அறியாமைக்குள்ளாயின என்றும், இம்மலத்தொடக்கை நீக்குவதற்காகவே தனக்கென ஒரு தேவையும் இல்லாத இறைவன் கருணை ஒன்றே காரணமாக உயிர்களுக்கு இயற்கையிலிருந்து உலகையும் உடல்களையும் படைத்தளித்திருக்கின்றானென்றும் சைவசித்தாந்தம் கூறுகிறது.

எல்லாம் வல்ல இறைவன் உயிர்களை அநாதியே ஆணவமல வயப்படாமலிருக்கும் படியோ, வயப்பட்டிருந்தாலும் உடனே விடுதலை அடையுமாறோ ஏன் செய்திருக்கக்கூடாது? என்று வினவலாம். அங்ஙனம் அவன் செய்திருக்கலாம்; ஆனால் அஃது இறைவன் தன் வல்லமையை நிலை நாட்டிய ஒரு செயலாக இருக்குமே அன்றி, அறிவுடைப்பொருட்களுக்குச் செய்த உதவியாக இருக்கமாட்டாது. அறிவுடைப்பொருட்கள் தம் அநுபவத்தாலேயே பயன் பெற வேண்டும். எனவே உயிர்கள் அநுபவம் பெறும் பொருட்டே இறைவன் உலகையும் உடல்களையும் படைத்தளித்திருக்கிறான். உயிர்கள் உடல்களைக்கொண்டு உலகில் வினைகளைச் செய்து அநுபவம் பெற்று, அவ்வநுபவத்தால் ஆணவமலக் கட்டினின்றும் விடுதலை அடைகின்றன. வினைகளைச்செய்தே உயிர்கள் ஆணவமலக் கட்டினின்றும் விடுதலை அடைய வேண்டியிருப்பதால், சைவ சித்தாந்தத்தில் "வினை" மிகச் சிறப்பான ஓர் இடத்தைப் பெறுகிறது.

3. வினைப்பயன்கள் தாமே வருமா?

"நன்மை செய்தால் நன்மை விளைய வேண்டும். தீமை செய்தால் தீமை விளைய வேண்டும் என்னும் நியதி அறிவுக்குப் பொருத்தமான ஒன்றாகும். ஆனால் உலகியலில் எத்தனையோ நல்லவர்கள் துயருறக் காண்கின்றோம், தீயவர் பலர் செழிப்போடு வாழவும் காண்கின்றோம்; இஃது உலகமெங்கனும் பரக்கக் காணப்படுவதால் புறநடையென ஒதுக்குவதற்கில்லை. இங்ஙனம் நியதி தப்பக் காரணம் என்ன?

"சந்தர்ப்ப சூழ்நிலைகள் நியதியைக் குலைத்து விடுகின்றன. நியதியைக் காப்பாற்ற வேண்டுமென்னும் கட்டாயம் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இல்லை. நல்லவர், தீயவர் எனப் பார்க்காமல் தற்செயலாக அவை உருவாவதால் சிலர் நலமுறுகின்றனர், சிலர் துயருறுகின்றனர், இஃது இயற்கை" என்று அறிவியல் வாதிகள் கூறுகின்றனர். இயற்கையை

அறிவுடைப் பொருளாகவோ, அறிவுடைப் பொருள் ஒன்றால் அஃது இயக்குவிக்கப்படுவ தாகவோ முடிவு கண்டபின் இக்கருத்துக்கு இடமில்லை. பேரறிவுப் பொருள் உலகியக்கி நடத்தும்போது சந்தர்ப்பம், சூழ்நிலைகள் எங்ஙனம் குருட்டுத் தனமாக உண்டாக முடியும்? தகுந்த காரணங்களுடனேயே அவை உருவாக வேண்டும்; நியதி தப்பாமல்தான் வினைப் பயன்கள் வரவேண்டும். நடுநிலையாளனாகிய இறைவன் உலகை நடத்தும்போது, ஒருவர் ஏழையாகவும், மற்றொருவர் செல்வராகவும், ஒருவர் நோயாளியாகவும், மற்றொருவர் உடல் நலமிக்கோராகவும் இருக்கக் காரணம் என்ன? கிறித்துவ இஸ்லாமிய சமயங்கள் இறைவன் நம்மைச் சோதிப்பதற்காகவே இவ்வாறு பேதப்படுத்தியிருக்கின்றான் என்றும், ஆகிய துன்பத்திற்குக் காரணம் சைத்தானுடைய வேலை என்றும் கூறுகின்றன. எல்லாம் வல்ல இறைவன் ஆட்சியில் அவன் இடமளிக்காமல் சைத்தானுக்கு ஆதிக்கம் இருக்க முடியாது இறைவன் நம்மைச் சோதிக்கின்றானென்றே வைத்துக் கொள்வோம். பெரும்பாலான உயிர்கள் சோதனையில் தோல்வி அடைவதையே காண்கின்றோம். திருத்தம் அடையாமல் இறந்து போகின்ற அவ்வுயிர்களின் கதி என்ன? மீளா நரகத்தில் அவை என்றென்றும் கிடக்கும் என இச்சமயங்கள் கூறுகின்றன. இக்கருத்து இறைவனின் கருணைக்கும் தன் பொருட்டாக வன்றி உயிர்களின் பொருட்டாக இறைவன் இவ்வுலகைப் படைத்திருக்கும் நோக்கத்திற்கும் ஏற்றதாகக் காணப்படவில்லை.

உயிர்கள் வினைகளைச் செய்து ஆணவ மலப்பற்றை நீக்கிக் கொள்ள வேண்டு மென்பதற்காகவே இறைவன் உலகைப் படைத்திருக்கிறான். திருத்தம் பெறாமல் இறந்து போகும் உயிர்களின் நிலை என்ன? அவை வினை ஆற்றி ஆணவ மலநீக்கம் பெற மேலும் வாய்ப்பளிக்க வேண்டும் அன்றோ? எனவே அவை மீண்டும் பிறக்கும் என்பதே பொருத்த மான கருத்தாக இருக்கிறது. இதனால் உயிர்களுக்குப் பிற்பிறவியுண்டென்று கொள்ள வேண்டியதிருக்கின்றது. ஆகவே முற்பிறவியும் இருந்திருக்க வேண்டுமென்பது தானே பெறப்படுகிறது.

இப்பொழுது செய்யும் நல்வினைக்குப் பயன் நமக்குக் கிடைக்கவில்லையென்றால், நடு நிலை தவறாத இறைவன் அடுத்த பிறவியிலாவது நமக்கு அப்பயனைத் தருவான் என்று தானே கொள்ளவேண்டும்? இது தானே அவன் ஆட்சிக்கு ஏற்ற வொன்றாக இருக்கும்? அப்படி யானால் முற்பிறவியில் செய்த வினைப்பயன் இப்பொழுது வரத்தானே வேண்டும்? எனவே முற்பிறவியில் செய்த தீவினை காரணமாகவே இப்பிறவியில் நல்லவர் துயறுகின்றனர் என்றும் இதுபோலவே முற்பிறவியில் செய்த நல்வினை காரணமாகவே இப்பிறவியில் தீயவர் நலமுறுகின்றனர் என்றும், இப்பொழுது செய்யும் நல்வினை தீவினைக்குரிய பயனைப் பிற்பிறவியில் அவர்கள் எய்துவர் என்றும் முற்பிறவில் செய்த வினைகளுக்கேற்றவாறே இப் பிறவியில் வாழ்க்கை அமையுமாதலால் மக்கள் வாழ்க்கையில் பல்வேறு வகையான ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன வென்றும், ஆகவே இறைவன் நியதியோ நடுநிலையோ தவறி எச்செயலையும் செய்யவில்லையென்றும், வினைப்பயனுக்கேற்றவாறே சந்தர்ப்பம் சூழ் நிலைகள் உருவாகின்றன வென்றும் சைவசித்தாந்தம் கூறுகிறது. இறைவன் உண்டென் றும் அவனே உலகை நடத்துவிக்கின்றான் என்றும் ஒப்புக் கொள்பவர்கள் சைவசித் தாந்தம் கூறும் இக்கருத்தினைப் பொருத்த மற்றதெனக் கூறுவதற்கில்லை. இக்கருத்தே அறிவுக்குப் பொருத்தமாக இருக்கின்றது.

சமண பௌத்த சமயங்கள் வினை உண்மையை ஒப்புக் கொள்ளுகின்றன. ஆனால் வினைப் பயன்கள் தாமே வருமென்று அவை கூறுகின்றன. வினைதானே பயனைத் தரு மென்றால் அஃது ஏன் உடனே தரவில்லை? சூழ்நிலை சரியில்லையெனால் பின்னும் சூழ் நிலை சரியில்லாமற் போகலாம் அன்றோ? தீவினை செய்த உயிர் அவ்வினைப் பயனை அனு பவிப்பதினின்றும் தப்பித்துக் கொள்ளவே முயலும். நியதி தப்பாமல் அவ்வுயிர்க்குப் பயனை ஊட்ட வினைக்கு அறிவில்லை. சட்டத்தை நிலைநாட்ட அறிவுடைய ஒருவன்

வேண்டும். சட்டம் தானே தன்னை நிலை நாட்டிக் கொள்ளாது. எனவே பேரறிவுப் பொருளாகிய இறைவனே உயிர்களின் நிலையினை அறிந்து, நியதி பிறழாமல் வினைப்பயனை ஊட்ட வேண்டும். "அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல் ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு" என்னும் சிவஞான போதவெண்பா இதனைத் தெளிவுறுத்தும்.

4. நல்வினை, தீவினை என்பவை யாவை?

"நாட்டுக்கு நாடு அறம் மாறுபடுகிறது; ஒருவர்க்குச் செய்த நல்வினை மற்றொருவர்க்குத் தீவினையாக முடிகிறது; எனவே உண்மையில் நல்வினை என்றோ தீவினை என்றோ ஒன்று இல்லை", என அறிவியல் வாதிகள் சிலர் கூறுகின்றனர். எந்த நாட்டினராயினும் அவர்க்கு மனம் என ஒன்று உண்டு. மன இரக்கத்தால் செய்யும் வினையை நல்வினை என்றும் வன்கண்மையால் செய்யும் வினையைத் தீவினை என்றும் கொள்வதே அறிவுக்குப் பொருத்தமாகும். வினையின் விளைவைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. சத்துவகுணத்தால் தூண்டப் பெற்றுச் செய்யும் வினை நல்வினை என்றும், ரஜோ தமோ குணங்களால் தூண்டப் பெற்றுச் செய்யும் வினை தீவினை என்றும், ஒருவருக்குச் செய்யும் நல்வினை மற்றொருவர்க்குத் தீவினையாக முடிந்தாலும், வினை செய்தவரின் நோக்கம் தூயதாக இருந்தால் அது நல்வினையே என்றும், செய்வாரது நோக்கைப் பொறுத்து வினைகளை முடிவு செய்ய வேண்டுமே அல்லாமல் ஏற்பவர்க்கு உண்டாகும் நலம் தீங்கைப் பொறுத்து முடிவு செய்யக் கூடாதென்றும் சைவசித்தாந்தம் சொல்கிறது. "செய்வாரது கருத்து வேறுபாடுணர்ந்து அவற்றிற்கு இசையவே முதல்வன் பயன் கொடுப்பன்" எனச் சிவஞான பாடியத்தில் சிவஞான சுவாமிகள் எழுதியுள்ள பகுதி இதனைத் தெளிவு படுத்தும்.

5. வினைப்பயன்கள் எங்ஙனம் வரும்?

நடுநிலை தவறாத இறைவன் ஆட்சியில் வினைப்பயன்கள் நியதி தப்பாமலே வரவேண்டும். அப்படியானால் அவன் ஏன உடனுக்குடன் பயனை ஊட்டக்கூடாது? ஒரு பிறவியில் செய்த வினைக்கு மறுபிறவியில் ஏன் பயன் தரவேண்டும்?

ஆணவமலப் பிடிப்பினின்றும் விடுபடுவதற்காகவே வினைசெய்யும் வாய்ப்பினை உயிர்களுக்கு இறைவன் அளிக்கின்றான். செய்த தீவினைக்கு உடனே துன்பப்பயனை ஊட்டினால் அவை பயததால் முயற்சி அவிந்து ஆணவமலததிறகுள்ளேயே அழுந்திப்போகும். செய்த நல்வினைக்கு உடனே இன்பப்பயனை ஊட்டினாலும் அவை இளபப்பெருக்கால் செயல்குன்றிப் போகும். தொடர்ந்த துன்ப அநுபவமும் சிலசமயம உயிர் முயற்சியைத் தகையும்; தொடர்ந்த இனப அநுபவமும் சிலசமயம் உயிாமுயற்சியைத் தகையும். பலகாலும் முயல்வதற்கு முன பயன கொடுததால் உயிர் அறிவில் சரியான பதிவு ஏற்படாது. முயற்சி அவியாமல் மேன்மேலும் வினைசெயதால்தான் ஆணவமலததொடர்க்கு அறும். ஒவ்வோா உயிாக்கும் அதற்கே உரிய சிறப்பியல்புகள் உண்டு. இதனாலேயே அவை பலவாக இருக்கின்றன இவ்வியல்பு வேறுபாட்டால் ஒவ்வோர் உயிாக்கும் பல்வேறு வகையான விருப்பு வெறுப்புக்கள் உண்டு. ஆணவமலப் பிடிப்பிலும வனமைமெனமை வேறுபாடுண்டு. ஒவ்வோா உயிரும் வெவ்வேறு வகையான வினைகளைச் செய்ய விரும்புகின்றன. இவ்விருப்பததைக் கவனித்து எந்தக் காலததில எந்த வினைப்பயனை ஊட்டினால உயிாமுயற்சி அவியாமல் வினைசெயயும் என்பதையும், எந்த அளவு அவ்வது இன்பதுன்பத்தைத் தாங்கும் என்பதையும் எந்த வினைபபயன அதனுடைய ஆணவமலப் பிடிப்பில் அசைவினை உண்டாக்கு மென்பதையும் ஒருங்கே அறிநது இறைவன செயலாற்றவேண்டியிருக்கிறது. இதனால் சில வினைகளுக்கு உடனேயும் பயன் ஊட்டுகிறான்; சிலவற்றிற்குக் காலம் தாழ்த்தி

ஊட்டுகிறான்; சிலவற்றிற்கு மறுபிறப்புக்களில் ஊட்டுகிறான்; ஒருசில வினைகளுக்குத் தொடர்ந்த இன்பத்தையோ தொடர்ந்த துன்பத்தையோ ஊட்டினால்தான் நலம்விளையுமென்றால் சுவர்க்கத்திலோ நரகத்திலோ இருத்திப் பின் உலகிடைப் பிறக்கச் செய்கிறான்; உயிர்கள் களைப்பெய்தாமல் இருக்கவே ஒரே பிறவியில் வினைப்பயன் அனைத்தையும் ஊட்டாமல் பல பிறவிகளில் வெவ்வேறு வகையாக ஊட்டுகிறான்.

இப்பொழுது நல்வினை செய்யும் உயிர் அதன் பயனை நுகராமல் முன்னைத் தீவினைப்பயனை நுகர்வதால் அதன் அறிவில் எத்தனையோ திருத்தங்கள் உண்டாகின்றன. இதுபோலவே தீவினையைச்செய்யும் உயிர் நல்வினைப்பயனை நுகர்வதால் பல திருத்தங்களை எய்துகிறது. காலம், இடம், உடல் முதலியன உயிரின் நலன் கருதியே மாற்றப்படுகின்றன. ஆனால் வினைநியதியை மாற்றினால் அதன் அறிவில் குழப்பம் ஏற்பட்டு முன்னேற்றம் தடைப்படும். இதனாலேயே நியதியை மாற்றாமல் ஏனையவற்றை இறைவன் மாற்றுகிறான். உடலை மாற்றினாலும் காலம், இடத்தை மாற்றினாலும், செய்த வினைக்குரிய பயனை நியதி தப்பாமல் செய்த உயிரே அநுபவிப்பதால் பயன் கிட்டுகிறது. பல்வேறு காரணங்களையும் வைத்து ஒவ்வொரு வினையின் பயனையும் அதற்கேற்ற சமயத்தில் இறைவன் ஊட்டுவதையே ''வினை பக்குவமானபின் பயன்தரும்'' எனச் சைவ சாத்திரம் கூறுகிறது. எடுத்த பிறவிக்கு முந்திய பிறவியில் செய்த வினைகளே இப்பொழுது பயனுக்கு வருமென்பதில்லை. பல பிறவிக்கு முன்செய்த வினையும் இப்பொழுது பயனுக்கு வரக்கூடும். வன்மை மென்மைபற்றி முன்செய்த வினை பின்னும், பின்செய்த வினை முன்னும் பயனுக்கு வருதல் உண்டு.

துன்பம் அநுபவிப்போரைப் பார்த்து அவரைத் தீவினையாளரென ஒதுக்குதல் பெருங்குற்றமாகும். மிகப் பல நல்வினைசெய்த ஒருவர் இன்னும் தூய்மை அடைதற்பொருட்டு ஏதோ ஒரு தீவினைப்பயனை இப்பொழுது அனுபவித்தல்கூடும். துன்பம் அநுபவிப்போர் நல்லவராக இருந்தாலும் தீயவராக இருந்தாலும் அவர்க்கு உதவி செய்வதால் நம்மைப்பற்றியுள்ள ஆணவமலப் பிடிப்பு தளரும்; உதவி செய்யாமல் ஒதுங்கிச் செல்வதால் நம்முடைய ஆணவமலப் பிடிப்பு இறுகும். ஒருவர் நல்வினையாளரா? தீவினையாளரா? என்பதை அவர் அனுபவிக்கும் இன்பதுன்பங்களை வைத்துக் கணிப்பது பெரும் பிழையாகும். அவர் உள்ளம் எவ்வளவு தூய்மையாயிருக்கிறதென்பதை வைத்தே தீர்மானிக்கவேண்டும். தீவினை செய்தோரைத் தண்டித் தொழிப்பது இறைவன் நோக்கம் அன்று; ஆணவமல நீக்கத்திற்காக இறைவன் வினைப்பயன்களை ஊட்டுகின்றானேயல்லாமல் செய்தவினையின் பயனை அநுபவித்தே ஆகவேண்டும் என்பதற்காக அன்று. தீவினைக்குப் பயனாகத் துன்பத்தைத் தருவதும் உயிரைத் திருத்துவதற்காகத்தான்; நல்வினைக்குப் பயனாக இன்பத்தைத் தருவதும் அதனைத் திருத்துவதற்காகத்தான். சைவசித்தாந்தத்தில் ''தண்டனை'' என்பது திருத்தும் செயலே அன்றி (Punishment for repentance) அழித்தொழிக்கும் (Punishment Deterrent) செயல் அன்று. இதனை ''நிக்கிரகங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது'' என்னும் சிவஞானசித்தியார் செய்யுளால் அறியலாம்

6. இன்ப, துன்ப, மோக அநுபவங்கள் என்பவை யாவை?

''இருவினை இன்பத் துன்பம்'' என்பது சிவஞானசித்தியார் வாக்கு. எனவே நல்வினைக்குப் பயனாக இன்பமும் தீவினைக்குப் பயனாகத் துன்பமும் வருதல் நியதியாகும். நல்ல உள்ளமோ தீய உள்ளமோ அமைவது செய்த வினையின் வாசனையைப் பொறுத்ததாகும். ஆனால் இன்பதுன்ப அநுபவங்கள் செய்த வினையின் பயனாகும். ''அகவளர்ச்சி வேறு; புறச்சூழ்நிலைகள் வேறு'' எனச் சிலர் கருதுகின்றனர். இது பிழையாகும். புறச்சூழ்நிலைகள் அகத்தைப் பாதித்தல் கண்கூடு. எனவே புறம் இன்றி அகம் ஒருபோதும்

வளராது. நாம் அநுபவிக்கும் இன்பதுன்பங்களாலேயே நம் அறிவைப் பற்றியிருக்கும் ஆணவமலம் நீங்கவேண்டும். உலகில் நாம் இன்பம், துன்பம் ஆகிய இருவகை அநுபவத்தை மட்டும் பெறவில்லை. வேறோர் அநுபவத்தையும் பெற்றுவருகிறோம். அதற்கு ''மோகாநுபவம்'' என்று பெயர். ''சுக, துக்க, மோகம்'' என ஒரு தொடராக இம்மூவகை அநுபவங்களையும் நூற்கள் குறிப்பிடும் மோகாநுபவத்தைத் தமிழில் ''மயக்க நுகர்ச்சி'' என்று கூறுவர்.

சிவஞானசித்தியாரில் ''சித்தமாய் அவ்வியத்தம்'' என்னும் செய்யுளில் ''புண்ணிய பாவம் சாத்துவத்து நிச்சயமும் பண்ணிவரும் சுகதுக்கமோகப் பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணிநிற்கும்'' எனக் கூறப்படுவதால் சுகம், துக்கம், மோகம் என உயிர் அநுபவம் மூன்றெனபது தெளிவு. பால உண்பவன் இன்பத்தையும் நஞ்சுண்பவன் துன்பத்தையும் மது அருந்துபவன் மோக அநுபவத்தையும் பெறுதல் கண்கூடு இன்பதுன்ப அநுபவம்போலவே மோகமும் ஒரு தனி அநுபவமாகும். ஆணவமல குணத்துள் ஒன்றாகிய ''மோகம்'' உயிர் அநுபவத்துள் ஒன்றாகிய இம்மோகத்தைப்பெற ஏதுவாக அமைகிறது. சிவஞான பாடியத்தில் சிவஞான சுவாமிகள் ''உலகியல் இன்பமாவது ஆன்மாவின் வேறாகிய மூலப்பகுதியின் கண்ணதாகிய சாத்துவிக குணம் ஆன்மாவின்மாட்டு மேற்பட்டு விளங்குதலே உலக இன்பம்; அதுவதுவாய் அழுந்தி நின்றறிதலே அநுபவம்'' என விளக்கியிருக்கிறார். சாத்துவிக குணத்தால் தூண்டப்பெற்றுச் செய்யும் வினை நல்வினை எனப்படுமாதலால், அசகுணம் மேமபட்டு விளங்க அதில உயிர் அழுந்தி நிற்கும்நிலை நல்வினைப்பயனாக வரும் ''இன்ப அநுபவம'' என்பது பொருந்தமேயாகும். எனவே ரஜோகுணம் மேமபட்டு விளங்க அதில் உயிா அழுந்தி நிற்கும்நிலை துன்ப அநுபவம என்பதும், தமோகுணம மேம்பட்டு விளங்க அதில உயிா அழுந்தி நிற்கும்நிலை மோகாநுபவம் என்பதும் இனிது பெறப்படும். இதனைச் சிவஞானபாடியம் 9ஆம் சூத்திரம் 2ம் அதிகரணத்துள், ''சத்துவகுண விருத்தியாகிய பிரகாசரூபம்.. ....சுக ரூபமாகத்தான்'' எனத் துவங்கும் உரைப்பகுதியால் அறியலாம். நல்வினைக்குப் பயனாக இன்பம்வரும் என்பதாற் தீவினைப் பயனாகவே மோகாநுபவமும் துன்பஅநுபவமும் வரும் என்பது தானே புலனாகும்.

ஆணவமலப் பிடிப்பு மிகுதியாயுள்ள உயிர்கள் நல்வினைகளைக் குறைவாகவே செய்யும். எனவே அவைகளுக்கு நல்வினைப் பயனாகிய இனபஅநுபவத்தை ஊட்டி ஊக்கம் அளிக்க இடமில்லை ஆணவமலத்தில் அசைவு உண்டாவதற்கு உயிர்கள் முயற்சி ஓயாமல் மேன்மேலும் ஊக்கத்தோடு செயலாற்ற வேண்டும். அவ்வூக்கத்தை எப்படி அளிப்பது? அவை செய்த தீவினைகளுக்கே பயனாக முதலில மோகானுபவத்தை இறைவன் ஊட்டி வினை ஆற்றுவதில ஊக்கம்கொள்ளச் செய்கிறான். இமமோகானுபவம் உயிரின ஆணவமலத்தை முதிர்விக்கும்; நனகு முதிர்ந்ததும் துனப அனுபவத்தை ஊட்டி மலத்தை நெகிழ்விக்கிறான். கண்ணிற்றோன்றிய படலத்தை மருந்தாற்றி முதிரச்செய்து பின கீறி எடுப்பதுபோல, இறைவன தீவினைக்குப் பயனாக முதலில மோகானுபவத்தை ஊட்டி மலத்தை முதிரச் செய்து பின் துன்ப அநுபவத்தை ஊட்டி, அதனை நெகிழச் செய்கிறான் மோகானுபவத்தின் பின் விளைவு துனபமேயாதலால. இதனைத் துன்பத்துள் அடக்கி இன்பம், துனபம் என அனுபவம் இரண்டென்று நூற்கள கூறலாயின. உலகியலில் கற்புடைய மனையாளோடு பகுத்துண்டு பல்லுயிரோம்பி வாழ்வதாற்பெறும் அனுபவம இன்பமாகும்; நோயாலும் பட்டினியாலும் கவலையாலும் பெறும் அநுபவம் துன்பமாகும்; பிறனில் விழைதல், வரைவின் மகளிரிடத்தே செல்லல், மதுவருந்தல, சூதாடுதல், வஞ்சகம், சூழ்ச்சியாற் பெரும் பொருள் சேர்த்தல், பொய் வழக்கில் வெற்றி பெறல், மமதையால் பிறரை அடக்கி ஆள்தல், பொய்ப்புகழ் தேடுதல, முதலியவற்றாற்பெறும் அனுபவம மோகம் ஆகும். இன்பம் நல்வினைப்பேற்றாலும் துன்பமும் மோகமும் தீவினைப்பேற்றாலும் வரும்.

"மோகானுபவம்" என ஒன்றுண்டு என்பதையும், அது தீவினைக்குப் பயனாகவரும் என்பதையும் அறியாமல், தீயவர்க்குப் பெரும்பொருள் சேர்வதைக்கண்டு அது பூர்வப் புண்ணியப்பேறு என்றும், இப்பொழுது அவர் செய்யும் தீவினைக்குப் பிற்பிறப்பில் துன்பம் அநுபவிப்பர் என்றும் பலர் தவறாகக் கருதுகின்றனர். இப்பொழுது செய்யும் தீவினைக்குப் பின்னர் பயன் அநுபவிப்பர் என்பது சரியே; ஆனால் இப்பொழுது அவர்க்குப் பெரும்பொருள் சேர்வது முன்னை நல்வினையாலா? முன்னைத் தீவினையாலா? என்பதை அவர் அச்செல்வத்தால் மோகானுபவத்தைப் பெறுகிறாரா? இன்ப அநுபவத்தைப் பெறுகிறாரா? என்பதைக் கொண்டே தீர்மானிக்கவேண்டும். முன்னைப் பிறவிகளில் தீவினை முயற்சியால் பொருள் தேட முனைந்த உயிர்களுக்கு இப்பிறப்பில் அத்தீவினை முயற்சிக்குப் பயனாக மோகானுபவத்தைப் பயப்பிக்கும் செல்வம் கிடைக்கின்றது. செல்வம் மட்டுமன்று; முன்னைத் தீவினையின் பயனாக வரவேண்டிய மோகானுபவத்தின் பொருட்டே பலர் இப்பிறப்பில் தாம் செய்யும் தீயமுயற்சிகள் அனைத்திலும் வெற்றிமேல் வெற்றி பெறுகின்றனர். இன்ப அநுபவத்தைப் பயப்பிக்கும் செல்வம் மட்டுமே முன்னை நல்வினைப்பேற்றால் கிடைக்குமென அறிதல்வேண்டும். உலகில் இன்ப அநுபவத்தைப் பார்க்கிலும் மோகானுபவமே மிக அதிகமாகும்; மோகானுபவம் ஆணவமலத்தை முதிர்விக்கும்; துன்ப அநுபவம் அதனை நெகிழ்விக்கும். இன்ப அனுபவம் இறை உணர்வை உயிர் அறிவில் பதிவிக்கும்; இம்மூவகை அனுபவங்களாலும் உயிர் மெல்லமெல்ல ஆணவமலப் பிடிப்பினின்றும் விடுபட்டு இறைவனை நோக்கிச் செல்லும்.

7. சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பவை யாவை?

சஞ்சிதம் முற்பிறப்புக்களில் செய்து அநுபவிக்கப்படாமல் எஞ்சி நிற்கும் வினைத் தொகுதியாகும். பிராரத்தம் அத்தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டு இப்பிறவியில் அநுபவத்துக்குவரும் வினைப்பகுதியாகும். இதனையே ஊழ்வினை என்று கூறுவர். ஆகாமியம் இப்பிறப்பில் செய்யப்படும் வினைகளாகும். சஞ்சிதம் தனியே வாளா கிடக்கவில்லை. புத்தி தத்துவப் பற்றுக்கோடாக அது நம்மிடையே இருப்பதால் இப்பிறவியில் வாசனாரூபமாக அது நமக்குப் பயன்படுகிறது. முற்பிறப்புக்களில் நாம் என்ன வினைசெய்திருக்கிறோம் என்பதை நமக்குத் தெரியவொட்டாமல் இறைவனின் திரோதானசத்தி மறைத்துவிடுகிறது. அப்படி மறைத்தால்தான் நாம் ஊக்கத்தோடு மேல்வினை செய்வோம். ஆனால் செய்த வினையின் வாசனைமட்டும் நம்மிடையே இருந்து இப்பிறவியில் நாம் செய்யும் முயற்சிக்குத் தூண்டுகோலாக அமைகிறது. நம்மிடத்திலுள்ள ஆணவமலப் பிடிப்பின் அளவிற்கேற்றவாறும் நமக்குள்ள தனி இயல்பு வேறுபாட்டிற்கு ஏற்றவாறும் சஞ்சிதவாசனையின் துணைகொண்டு நாம் இப்பிறவியில் செயலாற்றுகிறோம். நம்மிடத்துள்ள ஆணவமலப் பிடிப்பும் நமக்குள்ள தனி இயல்பும் நாம் செய்த சஞ்சிதவினையின் வாசனையும் முழுக்கமுழுக்க நம்முடையனவேயாதலால் நம் விருப்பத்திற்கே நாம் செயலாற்றுகிறோம் என்பது தெளிவு. இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி ஆகியவைகளால் நம் விருப்பினை மாற்றிக்கொள்ளும் போதும் அங்ஙனம் மாற்றிக்கொள்வதால் நமக்கு ஏதேனும் நலம் ஏற்படும் என்னும் கருத்தினால் தூண்டப்பெற்றே செய்கிறோம். நெருக்கடி காரணமாக நம் விருப்பத்திற்கு மாறாய்ச் செயல் செய்யும்போதும் அச்செயல் வேறேதேனும் நன்மைபயக்கும் என்னும் நம்பிக்கையாலேயே உடன்படுகிறோம். சில சமயங்களில் என்னதான் துன்பம் நிகழினும், கொண்ட கொள்கையை விடாமல் செயலாற்றி உயிர்விடவும் செய்கிறோம். எனவே எவ்வாற்றானும் நம் விருப்பம் காரணமாகவே நாம் செயல் செய்கிறோம் என்பது புலனாகும். இதனால் செயல் செய்யும் உரிமை (Free will) நமக்குண்டென்பதுதானே போதரும்.

நாம் முற்பிறப்புக்களில் செய்துள்ள வினைகளுக்குரிய பயன்களில் என்னென்ன பயன்களை ஊட்டினால் இப்பிறவியில் நமக்கு ஆணவ மல நெகிழ்ச்சி அல்லது முதிர்ச்சி ஏற்படும் என்பதை அறிந்து இறைவன் அவற்றை ஊழாக அமைக்கின்றான். எனவே

பிராரத்தமாகிய ஊழ் நாம் இப்பிறவியில் அநுபவிக்கும் இன்ப துன்ப போகங்கட்கும் அவற்றைப் பெறுவதற்குரிய காலம், அளவு, இடம், சந்தர்ப்பம், வாய்ப்பு, சூழ்நிலை ஆகியவற்றிற்கும் ஏதுவாக அமைகிறது. அப்படியானால் நாம் செய்யும் முயற்சி இப்பயனை அநுபவிப்பதற்குத் தானே துணையாகிறது. செயல் செய்யும் உரிமை நமக்கு இருப்பதாக எங்ஙனம் சொல்ல முடியும்? ஊழே முயற்சியைத் தூண்டுகிற தென்பது தானே பொருத்தமாக இருக்கும்? என்று கேட்கலாம். இறைவன் எல்லாம் அறிந்தவனாதலால் நாம் இப்பிறப்பில் செய்யப்போகும் முயற்சிகளை அறிந்து அம்முயற்சிகளுக்குப் பயனாக வரவேண்டிய ஊழ்வினைகளையும் அவை வருவதற்குரிய காலம் இடம் சந்தர்ப்பங்களையும் அமைத்துவிடுகிறானே அல்லாமல் நாம் செய்யப்போகும் முயற்சிகளைத் தடுத்து அங்ஙனம் அமைக்கவில்லை. உயிர்கள் அறிவுடைப் பொருட்கள். அவற்றின் விருப்பத்திற்கேற்பச் செயல் செய்யுமாறு துணை செய்து அச்செயலுக்குப் பயனாக முன்னை வினைப்பயனை ஊட்டினால்தான் அவற்றின அறிவில் சரியான பதிவும திருத்தமும் ஏற்படும். ஊழுக்கும் முயற்சிக்கும நடைபெறும் போராட்டத்தின் வாயிலாகத்தான் உயிர்கள் ஆணவமலக் கட்டினின்றும் விடுபடுகின்றன. ஊழே முயற்சியாகவும் முயற்சியே ஊழாகவும் இருந்தால் இப்போராட்டத்திற்கு இடமில்லை. இப்போராட்டம் இல்லையேல் உயிர்கள் முன்னேற இயலாது. எனவே ஊழ் வேறு; முயற்சி வேறு; முயற்சியை ஊழ் தூண்டவில்லை. நம விருப்பத்திற்கு நாம் முயற்சி செய்கிறோம். ஊழ் அம்முயற்சியைப் பற்றிக்கொண்டு உள்ளே நுழைகிறது. அது தனக்கே உரிய காலம் இடம் சந்தர்ப்பங்களை அமைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து பயன் தருவதால் நாம் அதன் பிடியில் அகப்பட்டுக் கொள்கிறோம். இதனால் அதற்கும் நம முயற்சிக்கும் இடைவிடாத போராட்டம் நிகழ்கிறது. இப்போராட்டம் நம்மை உய்விக்கிறது. ஊழுக்கு நம் முயற்சியை வன்மை மென்மைப்படுத்தும் ஆற்றல் உண்டு. ஆனால் இவ்வன்மை மென்மையினுக்குட்படுவதும் நம் விருப்பத்தினைப் பொறுத்ததேயாகும். முழுத் தோல்வியுற்ற பின்னரும் மீண்டும் முயல வேண்டுமென்னும் எண்ணம் நமக்கு உண்டாவதிலிருந்து இதனை அறியலாம்.

இப்பிறப்பில் நாம் செய்யும் முயற்சி ஆகாமியமாகும். இது மூவகைப்படும். இப்பொழுது செய்யும் வினை இப்பொழுதே பயன தருமானால் அது திருட்ட ஆகாமிய வினை என்று சொல்லப்படும், இப்பொழுதும் பயன் தந்து பிற் பிறவியிலும் பயன் தருமானால் அது திருட்டா திருட்ட ஆகாமிய வினையாகும்; இப்பொழுது எந்தப் பயனும் தராமல் பிற்பிறவிகளில் பயன் தருமானால் அஃது அதிருட்ட ஆகாமிய வினையாகும். ஊழ் நற்பயனையோ தீய பயனையோ தராமலிருக்கும் சமயம் நாம் செய்யும் ஆகாமிய முயற்சி அதற்குரிய அளவுக்கு மிகாமலும் குறையாலும் பயன் தரும். அப்பொழுது அஃது ஆகாமிய திருட்ட வினையாகும். ஊழ் நற்பயனையோ தீய பயனையோ, தருகின்ற காலத்தில் நம்முடைய ஆகாமிய முயற்சிக்குப் பயன் விளையாமல் ஊழ்வினைப் பயனே அதற்குப் பயனாக விளையும். அப்பொழுது நம் முயற்சிக்கு மேற்பட்ட பயனையோ, குறைந்த பயனையோ, நேர்மாறான பயனையோ, எதிர்பாராத பயனையோ ஊழ் தரும்; பயனே இல்லாத வீண் முயற்சியாகப் போகுமாறும் அது செய்யும். இங்ஙனம் ஊழ் பயனைத் தரும் பொழுது நாம் செய்த ஆகாமிய முயற்சி திருட்ட திருட்டா வினையாகவோ, அதிருட்ட வினையாகவோ நின்று பினவரும் பிறவிகளில் பயனைத் தரும். நம்முடைய விருப்பங்கள் பலவாதலால நாம் இப்பிறப்பில் செய்யும் முயற்சிகளும் பலவாறாகவே அமையும். ஒருமித்த முயற்சியோடு செய்யும் வினைகள் குறைவாகவே இருக்கும். ஆசைகள நம் முயற்சியைப் பன்முகப் படுத்திவிடுவதால் இறைவன் ஊழ்வினைப் பயனை ஊட்டியே நமக்கு ஆணவமல நெகிழ்ச்சியையோ முதிர்ச்சியையோ உண்டாக்க வேண்டியதிருக்கிறது. ஆனால் உயிர் இப்பிறப்பில் ஏதேனும் ஒரு முயற்சியில் ஒருமுகப்பட்டு மிக முனைந்து நின்று செயல் செய்யுமானால் அம்முயற்சிக்கு இப் பிறவியிலேயே பயன் நல்கினால்தான் அதற்கு ஆணவமல முதிர்ச்சியோ நெகிழ்ச்சியோ ஏற்படும். இதனால் மிக முயன்று செய்யும் முயற்சியை ஆகாமிய திருட்ட வினையாக்கி இறைவன் இப்பிறப்பிலேயே அதற்குப் பயன் நல்குகிறான் பயன் தருவதற்கு இடையூறாக இருக்கும் ஊழ்வினைப்

பயனை நீக்கியோ, காலம் தாழ்த்தியோ வரும்படி செய்கிறான். இதனையே ''ஊழை வெல்லுதல்'' என்று கூறுவர்.

இறைவனால் அமைக்கப்பட்ட ஊழை எங்ஙனம் வெல்ல முடியும்? என்று ஐயுறலாம். ஊழை அமைத்த இறைவன் அதே சமயம் உயிர்க்குச் செயல் செய்யும் உரிமையையும் வழங்கியிருக்கிறான் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். செயல் செய்யும் உரிமையை வழங்கியிருப்பதிலிருந்து, விதியை அமைத்த இறைவன் அதற்கு விலக்கையும் அமைத்திருப்பான் என்பதை அறிந்து கொள்ளலாம். உயிர்க்கு ஆணவமல நெகிழ்ச்சியோ முதிர்ச்சியோ ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் இறைவன் ஊழ்வினைப் பயனை ஊட்டுகிறானேயல்லாமல் செய்த வினையின் பயனை அநுபவித்தே தீரவேண்டுமென்பதற்காக அன்று; இது சைவ சித்தாந்தத்திற்குரிய தனிக் கொள்கையாகும். எனவே மிக முனைந்து நின்று செய்யும் முயற்சிக்குப் பயன் நல்கினால்தான் உயிர் நலனுறும். ஆகவே விதியை அமைத்த இறைவன் அதற்கு விலக்கையும் அமைத்திருப்பது பொருத்தமே ஆகும். ''ஒருமித்த முயற்சியைச் செய்து உயிர் நலன் எய்தப்பெறுவது இறைவனுக்கு முன் கூட்டியே தெரிந்திருக்கத்தானே வேண்டும். இம்முயற்சிக்கு எதிரிடையாக உள்ள ஊழ்வினைப் பயனை ஏற்கனவே அவன் எடுத்து அமைக்காமல் விட்டிருக்கலாமன்றோ?'' என்று வினவலாம். ஊழ்வினைப் பயனை எடுத்து அமைக்காவிட்டால் உயிர் முயற்சிக்கும் அதற்கும் போராட்டம் நிகழ இடமில்லை. போராட்டம் இல்லையேல் ஒருமித்த முயற்சியும் ஏற்படாது. ஆணவ மலப் பிடிப்பில் அசைவும் உண்டாகாது. ஆகவே ஊழ்வினைப் பயனை அமைத்தேதான் உயிர் முயற்சிக்குப் பயன் நல்கவேண்டும். ஊழ் செய்துள்ள வினையின்படி ஏற்பட்ட விதி; விலக்கு இனிச் செய்யப்போகும் வினைக்கு வரும் பயனாதலால் ஊழுக்குள் அஃது அடங்காது. ஆனால் இறைவனுக்கு விதி பற்றியும் தெரியும்; விலக்குப் பற்றியும் தெரியும். எனவே அவனின் முற்றறிவுடைமைக்கு இதனால் எவ்வித இழுக்குமில்லை.

மிகவும் முனைந்துநின்று செய்யும் முயற்சிக்கு இம்மையிலேயே பயன் உண்டென்பதைச் சிவஞான சுவாமிகள் சிவஞான போதம் 11ம் சூத்திரம் 2ம் அதிகரணத்தில் ''அம்முதல்வன் வேறு நில்லாது செய்வோர் செய்வனவற்றை அறிந்து அவ்வச் செய்திக்குத் தக்க பயனை மிகச் செய்யுமாயின அவ்வப்பொழுதே விளைவித்தும் அல்லுழிக் காலாந்தரத்தில் விளைவித்தும் உடனாய் நிற்பனாதலான்'' என எழுதுவதிலிருந்து அறியலாம். வள்ளுவர் 'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணியார் ஆகப் பெறின்'' எனக் கூறுகிறார். எண்ணு பவர் எவ்வளவு திண்மையுடையவராக இருப்பினும் ஊழ்வினை மாறாக இருக்குமானால் அவர் எங்ஙனம் எண்ணியவற்றை எண்ணியபடியே பெற முடியும்? 'உறுதியான முயற்சிக்கு இறைவன் ஊழ்வினையையும் நீக்கிப் பயன் தருவான்'' என்னும் அடிப்படை நியதி இல்லை யேல் வள்ளுவர் இக்குறளைக் கூறியிருக்க முடியுமா? அற நூற்கள், ''நன்மையைச் செய், நிச்சயம் நீ நன்மையையே அடைவாய்'' எனத் திட்டவட்டமாகச் சொல்லுதற்கும் இவ்வடிப் படை நியதியே காரணமாகும். ஊழை நாம் எளிதில் வெல்ல முடியாது. ஊழுக்குத்தான் நம்முடைய ஆணவமலப் பிடிப்பை அசைக்கும் வல்லமை உண்டு. எளிதில் ஊழை வென் றோமானால் நமக்கு முன்னேற்றம் இல்லாமற் போகும்; எனவே அதுதான் வெல்ல வேண்டும்; அதுவே முறையுமாகும். ஊழ் மிக்க வலிமை வாய்ந்ததாதலால் மிகப்பெரிதும் அதுதான் வெல்லும். நாம் செய்யும் முயற்சியைத் தகர்த்து அஃதே முற்பட்டு வந்து பயனைத்தரும் இதனாலேயே வள்ளுவர், ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'' எனக் கூறினார். இருந்தாலும் உயிர்க்குச் செயல் உரிமை (Free will) உண்டன்றோ? எனவே ஊழே முற்பட்டு வென்றாலும், உயிர் தளராது புலகாலும் விடாது முயலுறதாயின், அவ்வூழையும் வென்று பயனபெறும் என்னும் உண்மையை அறிவுறுத்தவே ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்'' என அவர் கூறியிருக் கிறார். இரண்டு குறட்பாக்களும் ஒன்றுக்கொன்று முரணெனக் கருதிப் பலர் அமைவுரைகள் எழுதியுள்ளனர். இவ்விரண்டு குறட்பாக்களும் இரண்டு சைவசித்தாந்த அடிப்படை உண்

மைகளை அப்படியே தெரிவிப்பனவாதலின் இவற்றிற்கு எந்த அமைவுரையும் வேண்டியதில்லை. குறட்கள் இருந்தவாறே பொருள் கூறுவதுதான பொருத்தமாகும். ''ஊழையும் உப்பக்கம் காண்பர்'' எனனும் குறளால் வள்ளுவர் ''ஊழ்வேறு, முயற்சி வேறு'' என்பதையும நமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இறைவனிடத்தே நமக்கு வேண்டுவனவற்றை உருக்கத்தோடு ஒருமை மனதுடன் கேட்பதும் ஒருமித்த முயற்சியே ஆகும். ''ஒருமித்த முயற்சிக்கு இறைவன் பயன் நல்குவன்'' என்னும் அடிப்படை நியதியை உளததிற்கொண்டேதான் இம்மையே தரும் சோறும் கூறையும்'' எனச் சுநதரரும், ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என நாவுக்கரசரும அருளியிருக்கின்றனர். '' சிந்தையால நினைவார வினைதேயுமே'' என வரும் தேவாரத்திற்குச் ''சஞ்சித, ஆகாமிய வினைகள்தேயும்'' என உரை எழுதுபவா உண்டு. பிராரத்தமாகிய ஊழ் வினையைச் சோத்தெழுதுவதற்குச் சைவசித்தாந்திகள அஞ்சலாமா? ''ஒருவனுர் அடியாரை ஊழ்வினை நலியவொட்டார்'' எனச் சுந்தரர் தெளிவாக ''ஊழ்வினை'' எனறே குறிப்பிட்டிருக்குமபோது பிராரத்தத்தைச் சேர்த்து எழுத ஏன அஞ்சவேண்டும? 'நினைந்துருகும அடியாரை நைய வைததா'' என்பது அடியாாகட்கு இன்னும கூடுதலாக ஆணவமல நெகிழ்ச்சி ஏற்படும் பொருட்டு இறைவன் சிறிது காலம் தாழ்த்தி அருளபுரிவதைக் குறிக்குமே அனறி அவர்கள் வேண்டுவனவற்றை நல்காமல் ஊழ்வினையால நையவைப்பான் என்பதைச் குறிககாது. அப்படிக் குறிக்குமாஞல் அதற்கு அடுத்து வருகினற ''நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தா'' எனபதற்கு என்ன சொல்வது? உலகியல் இனபம் வேண்டுவார்க்கும் இறைவன் திருவருள் செய்வன் என்பதை நாவுக்கரசர், ''ஈட்டும் மாநிதி சால இழக்கினும், வீட்டும் காலன் விரைய அழைக்கினும், காட்டின் மாநடமாடுவாய் காவெனில், வாட்டந் தீர்க்கவும் வல்லர் மாற்பேறரே'' என விளக்கமாகக் கூறியருளியிருக்கிறுர். இப்பாடல ஊழ்வினையால்வரும துன்பத்தினை நீக்குவதுபற்றித்தானே பேசுகிறது. இப்பொழுது வேண்டிஞல் மறுமையில் அருளுவாா எனச் சிலா் கூறுவர். பரிமேலழகர் கூட ''வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்'' என்னும் குறளுக்கு ''ஈண்டு என்பதால் மறுமையில் வேண்டியவற்றைப் பெறலாம்'' என உரை எழுதியுள்ளார். இங்ஙனம எழுதுவனயாவும் இறைவன் திருவருளுக்கு இழுக்கு என்பதை உணர்ததயே நாவுக்கரசர் ''இம்மை அம்மை என இரண்டும் இவை, மெய்மை தானறியாது விளம்புவா, மெய்மையால் நினைவார்கள் தம் வல்வினை, வம்பின தீர்ப்பர் கண்டீர் வன்னியூரரே'' எனக்கூறியருளியிருக்கிறுர். எனவே ஊழ்வினை நீக்கம் சைவசித்தாந்தக் கொள்கைகளுள ஒன்றெனபது தெளிவு.

அறவாழ்க்கையால் ஆணவமல நெகிழ்ச்சி உண்டாகும். எந்த அளவுககு நெகிழ்ச்சி உண்டாகிறதோ அந்த அளவுக்கு ஊழ்வினையின் தாக்குதல் குறையும். நல்லொழுக்கம் நறசிந்தை, பிறர்நலமபேணல் உயிர்களிடத்தன்பு கொள்ளல ஆகியவைகளால் நெகிழும் ஆணவமலம இறை வழிபாட்டால் அதிகமான நெகிழ்ச்சிக்குள்ளாகும். ஆகவே உண்மையான உருக்கமிகக இறை வழிபாடு ஊழ்வினையின் கடுமையைக் குறைததுக் கொளளுதற்கும் ஒரு சில ஊழ்வினைப் பயனை முழுதும் வெல்லுதற்கும் தலைசிறந்த சாதனமாகும. ஊழ்வினையின் தாக்குதல் பல்காலும் இருந்து கொண்டேதான் இருககும். பிறழாத அறவாழ்க்கையாலும் தளராத இறைவழிபாட்டாலும் சிறுகச் சிறுகததான் அதனை நாம் வெல்ல வேண்டும்.

மனததால எண்ணுவதும வினையே; வாககால சொல்வதும் வினையே; உடலால் செய்வதும் வினையே. அபுத்தி பூாவமாகச் செய்த தீவினைப் பயன்கள் நாம் செய்யும் நல்வினைகளால் தாமே நீங்கிப் போகும. ஆஞல் புத்திபூர்வமாகச் செயத நலவினை தீவினைப் பயனகள் இரண்டையும் நாம் அநுபவித்தே ஆகவேண்டும். ஒன்ருல் ஒன்று நீங்காது. இருந்தாலும் நல்வினைக்குரிய பயனை விரும்பாமல தீவினை தீர்தற்குரிய கழுவாயாக அறநூலில் விதித்த முறைப்படி நல்வினையைச் செய்தால் அத்தீவினை கழியும்.

இது சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய சிவப்பிரகாசத்தில் கூறப்பட்டுள்ள கருத்தாகும். இதற்கு வேறு விதமாக உரை செய்வோரும் உண்டு. எப்படி உரை கூறினாலும் தீவினைக்குக் கழுவாய் உண்டு என்னும் வேதாகம விதியை மறுப்பதற்கில்லை. மதுரைச் சிவப் பிரகாசர் "தீவினைக்குக் கழுவாய் செய்தால் அத்தீவினையின் கௌரவம் கெட்டுத் தோஷம் நிற்கும்" என உரை கூறுகிறார். "அதாவது தீவினைக்குரிய நரகவேதனை நீங்கும், ஆனால் மறுபிறவியில் அதற்குள்ள துன்பம் வரும்" என்பது சிவப்பிரகாசர் கருத்து. இப்படிச் சொன்னாலும் தீவினையின் கடுமையைக் குறைத்துக் கொள்ளலாம் என்னும் கருத்தே பெறப்படுகிறது. குறைத்துக் கொள்ள வழியிருக்கும்போது நீக்கிக் கொள்ளவும் வழியிருக்கத்தானே வேண்டும்? எனவே உமாபதி சிவம் சிவப் பிரகாசத்தில் "விதியும் உண்டு; விலக்கும் உண்டு" என்னும் சைவ சித்தாந்தக் கொள்கையினையே தெளிவுறுத்தியிருக்கிறார் என்பது தேற்றம்.

8. இருவினை ஒப்பு என்பது என்ன ?

வினைகளை ஆற்றி ஆற்றி, இன்ப, துன்ப, மோக அநுபவங்களைப்பெற்று வரும் உயிர் சிறுகச் சிறுகப் பயன் குறியாது வினை ஆற்றும் பக்குவத்தினைப் பெறும். இதனால் ஆணவமல நெகிழ்ச்சி மிகுதியும் ஏற்பட்டு நல்வினை தீவினை இரண்டையுமே ஒப்ப நோக்கி அவற்றால் வரும் இன்ப துன்பங்கள் இரண்டையுமே பொருட்படுத்தாமல் பற்றற்று இறையருளை நாடி நிற்கும் நிலை அதற்கு உண்டாகும். உயிர்தன் அறிவில் இருவினைகளையும் ஒப்ப நோக்கிப் பற்றின்றி வாழ்தலையே "இருவினை ஒப்பு" என்று கூறுவர். இருவினையையும் ஒப்ப நோக்கி இறையருளை நாடி நிற்கும் உயிரின் பக்குவம் கண்டு இறைவனே குருவாக வந்து காட்சி கொடுத்து அதற்கு ஞானத்தை உணர்த்துவன். ஞான சாதனை செய்து முற்றிய உயிர் நிட்டை கூடப் பெற்று இறை இன்பத்தில் என்னென்றும் திளைத்திருக்கும். உடலினை விடுத்ததும் பரமுத்தியினை அடையும். இஃதே உயிர் இறுதியில் அடையும் பெருநிலையாகும்.

9. சீவன் முத்தர்கள் ஊழ்வினைப் பயனை அநுபவிப்பதுண்டா ?

சீவன் முத்தரென்பவர் சாதனை நிலையையும் கடந்து நிட்டை கூடப்பெற்று உடலிருக்கும்போதே பரமுத்தி அநுபவம் கைவரப் பெற்றவராவார். சாதனை நிலையில் நிற்போர்க்கும் நம்மைப் போன்றோர்க்கும் தம் முயற்சி உண்டு; இதனால் ஊழை அநுபவிக்கவும் அதனை வெல்லவும் வாய்ப்பு இருக்கிறது. சீவன் முத்தர்க்குத் தம் முயற்சி இல்லை; எனவே ஊழை வெல்லும் முயற்சியில் அவர் ஈடுபடுவதற்கு இடமுமில்லை; அவர் ஊழை அநுபவிக்க வேண்டிய அவசியமும் இல்லை. பரமுத்தி அனுபவம் கைவரப் பெற்ற அவர்தம் விருப்பத்திற்கு உடலை வைத்திருக்கவில்லை. தம்மை மறந்து நிட்டையில் நிற்கும் அவர்க்கு அவ்விருப்பம் எங்ஙனம் நிகழ இயலும். எனவே இறைவனே நிட்டையில் நிற்கும் அவரைப் புறமுகத்திற்குக் கொண்டுவந்து உடலோடு உலகிடை உலவச் செய்கின்றான். சீவன் முத்தர் மிகப் பெரிய நிலையை எய்திவிட்டாலும் அவர் அந்நிலையை எய்துதற்குத் துணை நின்ற உயிர்கள் எத்தனையோ இருக்கும். முன்னைவினைத் தொடர்பால் அவ்வுயிர்களுக்கு நலம் செய்யச் சீவன் முத்தர்கள் கடமைப் பட்டுள்ளார். தம்மை மறந்து நிற்கும் சீவன் முத்தர் அவ்வுயிர்களை நினைவு கூர்தற்கு இயலாது. ஆகவே அவர்க்காக இறைவனே அவ்வுயிர்களைப்பற்றி நினைவு கூர்ந்து அவை நலம் பெறுதற் பொருட்டுச் சீவன் முத்தரிடத்தே அந்த அளவிற்கு வேண்டிய பிராரத்த வினைப் பயனை ஊட்டி அவரைப் புறவுலகிற்குக் கொண்டு வருகின்றான். இந்த பிராரத்த வினைப்பயன் தீரும் வரைக்கும் அவர் இவ்வுலகில் இருக்கவேண்டியதாகிறது. புறவுலக உணர்வு வரப்பெற்ற சீவன் முத்தர் இறை வழிபாட்டிலும் சிவனடியார் கூட்டுறவிலும் தம்மை ஈடுபடுத்தி விடுவராதலால் அவர்க்கு இறைவன் ஊட்டுகின்ற பிராரத்த வினையும் தொடக்காக நிற்காமல் வாசனையாகவே நிற்கும். வாசனையாக இருப்பதால் அவரைப் புறமுக உணர்வில் நிறுத்தி வைப்பதற்குத்தான் அது

பயன் படுமே அன்றி அவர் அறிவில் அநுபவத்தினைப் பதிவிக்க அது பயன் படாது. எனவே சிவன் முத்தர்க்குப் பிராரத்த வினைப்பயன் உயிர் அநுபவமாக நிகழ இடமில்லை. அவர் அவ்வினையினை அநுபவிக்காமையால் அஃது உடலூழாய்க் கழிகின்றதெனச் சாத்திரம் கூறுகிறது. உடல் சடமாதலால் அதற்கென்று தனி அநுபவம இருப்பதற்கில்லை. பிறர் பார்வைக்கு அவர் உடலில் அவ்வநுபவம் காணப்படுவதையே ''உடலூழ்'' எனச் சாத்திரம் பெயரிட்டிருக்கிறது.

பிற உயிர்க்கு நலம் செய்யும்பொருட்டே சிவன் முத்தர் உலகிடை உலவுவர் என்பதை உமாபதி சிவம் ''கள்ளத்தலைவர் துயர் கருதித் தங்கருணை வெள்ளத்து அலைவர் மிக'' எனத் ''திருவருட் பயனில்'' தெளிவுபடுத்தியுள்ளார். எனவே அவர் உடலிடம் காணப்படும் அவ்வநுபவமும் அவரைப் பெருமைப் படுத்துவதாயிருக்குமே அன்றிச் சிறுமைப் படுத்துவதாக இருக்காது. சிவன முத்த நிலைக்கு அடுத்தபடியில் நிற்கும பெரியோர்க்கு எஞ்சி நிற்கும் மலத் தொடக்கைத் துடைப்பிப்பதற்காகப் பிராரத்த வினைத் துன்பங்கள் வருதல் கூடும. ஆனால் இம்மையிலேயே பரமுத்தி அநுபவம் கைகூடிய சிவன் முத்தர்க்கு மலத் தொடக்குச் சிறிதும் இருக்காதாதலால் அவரைச் சிறுமைப் படுத்தும் பிராரத்த அநுபவம் அவர் உடலளவாகவும் காணப்படாதென நாம் அறிந்து கொள்ள வேண்டும் சிவன் முத்தர் திருமேனி மாயா காரியமாக இருப்பினும் அருளாற்றல் உடையதெனபதைச் சிவஞான பாடியத்தில் ''முதல்வனுக்குத் திருமேனியாகிய சைதன்னியம் முதல்வனைச் சார்ந்து அவ்வண்ணமாய வழி அவ்வுடம்பும் அவ்வாறு அருள் மயமே ஆதலின்'' எனக் கூறியிருப்பதிலிருந்து அறியலாம். இதனால் அவர் உடலிடைக் காணப்படும் பிராரத்த அநுபவமும் பிறர்க்கு அருளாற்றலைப் புலப்படுததுவதாகவே அமையும் என்பது தெளிவு. சிவன் முத்தர் நினைவெல்லாம் சிவநினைவே ஆதலால் சஞ்சிதவாசனைக்கு இடமில்லை. இதனாலேயே அவர்க்குக் குருநாதன் தோன்றிய அளவில் அக்குருநாதன் பார்வையால் சஞ்சிதம் எரிந்து போகிறது. பிராரத்தமோ உடல் அநுபவமாக நின்று கழிந்து போகிறது. ஆகாமியமோ, அவர், தம் முனைப்பின்றிச் செயல் செய்வதால் ஏற முடியாமற் போகிறது. அவர் செய்யும் ஆகாமிய வினைப்பயன்களை அவர்க்கு நன்மை தீமை செய்தோர் அநுபவிக்குமாறு இறைவன் பகிர்ந்தளித்து விடுகிறான். இவ்வாறு சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம் ஆகிய மூன்றும் சிவன் முத்தரைவிட்டு நீங்குகின்றன. ''ஏன்றவினை உடலோடு ஏகும்'' என்றும், ''ஞானிகளும் பிராரத்தை அநுபவித்தே கழிக்க வேண்டும்'' என்றும் கூறுவது, சிவன் முத்த நிலையை வைத்துச் சொலலப்படும் கருத்தாதலால் சாதனையில் நிற்போரும் நம்மைப் போன்றோரும் இறைவழி பாட்டாலும விடா முயற்சியாலும் பிராரத்த வினையாகிய ஊழை ஒரோவழி வெல்ல இயலும் என்னும் கருத்து இதற்கு முரணன்று என்பது புலனாகும்.

ஒவ்வோர் உயிரும் பிறவிகள் தோறும் பக்குவம் பெற்று இறுதியில் மாயை கன்மம் ஆணவமலம் ஆகியவற்றின் தொடக்குமுழுதும நீங்கப் பெற்று பிறவாப் பெருநிலையெய்தி மாறாத இறை இன்பத்தில் என்றும் நிலைபெற்றிருக்கும் என்பது சைவசித்தாந்தத்தின் தனிப்பெரும் கொள்கையாகும்.

அருட்பிரகாசத் திரட்டு

(அருட்பா அலங்கல்)

தொகுத்தோர்: பேராசிரியர், பத்மபூஷண் பெ. தூரன்

உரை : ஔவை. நடராசன்

திருவருட் பிரகாச வள்ளற்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய
தேமதுரப் பாக்களின் தொகுப்பு

11

நீ என்றும் எனைவிடா நிலை அருள் !

ஈஎன்று நான்ஒருவர் இடம்நின்று கேளாத
இயல்பும்என் னிடம்ஒருவர்ஈ
திடுஎன்ற போதவர்க் கிலைஎன்று சொல்லாமல்
இடுகின்ற திறமும்இறையாம்
நீஎன்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உள்
நினைவிடா நெறியும்அயலார்
நிதிஒன்றும் நயவாத மனமும்மெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும்உலகில்
சீஎன்று பேய்என்று நாய்என்று பிறர்தமைத்
தீங்குசொல் லாததெளிவும்
திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்
திருவடிக் காளாக்குவாய்
தாய்ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

—தெய்வமணிமாலை 9

எனக்கு இதனை அளிப்பாயாக என்று ஒருவரிடம் இரங்கிக் கெஞ்சும் இழிவான நிலையும், இதனை எனக்குக் கொடு என்று ஒருவர் என்னிடம் வேண்டும்போது அவர்க்கு இல்லை என்று மறுக்காமல் அதனைக் கொடுக்கும் மன நெகிழ்வையும், என் குணஞ் செயல்களால், என்னை

டத்தில் தங்களுக்கு அன்பு நீங்காத நன்னிலையும், எந்நாளும் இறைவனின பெருங்கருணையை நினைந்து வழிபடும் பக்தி நினைவு எனனைவிட்டு நீங்காத உணர்வையும், பிற பொருளை இச்சியாத மனமும் உண்மை ஒழுக்கத்திலிருந்து எனறும் பிறழாத திண்மையும், பிறரைச் சினந்து இகழ்ந்து குற்றம் காணாத, மனத் தெளிவையும, உறுதியோடு இணைந்த வாக்குத் தூய்மையும், மனமாசற்ற மாண்பும் எனக்கு விளையுமாறு அருள் புரிந்து உன் திருவடியில் சேர்த்தருள்வாயாக! அனனை போல அன்புரிமை கொண்டு மக்களை வாழச் செய்யும் சென்னை மாநகர் கந்தகோட்டத்தில் விளங்கும் கந்தவேளே!

12

அடியார் அடைவது:

பார்கொண்ட நடையில்வன் பசிகொண்டு வந்திரப்
பார்முகம் பார்த்திரங்கும்
பண்பும்நின் திருவடிக் கன்பும்நிறை ஆயுளும்
பதியும்நல் நிதியும்உணர்வும்
சீர்கொண்ட நிறையும்உட் பொறையும்மெய்ப் புகழும்நோய்த்
திமையொரு சற்றும்அணுகாத்
திறமும்மெய்த் திடமும்நல் இடமும்நின் அடியர்புகழ்
செப்புகின் றோர்அடைவர்காண்
கூர்கொண்ட நெட்டிலைக் கதிர்வேலும் மயிலும்ஒரு
கோழியங் கொடியும்விண்ணோர்
கோமான்தன் மகளும்ஒரு மாமான்தன் மகளும்மால்
கொண்டநின் கோலமறவேன்
தார்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே

—தெய்வமணிமாலை 12

திரு முருகப் பெருமானே! புகழ் பொலியும் சென்னையில் கந்தகோட்டத்தில் விளங்கும் கந்தவேளே! குளிர்ச்சியும், தூய்மையும், அதோமுகமும் கோலமாகக் கொண்டுள்ள கடவுள் மாமணியே! முனை சிறந்துள்ள கூர்மையான ஒளி வீசும் வடிவேலையும், ஆடும் மயிலையும், சேவற் கொடியினையும் விண்ணவர் தலைவனுகிய இந்திரன மகளாகிய தெய்வயானையையும், அழகிய மான் வயிற்றில் உதித்த மான் மகளாகிய வள்ளியையும், உடன் கொண்டு திருக் காட்சி வழங்கும் உன் அழகிய கோலத்தை நான் எந்நாளும் மறவேன். உன் அடியார் புகழைச் சொல்பவர்கள் எவ்வளவு பயன் பெறுவார்கள்! உலகியலில் கொடுமையான பசியால் வாடி வருந்திக் கையேந்தி நிற்பாரின் பசித்த முகத்தைப் பார்த்ததும் இரங்குகின்ற கருணை மனமும், உன் திருவடியைத் துதிக்கும் அன்பும, அவ் அன்பில் திளைக்கும் நெடிய வாழ்வும், வாய்ந்த மன நிறைவும், சகிப்புணர்வும், பொன்றாத புகழும், நோயும் கொடியும் அற்ற உறுதியான உடலுரமும், நிலையான இன்ப நிலையாகிய வீடு பேறுகிய இடமும் அவர்கள் உறுதியாகப் பெறுவார்கள்.

இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ்

13

குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் குணம்.

கற்றமே லவரொடும் கூடிநில் லேன்கல்வி
கற்கும்நெறி தேர்ந்துகல்லேன்
கனிவுகொண் டுனதுதிரு அடியைஒரு கனவினும்
கருதிலேன் நல்லன்அல்லேன்
குற்றமே செய்வதென குணமாகும் அப்பெருங்
குற்றம்எல் லாமகுணம்எனக்
கொள்ளுவது நின்அருட் குணமாகும் என்னில்என்
குறைதவிர்த் தருள்புரிகுவாய்
பெற்றமேல் வரும்ஒரு பெருந்தகையின் அருள்உருப்
பெற்றெழுந் தோங்குசுடரே
பிரணவா காரசின் மயவிமல சொரூபமே
பேதமில பரப்பிரமமே
தற்றகைய சென்னையில கந்தகோட் டத்துள்வளர்
தலமஓங்கு கநதவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

—தெய்வமணிமாலை 24

சென்னை மாநகரில் கந்தகோட்டத் தலத்தில் காட்சி வழங்கும் கந்தப் பெருமானே! தன்மையும், தூய்மையும் (உண்மையும்) அதோமுகமும் வடிவாக இலங்கும் சண்முகத் தெய்வமணியே.

கற்றுவல்ல சான்றோர்களோடு நான் கலந்து பழகியவனல்லன். கல்வி கற்க வேண்டிய நெறிமுறை அறிந்து பயின்றவனல்லன். மனங்கனிந்து உன் திருவடியைக் கனவிலும் நினைக்கவில்லை. குற்றம் செய்வதுதான் என் இயல்பாகும். நான் செய்யும் பெருங் குற்றங்களையெல்லாம் குணமாகக் கொண்டு அருள் புரிவது உன் திருவருளாகும். என்னிடத்தே உள்ள குறைகளை நீக்கி அருள் புரிவாயாக. வெள்ளெருதின் மேல் இவர்ந்து வரும் பெருமானின் அருளே மீண்டும் வடிவம் கொண்டு உலகம் உய்யுமாறு தோன்றிய சுடரே! பிரணவாகார சின்மய விமல சொரூபமே! பேதமிலாத பரப்பிரம்மமே!

இளங்குழந்தை ஏதாவது தவறு செய்தால் நான் செய்யவில்லை என்று கூறுவது இயல்பு. குற்றங்களை மறைக்கவே அனைவரும் விரும்புவர். பிறர் செய்த குற்றங்களையும் தாம் செய்த குற்றமாக எண்ணி அவற்றுக்கென வருந்துவது ஒப்பற்ற சான்றோர்களின் உயர்ந்த நெறியாகும். அவ்வகையில் கற்றோர் கழகம் கலக்காதவர்கள், கல்விநெறி அறியாதவர்கள், கனிவோடு திருவடி வணங்காதவர்கள் ஆகியோர் குற்றங்களையும் தம் குற்றமாகக் கூறி வள்ளலார் அவர்கள் சார்பில் இறைஞ்சுவது நெஞ்சை உருக்குவதாகும்.

1 – 7 – 68

14

பிரமன் இனி பிறப்பிப்பானு ?

பிரமன்இனி என்னைப் பிறப்பிக்க வல்லனே
பெய்சிறையில் இன்னும்ஒருகால்
பின்பட்டு நிற்குமோ முன்பட்ட குட்டில்
பெறுந்துயர் மறந்துவிடுமோ
இரவுநிறம் உடைஇயமன் இனிஎனைக் கனவினும்
இறப்பிக்க எணணமஉறுமோ
எண்ணுறுன் உதைஉண்டு சிதைஉண்ட தன்உடல்
இருந்தவடு எண்ணுறுனே
கரவுபெறு வினைவந்து நலியுமோ அதனைஒரு
காசுக்கும் மதியேன்எலாம்
கற்றவாகள் பற்றும்நின் திருஅருளை யானும்
கலந்திடப பெற்றுநின்றேன்
தரமருவு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துயயமணி உண்முகச் சைவமணி
சண்முகத தெய்வமணியே.

—தெய்வமணிமாலை 27

தகுதி நிறைந்த சென்னைமாநகரின் கந்தகோட்டத்துள் காட்சி அருளுகின்ற கந்தப் பெருமானே! வரம்பில்லாத் தன்மையும், தூய்மையும் உண்மையான அதோமுகமும் அழகு முகங்களாகக் கொண்டு அருட்காட்சி வழங்குகின்ற சிவவிளக்காகிய சண்முகமணித் தெய்வமே!

எல்லாப் பொருளையும் கற்றுத் தெளிந்த சான்றோர்கள் இறுகப் பற்றியுள்ள நின் திருவருள் வலத்தை என்பால் நானும பெற்றிருக்கின்றேன். இந்நிலையில் உன் திருவருளால் ஆளாக்கப்பெற்ற என்னை மீண்டும் இவ்வுலகத்தில் பிறப்பிக்க பிரம்மதேவனால் முடியுமா? அப்படி அறியாது செய்து அவன் மீண்டும் சிறை செல்லவா விரும்புவான்? முன்னொரு முறை அவன் நின்பால் பெற்ற தலைக்குட்டினால் அடைந்த துயரத்தை மறந்தா போனான்?

நள்ளிரவைப்போல கருநிறமுடைய எமனும் என் உயிரை வாங்க வேண்டுமென்று கனவிலாவது கருதுவானு? கருதமாட்டான். முன்னொருகால் உன்னொரு காலால் மிதிபட்டு, உதைபட்டு, வதைபட்டு, ஏற்ற வடுவினை அவன் எண்ணிப் பார்க்கவா மாட்டான்? கள்ளமாக வந்து வினைகள் எனை வாட்ட நினைக்குமா?

உன்னை மட்டுமே மதிக்கின்ற நான் இவைகளை மதிக்கவா செய்வேன்!

இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிழ்

15

வெற்று வாழ்வு எனக்கு வேண்டாம்

எத்திக்கும் என்உளம் தித்திக்கும் இன்பமே
என்உயிர்க் குயிராகும்ஓர்
ஏகமே ஆனந்த போகமே யோகமே
என்பெருஞ் செல்வமேநன்
முத்திக்கு முதலான முதல்வனே மெய்ஞ்ஞான
மூர்த்தியே முடிவிலாத
முருகனே நெடியமால் மருகனே சிவபிரான்
முத்தாடும் அருமைமகனே
பத்திக் குவந்தருள் பரிந்தருளும் நின்அடிப்
பற்றருளி என்னைஇந்தப்
படியிலே உழல்கின்ற குடியிலே ஒருவனுப்
பண்ணுமல் ஆண்டருளுவாய்
சத்திக்கும் நீர்ச்சென்னை கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

—தெய்வமணிமாலை 30

எவ்வகையெல்லாம் நான எண்ணினும் அவ்வகையெல்லாம் ஆறாத இன்ப அமுதைப் பொழிந்து, என் எண்ணங்களை இனிப்பாக்குகின்ற இன்பமே!

என் உயிர்க்குயிரான தனி முதல்வனே! இன்ப வெள்ளமே! யோகமே! எனக்குக் கிடைத்த கிடைத்தற்கரிய செல்வமே! முத்தி இன்பத்துக்கும் மூலமான முழுமுதற்பொருளே! மெய்ஞானத் தலைவனே! புகழ் முடிவிலலாத முருகனே! திருமால மருகனே! சிவபெருமான் கனிவோடு உன் கனிவாய் கனிவாய் என வேண்டி முத்தமிட்டு மகிழும் அருமந்த செல்வமே!

அன்பர்களின் வழிபாட்டுக்கு மகிழ்ந்து பரிவோடு அருள் வழங்கும் உன் திருவடிப் பேற்றினை எனக்கு வழங்குவதோடு, இந்த உலகத்தில் இந்த விதமாக வெற்று வாழ்வு வாழும் ஒருவனாக இனியும் செய்யாமல் என்பால் ஏற்றருள்வாயாக!

அருள் மறந்து வாழும் இவ்வுலக வாழ்வினை வெற்று வாழ்வெனக் கூறி இவ்வாழ்வி லிருந்து என்னை எடுத்தருள்க என வேண்டுகிறார்.

16

நான் கொண்ட விரதம் பிறரை நாடாமை!

நான்கொண்ட விரதம்நின் அடிஅலால் பிறர்தம்மை
நாடாமை ஆகும்இந்த
நல்விரத மாம்கனியை இன்மைஎனும் ஒருதுட்ட
நாய்வந்து கவ்விஅந்தோ

தான்கொண்டு போவதினி என்செய்வேன் என்செய்வேன்
தளராமை என்னும் ஒருகைத்
தடிகொண்டு அடிக்கவோ வலியிலேன் சிறியனேன்
தன்முகம் பார்த்தருளுவாய்
வான்கொண்ட தெள்அமுத வாரியே மிகுகருணை
மழையே மழைகொண்டலே
வள்ளலே என்இருகண் மணியேஎன் இன்பமே
மயில்ஏறு மாணிக்கமே
தான்கொண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

—*தெய்வமணிமாலை 31*

தானே விரும்பி எழுந்தருளியுள்ள சென்னைமா நகரில் கந்த கோட்டத்தில் வீற்றருளும் கந்தப் பெருமானே, காண்பார் கண்கள் களிவை ஏறிட்டுக்கொள்ளுமாறு கருணை ததும்பும் தன்மையும், முழுத் தூய்மையும் பெற்று விளங்கும் மணியே, ஐந்து முகங்களோடு ஆறுமுகமாகிய அதோமுகத்துடன் காட்சி வழங்கும் சைவ மணியே! சண்முகத்தெய்வமணியே! மயில் மீது வரும் மாணிக்கமே! என் நினைவான இன்பமே! என இரு கண்களின் மணியே! எந் நிலையில் உள்ளவாகரும் அருளின்பம் வழங்கும் வள்ளலே, வானம் முகந்து கொள்ள வழங்கும் தெள்ளிய அமுதக் கடலே, அக்கடல வழங்கும் அமுத மழையே, அமுத மேகமே, இந்தச் சிறியவனபால் கடைக்கணித்தருள்வாய் நின் திருவடித் தாமரைகளைத் தவிர பிற எவற்றையும் புகலெனக் கருதாமல கிடப்பதே நான் கடைப்பிடிக்கும் நோன்பாகும். இந்நிலையில் வறுமை என்னும் ஒரு கொடிய நாய் என்னை வருத்தித் துன்புறுத்துகின்றது. இந்நிலையில் என் நோன்பு நிலை கெடுகின்றது. நெஞ்சுறுதியாக திண்மை எனனும கைத்தடி கொண்டு இன்மை எனபதை விரட்ட ஆற்றலில்லாத சிறியவனாகக் கிடக்கின்றேன்.

17

பொல்லாப் பழியே புகல்வதென்னே!

கல்லா நாயேன் எனினும்எனைக் காக்கும் தாய்நீ என்றுலகம்
எல்லாம் அறியும் ஆதலினுன் எந்தாய் அருளா திருத்திஎனில்
பொல்லாப் பழிவந் தடையும்உனக் கரசே இனியான் புகல்வதென்னே
செல்லார் பொழில்சூழ் திருத்தணிகைத் தேவே ஞானச் செழுஞ்சுடரே.

—*செழுஞ்சுடர்மாலை.*

சேல் மீன்கள் சிறந்து விளையாடும செழிப்பு நிறைந்த பொழில்களால் பொலியும் திருத்தணிகைத் தேவே, மெய்ஞான ஞானப் பொருளே, நான் ஒன்றும் கற்றறியாதநாயேன் எனினும் என்னைக் காக்கின்ற தாய் தந்தை நீதான், எனபதை உலக உயிர்கள் எல்லாம் அறியுமே. ஆகையினால் என் தாயே, நீ அருள் செய்யவில்லை என்றால அநாதையாக எனனை விடுத்த கொடுமையான பழி உனனைத்தானே வந்து சேரும. என்னை ஆளவல்ல அரசே, இனியும் நான் என்ன கூறவேண்டும்.

கல்லா என்பதற்கு வாழ்த்தல் என்பதொன்றைத் தவிர ஞானநெறிக்குரிய பிற செய லொன்றையும் அறியாத எனறும் பொருள் கொள்ளலாம். நாயேன்-நாயின் இயல்பு.

எங்கிலையிலும் தலைவனை அறிந்து ஓடுதல்—சேல்மீன்கள் செழித்து விளையாடும் என்றதால் அவ்வூர் மககளின் சீவகாருணிய உணர்வு புலப்படுமென்பர்.

18

உளவறிந்த ஐயா!

உள்ளமனக் குரங்காட்டித் திரியும் என்றன்
உளவறிநதோ ஐயாநீ உன்னைப் போற்றா
கள்ளமனக் குரங்குகளை ஆட்ட வைத்தாய்
கடையனேன் பொறுத்துமுடி கில்லேன் கண்டாய்
தெள்அமுதப் பெருங்கடலே தேனே ஞானத்
தெளிவேஎன் தெய்வமே தேவர் கோவே
தன்அரிய புகழ்த்தணிகை மணியே ஜீவ
சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே.

— ஜீவசாட்சி மாலை 21

என் மனமெனும் குரங்கை அதற்கேற்றபடியெல்லாம் ஆடும்படியாகச் செயது திரிகின்ற என் இயல்பை அறிந்து கொண்டு, இவ்வாறாக உன்னை நினைந்து போற்றாதாரின் வஞ்ச மனமாகிய குரங்குகளைக் கண்டபடி ஆடுமாறு செய்துள்ளாய்! எல்லா வகையிலும் உன் திரு வருட் பெருங்கருணைக்கு ஏலாத கடையவனை என்னால் இவ்வாட்டத்தின் அலுப்பினைத் தாங்கிக்கொள்ள இயலவில்லையே! இதை நீ காண்பவன் தானே. தெளிந்த அமுதம் பிறந்த இடமாகிய பெருங்கடலே, உள்ளொளியாய்ப் பெருகரும் தேனே, பேரறிவின் தெளிவே, என் தெய்வமே, தேவாகளின் தலைவனே, காலத்தாலும் பிறவாற்றாலும் எஞ்ஞான்றும் பொன்றாத புகழ் வாய்ந்த திருத்தணிகையில் எழுந்தருளியுள்ள தெய்வமே, உயிர்க்குயிராய் நிறைந்து நின்று அவ்வுயிரின் செயல்களையும் சிந்தனைகளையும் கண்டறியும் மெய்ச்சான்றாய உயிர்த் துணையாய் விளங்குவதோடு என்றும் எந்நிலையிலும் மாறாத அருள்வாழ்வே!

எல்லாப் பொருளகளையும் கடந்து நிற்றலோடு எல்லாப் பொருளிலும் கலந்து நிற்றலைக் கடவுள் எனும் செந்தமிழ்ச்சொல் குறிக்கும். உயிரின் உள்ளும கலநதுநின்று அதன் நலந்தீங்குகளைக் கண்டறியும் பேரருள இயல்பினை 'ஜீவசாட்சி' எனக் கூறினா வாழ்முதல். அருள் வாழ்வு, இன்பவாழ்வு, எனத் திருவருள் இயல்பினை அழைக்கும் மரபில் சகச வாழ்வே என்றா. சகசம் என்பது என்றும மாறாத இயற்கை எனவும், தொல் பழமை சான்ற மூலம் எனவும் பொருள் படும்.

19

கனவேனும் காணேனே!

பாவியேன் படுந்துயருக கிரங்கிஅருள் தணிகையில்என பால்வா என்று
கூவிநீ ஆட்கொளலுர் கனவேனும் காணேனே குணப்பொற் குன்றே
ஆவியே அறிவேஎன் அன்பேஎன் அரசேநின் அடியைச் சற்றும்
சேவியேன் எனினும்எனைக் கைவிடேல் அன்பர்பழிசெப்பு வாரே.

—பணித்திறம் வேட்டல்

1-7-68

பாவியேனுகிய நான், அல்லல்களால் படும் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி தணிகையில் அருட்காட்சி வழங்கி, மன அமைதியினை நல்க என்னை நாடி நீ வருக என்று நீ அழைக்குமாறு ஒரு கனவுக்காட்சியினையாவது நான் காண மாட்டேனே! உயர்ந்த குணங்களின் நிலைக்களமான பொற்குன்றே, என் உயிரே, என் உணர்வினைச் செலுத்தும் அறிவே, என் அன்பே என்னை ஆளும் அரசே, உன் திருவடிகளை நினைந்து நான பணியாது போனாலும் என்னை நீ கைவிடலாகாதே. நான் பணியாது போனாலும் நீ அருளாது போனால் உன் அன்பர்கள் உன்னைத்தானே பழி தூற்றுவார்கள்.

20

குறியாதிருக்கலே என் குண நெஞ்சமே!

அறியாத நம்பிணி ஆதியை நீக்கும் அருள்மருந்தின்
நெறியாம் தணிகையன் ஆறெழுத் துண்டுவெண் ணீறுண்டுநீ
எறியா திரவும் பகலும் துதிசெய் திடுதிகண்டாய்
குறியா திருக்கலே என்ஆணை என்றன் குணநெஞ்சமே.

—உறுதி உணர்த்தல்.

தக்கது இன்னது, தகாதது இன்னது என்று மெய்ப்பொருளை அறியாது அல்லற்படும் நம் பிறவிப் பிணியினை வேறறுக்கத் தணிகையன திருமந்திரமான குமாராய நம என்னும் ஆறெழுத்தும், பூசும் திருநீறும் உள்ளன. எக்காலும் இந்நெறியை விலக்காது அவன் அருள் வேண்டி இரவும் பகலும் துதி செய்வாயாக! நெடுங்காலம் என்னுடன் பயின்று இயல்பாய் நற்குணநலம் வாய்ந்த நெஞ்சமே, இதனைக் குறித்து ஒழுகமறந்து பிறழ்ந்து விடாதே. இது என் ஆணை!

மெய்ம்மை குன்று மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் என்னும் கந்தரலங்காரமும் இரவுபகலாகிய மறைப்பு நினைப்பு அற்ற (கேவலசகலம) சமநிலையைப் பெரியோர்கள் பெரிதும் வேண்டி ஓதுவர். இரவு பகலற்ற இடத்து ஏகாந்தயோகம் வரவும் திருக்கருணை வையாய் பராபரமே என்பார் தாயுமானவர். இந்நிலையினை எய்த இரவும் பகலும் இடைவிடாது துதி செய்ய வேண்டுகின்றார் போலும்!

பண்பாடும் நாகரிகமும்

நா. கிரிதாரி பிரசாத், பி.ஏ., பி.எல்., பி.பி.ஏ,(டிப்)

பண்பாடு என்பது மனிதன் தன்னைத் தனி ஒருவனாகக் கருதாமல் சமுதாயத்தின் ஓர் உறுப்பினனாகக் கருதி அறவாழ்க்கையில் இயங்கி, நம்பிக்கை சட்டம் வழக்கங்கள் அறிவு என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டு வாழும் வாழ்வு நெறியாகும். ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவவொரு இனத்தவர்க்கும் சில பண்பாடுகள் இருககின்றன. மனிதனும் ஒரு விலங்கே என்றாலும் விலங்குகட்கு மாறுபட்ட சில மனிதனிடம இருக்கின்றன. விலங்கினங்கள் தாம் கற்றவற்றைத் தம் சந்ததிகளுக்கு என்று விட்டுச் செல்வதில்லை மிருகங்கள் நம்மைப்போல் அரசியல் - ஆன்மீக - பொருளாதார சங்கங்களை அமைத்துப் பெருவாழ்வு வாழ்ந்து உலகத்தை உய்விக்க வேண்டுமென்று கருதுவதில்லை. பண்பாடும் பண்புடைமையும் இரு வேறானவை. பண்பாடு அற்ற சமூகங்கள் உலகத்தில் எங்குமே இல்லை, ஆனால் பண்பு அற்றவாகள் பலர் இருக்கிறார்கள். பண்பாடு என்பது நாம் சமூகத்திடத்திலிருந்து பெறும் ஓர் அரிய செல்வம். இது பழக்கத்தால், முயற்சியால், கூட்டுறவால் அமைவது. பண்பாட்டை இரண்டாக வகுக்கலாம். பொருள் பற்றிய பண்பாடு நமது ஆடைகள், வாகனங்கள், குடியிருப்புவசதிகள் நமது அலங்கார வாழ்க்கையின் புறச்சின்னங்கள், விஞ்ஞானத்தால் நாம் பெற்றுள்ள பல நன்மைகள் முதலியவற்றுள் அடங்கும். பொருள் உலகத்தையும் புறநாகரிகத்தையும் கடந்து நமக்கு உணாவைக் கொடுத்து நம்மை நல்லாற்றல் படுத்தும் வாழ்க்கையில் சில அடிப்படைகளை நல்குவது ஒருவகைப் பண்பாடாகும். நமது மொழி-இலக்கியம்-பழக்கவழக்கங்கள்-அறநெறி என்பவை முன்னைய பொருட்பண்பாட்டைக் காட்டினும் பின்னைய அருட் பண்பாட்டையே வலியுறுத்துகின்றன.

நாகரிகம் என்ற சொல்லுக்கு அதன் முழுக்கருத்தையும் புலப்படுத்தும் பொருத்தமான விளக்கம் இதுவென வழங்கப்படவில்லை. முதிர்ந்த பண்பாட்டின் வடிவை நாகரிகமென ஒருவாறு கூறலாம்.

'நாகரிகத்தின் உண்மைச் சோதனை, ஒருநாடு எத்தனை மக்களைக் கொண்டது. எத்தனை நகரங்களை உடையது, அது எதை எதை நமக்கு விளைபொருளாக வழங்குகிறது என்பதிலே இல்லை. ஆனால் அது எத்தகைய மனிதர்களை ஈன்றிருக்கிறது என்பதே' - என்று அறிஞர் எமர்சன கூறுவார்.

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர் -குறள் (580)

என்பார் வள்ளுவப் பெருந்தகை.

நாடும் மக்களும் காலததால் அழிந்தொழிவர், ஆனால் நாகரிகமோ கால எல்லையையும் கடந்து என்றும் புலராது நிலைத்து நிற்கும் இயல்புடையது என்று சொல்வார் மாஜினி என்னும் இத்தாலியமேதை.

1-7-68

தேவைகளைப் பெருக்குவதே இன்றைய நாகரிகத்தின் சின்னமாக இருக்கிறது என்று காந்தியடிகள் கருதினார்.

ஆதியில நாகரிகம் எகிப்து - இந்தியா, மெசபடோமியா - நைல் - டைக்ரிஸ் - யூப்ரடீஸ்-சிந்து ஆகிய சுற்றுவெளிகளில் தோனறியது. தேவைக்கு அதிகமான பொருள்கள் விளையவே, ஓய்வு பெருகி கலைகளும் தொழிலகளும் வளர்ச்சி அடைந்தன. இவற்றின் காரணமாக நகரங்கள தோன்றலாயின. நகரவாழ்க்கையே நாகரிகததின சின்னமாகத் திகழ்ந்தது. நாகரிகம உலகத்தில் எங்கும் கூட்டுறவு இன்றித் தனியாக வளரவில்லை. நாகரிகமக்கள் அயலாரைப் பார்த்து பலவற்றை அறியலாயினா. உயர்ந்த நாகரிகங்கள் வளர்வதற்கு ஒரு நாட்டின சீதோஷ்ண நிலையும், பொருளாதார அமைப்பும், தொழில் வளமும, விவசாயமும் காரணங்களாக இருந்தன. ஆனால் பனநெடுங்காலமாக ஒரு சமுதாயம் விவசாயத் துறையிலேயே ஈடுபட்டு ஆணமையை இழந்து, வாழ்நதபோது வலிமைக் குறைவால் மற்ற முரடர்களால தாக்கப்பெற்று அந்த சமுதாயம் அழிக்கப்பட்டது. நாகரிகம குறைந்தவர்களே, நாகரிகம மிகுந்தவர்களைப் பலாத்காரத்தால் அடக்கிப் பழைய நாகரிகங்களை அழித்திருக்கின்றனர் என்று சரித்திரம் சான்று கூறுகிறது. உலக நாகரிகங்கள் சில சமயங்களில் வளாவதும, சில சமயங்களில தளாவதும சில சமயங்களில் தேய்வதுமாகவே இருநதிருக்கின்றன என்று ஒரு பேரறிஞர் கூறுகிறார்.

ஆனால் இக்கூற்றுக்கு மாறாக இந்திய நாட்டின் பண்பாடும் நாகரிகமும காலவெள்ளத்தையும கடநது. எண்ணிறந்த மாற்று ஆட்சிகளுக்குப் பினபும் சிதைவுறாமல சீரிய முறையில் வாழையடிவாழையாக வந்து அமைந்திருக்கின்றன. எகிப்திய, கிரேக்க - சீன நாகரிகங்கள் யாவும தங்கள் பழமையை இழந்துவிட்ட பினபும் இந்தியநாட்டின் நாகரிகமும் பண்பாடும் சங்கிலித் தொடர் போன்று வநதிருக்கின்றன என்று டாக்டர் நேரு கூறியிருக்கிறார். இதுவே இந்திய நாட்டுப் பண்பாட்டின பெருமை நமது நாகரிகத்தின் புறச்சினனங்கள வேறுநாடுகளுடன ஒப்பிடும்போது குறைவாகவே தெனபட்டாலும் மனிதனை அளவுகோலாக வைத்துக் கணிக்கும்போது மனிதாபிமானம் நிறைந்த நாடாக நம் பாரதத்தில் பண்பாடும் நாகரிகமும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முனபே உலகில் சிறநது ஓங்கியது எனபதை அறிய நாம் இறும்பூது எய்துகிறோம். வேதகாலத்து முனிவாகளின அறவுரைகள் சிறந்த பண்பாட்டின் திலகங்களாக விளங்குகின்றன. அவற்றின் இடையே இழையோடும் இன்றைய ஒருமைப்பாட்டு உணர்ச்சியும, சமுதாயம முழுவதும் இன்புற்றிருக்கவேண்டுமென்ற நல்உணர்வும் நம்மை விம்மிதம அடையச்செய்கின்றன. பண்பாட்டை வலியுறுத்தும் பொன்மொழிகள் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. சத்தியம் ஒன்றே - அதை அறிஞர்கள் பலவாறாகக் கூறுகின்றனர்.
2. இருப்பது ஒன்றே; அதைப் பலவாறாக நினைக்கின்றனர்.
3 அது ஒரே ஜாதி; ஆனால பலவாறாக மிளிர்கின்றது.
4. ஒற்றுமையுடன் இருங்கள்
ஒரே உள்ளத்துடன பேசுங்கள்
உங்கள் பிரார்த்தனை பொதுவாகவே இருக்கட்டும்
உங்கள் கூட்டுறவின் நோக்கமும் ஒன்றாகவே அமையட்டும்
உங்கள் ஒற்றுமை முழுமையாக அமையட்டும்!
5. எல்லா மக்களையும் உன் பக்கத்தில வைத்துக்கொள்
காலையும் மாலையும் அன்பு நிரம்பியவனாகயிரு.
உன்னிடம் உலகம முழுவதும் அமைதியும் அடைக்கலமும் பெறட்டும்.
6. இந்தியத்தாயே, என் ஆயுள் நீடிக்கட்டும்!
என் புத்தி கத்தியினும் கூர்மையாக இருக்கட்டும்!
உன்னை எண்ணி நான் சொல்லும் சொற்கள் இன்பப்பெருக்காக அமையட்டும்
உன் தெய்வீக கடாட்சத்தை என்பால் செலுத்து.

---ரிக்வேதம்.

இதுபோன்ற வேதகாலத்து நாகரிகமும் பண்பாடும் பன்னெடுங்காலமாக இந்த பாரத பூமியில் பரிணமித்தது. இமயம் முதல் குமரிவரை இந்த நாட்டை ஒன்றுபடுத்தின. வேதகாலத்திற்குப்பின் எழுந்த இதிகாச காலத்திலும் இவ்வுண்மைகளே விளம்பப்பெற்றன. இவ்விதிகாசங்களின் கதாநாயகர்களாக விளங்கிய இராமனும் கிருஷ்ணனும் வேத உண்மைகளை வாழ்ந்து காட்ட வந்த அவதார புருஷர்களாக மதிக்கப்பெற்றனர். கண்ணன் எனனும் தெய்வத்தால் இயம்பப்பெற்ற பகவத்கீதை வேத உபநிடதங்களின் சாரமாகத் திகழ்வது. இது ஒருமைப்பாட்டின் வித்தாக முளைத்தது.

அர்ச்சுனா !

1. ஆசையால் யாண்டும் பற்றற்றப் பண்புடன் ஒரு வினையினைப் பற்றற்றுத் தொழில் புரியும் புருஷனே பெருநிலையைப் பெறுகிறான்.
2. 'கற்று அடங்கிய பிராமணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும் நாயினிடத்தும், நாயை உண்ணும் புலையனிடத்தும் ஞானிகள் சமநோக்கே வைக்கின்றனர்.
3. 'உயிர் அனைத்திடத்தும் வெறுப்பின்றி நட்பும் கருணையும் உடையவனாய் ஆணவம், அகங்காரம் அற்றவனாய் இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதுபவனே என் பக்தன்.'
   - கீதை

இவ்வுண்மைகளை விளக்க பகவான் புத்தர், மகாவீரர், துளசிதாசர், கபீர், துகாராம், நானக், சைதன்யர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்ற எண்ணிறந்த அருளாளர்கள் பாரதபூமியில் தோன்றி இவ்வுண்மைகளை மெய்ப்பித்தனர். வீரமும் விவேகமும், ஆண்மையும், அறமும், தியாகமும், சகிப்புத்தன்மையும் இந்நாட்டில் நீண்ட பாரம்பரியங்களாக இருப்பது சமுதாயத்திற்கு ஆக்கமாகவே வந்துள்ளன. குருநானக், குரு கோவிந்தர், மாவீரர் சிவாஜி போன்றவர்களின் வீரசரித்திரங்கள் மக்களால் வழிவழியாக போற்றப்பெற்றுப் புகழ்பெற்றன.

இந்த நாகரிகப் பண்பாட்டின் வேறு ஒரு கூறு தமிழகத்தில் தொல்காப்பியர் காலம் முதல் அருட்பிரகாச வள்ளலார், ஏன் பாரதியார் காலம்வரை செங்கோலோச்சியது. தமிழ்ச் சான்றோர்கள் தமிழ் நாகரிகத்தின் தனிப்பெருந் தலைவராகத் திகழ்ந்தனர். பொய்யா மொழிப் புலவர் வள்ளுவனாரைப் போன்ற நனி நாகரிகம்பெற்ற தலையாய மனிதர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததே வியப்பு என்று கூறுவார், ஆல்பர்ட் சுவைட்சர், வள்ளுவர் உலக சமுதாயத்தின் பெரும்புலவராக இருந்து பேசுகிறார். அவரை The bard of Universal Man என்று அழைப்பதே பொருத்தமுடையது. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல, வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை - உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்று கூறுகிறார் பாரதி. இவரது கருத்துக்கள் அனைத்தும் ஒருமைப்பாட்டின் வித்துக்களாக விளங்குகின்றன.

1. அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
   செந்தண்மை பூண்டு ஒழுகலான் (30)
2. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
   தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (322)
3. ஒன்றாக நல்லது கொல்லாமை - மற்றதன்
   பின்சாரப் பொய்யாமை நன்று (323)
4. தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
   காமுறுவர் கற்றறிந்தார் (399)
5. பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
   நாகரிகம் வேண்டு பவர் (580)
6. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
   செய்தொழில் வேற்றுமை யான் (972)

1-7-68

இத்தகைய கருத்துக்களைப் பெய்த வள்ளுவர் ஓர் உலக மகாகவி. சங்ககாலத்து நூல்களும் இவற்றையே விளக்குகின்றன. வீரம், காதல், சான்றாண்மை போன்ற நற்குணங்களின் தொகுப்பே வாழ்க்கை என்று புலவர்கள் புகன்றனர். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் புலவர்,

'உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே'

என்றும்,

யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங் காகியர் என வினவுதி ராயின்
மாண்ட என் மனைவியோடு மக்களும், நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும, வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே.

என்று பிசிராந்தையாரும்,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தரவாரா'

என்று கணியன் பூங்குன்றனாரும் பாடியுள்ள பாடல்கள் தமிழ்மக்களின் தமிழ்ப்பண்பாட்டின் சிகரங்களாக விளங்குகின்றன.

சுவாமி விவேகானந்தா இந்திய நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அகில உலக சமயப்பேரவையில் அமெரிக்காவில் ஆற்றிய பேருரையில் இரண்டே சொற்களால் இயம்பியுள்ளார். சகிப்புத்தன்மையும் - தெய்வீகமுமே இந்திய நாட்டின் மேலான பண்பாடுகள். கயிற்றில் கோககப்பெற்ற மணிகளைப்போன்று, இந்திய நாட்டிலே பல மதத்தினரும், இனத்தவரும் மொழியினரும் பன்னெடுங்காலமாக இணைந்தும் இசைந்தும் வாழ்ந்து வந்துள்ளனர். இந்தவகையில் நம் இந்தியநாடு ஆதி நாகரிகத்தின் அடித்தளமாகவும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுன் நிலைக்களனுகவும் சத்தியம் அகிம்சை என்னும் அறங்களின் எடுத்துக்காட்டாகவும் சமய ஒருமைப்பாட்டின் சதுக்கமாகவும் இருந்து வந்திருக்கிறது. இந்தப் புண்ணிய பூமியில்தான் இராமனும் ரஹீமும் ஒன்றே என்று சொலலும் காந்தி அடிகளும் 'அவரது முன்னோடிகளாக விளங்கிய குருதேவர் இராமகிருஷ்ணரும், அருட்பிரகாச வள்ளலாரும் பிறக்க முடியும். இந்திய நாட்டின பண்பாடும் நாகரிகமும் இறைவனையும் உலகப் பொதுவுணர்வையும் சுற்றியே இயங்குகின்றன.

பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர் புத்தா ஆதி என்பேன் அயன் என்பேன் நாரா
யணன் என்பேன் அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதா சிவம் என்பேன சத்திசிவம் என்பேன்
பரமம் என்பேன் பிரமம் என்பே ன்பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம் என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பேன் இவை சித்துவிளை யாட்டே.

— வள்ளலார்

இறை நிலை விளக்கம்

புலவர் அ. நடேச முதலியார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

எனவே, உயிா வாழ்வதற்கென்றே உலகம் உள்ளது. பயனற்றதாக உலகம் இருக்க முடியாது. உலகில் எப்பொருளும் பயனற்றதாகப் படைக்கப்படுவதில்லை. உயிர் வாழ்வையே தடுத்து விடக்கூடிய கொடிய நஞ்சும் கூட ஒப்பற்ற மருந்தாய் உள்ளமையை நாம் அறிவோம். ஆகையால், உலகில் உள்ள எல்லாப் பொருளுமே ஒரு பயன் கருதியே, பயன் படவே உள்ளன. மனிதன் அதன் தன்மையையும், அதன் பயனையும் அறிய முடியாமையால அநதப் பொருளைப் பயனற்றது என்பானே தவிர, அப்பொருள் பயனற்ற பொருளன்று என்பதனை நாம் அறிய வேண்டும், உலகம் யாருக்குப் பயன் பட வேண்டும்? என்ற வினா எழுத்தான செய்கிறது. அந்த வினாவிற்குப் பயனடையும் உயிர்கள் வேண்டப்படும். உயிரினங்கட்குப் பயன்படவே உலகம் உண்டாயிற்று. அவ்வுலகிலேயே உயிரினங்கள் தோன்றி அவ்வுலகப் பயனை நுகர்கின்றன இதனைச் சான்றோர்கள் நான்காகப் பிரித்தனா. அவ்வுலகம் நான்காகப் பயன் படுகிறது என்பது அவாகள் அனுபவம். அவை உடம்பு, உடம்புள் இருக்கும் கருவிகள், அவ்வுடம்புக்குக் காரணமாய் உள்ள உலகம், அவ்வுலகத்தில் அனுபவிக்கப்படும் போகப் பொருள்கள் என்பன. இவற்றைத தனு, கரணம் புவனம், போகம் என்பார்கள் இத்தனையும் சேர்ந்ததுதான் உலகம். இத்தனைப் பொருள்களும் உயிாகளின் பொருட்டே உள்ளன. அவ்வுயிர்களும் எண்ணிறந்தன. அறிந்த உயிர்க்கூட்டங்களை ஆன்றோர்கள் ஆறுகப் பிரித்தனர். அறிவு வழியாக 'ஓரறிவுயிரே உற்றறிவுயிரே' என்று தொடங்கி 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்று தொல்காப்பியம் கூறுகிறது. அந்தப் பிரிப்பில் உண்மை ஒன்று காண்கிறோம். உயிர்க்கூட்டங்கள் அறிவுடையவை என்பது அந்த உண்மை. அறிவுடைய உயிர்களே அறிவற்ற உலகப்பயனை அடையவும் அனுபவிக்கவும் முடியும். ஆகையால் உற்றறிதலான தொட்டுணர்ச்சியிலிருந்து பகுத்துணரும் மன உணாவு வரை ஆறறிவு வரை உடைய உயிரினங்கள் உலகத்தில வாழ்கின்றன. உலகப்பயனைத் துய்க்கின்றன. அனைத துயிாக்கும் உலகம் பொது. அனைத்துயிரும் உலக வாழ்வை மேற்கொண்டு வளாகின்றன. இந்த வாழ்வினைப் பகுத்துணர நம நினைவினை நாம் பெற வேண்டும. உயிரினங்களின் தோற்றம், வளாச்சி, நிலைபேறு, அழிவு, அதனல் ஏற்படும் பயன இவற்றை நாம் அறிவது எங்ஙனம்? அனைத்துயிருமாய் முழுமை கான வேண்டும். பிரிப்பே காணமுடியாதபோது உயிரைக் காண்பதெப்படி? உலகத்தைக காண்கிறோம். உயிர்க்கூட்டங்களைக் காண்பதெப்படி? உயிர் காட்சிப் பொருளலலவே! காட்சிப் பொருளல்லாத பொருளாம் உயிரைக காணமுடியாதபோது உயிா இல்லை எனறு சொல்லி விடலாமே! தோன்றி, வளர்ந்து, நிலைத்து அழியும் இயலபினைக காணுகின்ற நாம், உயிரில்லை எனறு சொலல முடியவில்லையே! உயிர் உண்டு. உயிா உணர்கிறது. அறிகிறது. ஆகையால் உயிர் எத்தன்மைத்து என்ருல், 'உயிர் உணருந்தன்மைத்து' என்று கூறுகிறோம். எனவேதான், உயிர்க் கூட்டங்களின வாழ்வுக்கென்றே உலகம் என்ற நிலைக்கு வருகிறோம். எனவே, உயிரின்றேல உலகமில்லை. உலகமின்றேல் உயிர்க்கூட்டமில்லை. ஆகையால் இறைவனின் அருளாற்றல் விளக்கம் பெற உலகமும், உலக நிலையும், உலக நிலை முழுதும் ஆகி அவ்வுலகத்தில் வாழும் உயிர்களின்

நிலையும் அவ்வுயிர்களின முழுநிலையும் நமக்குத் தெரிய வேண்டும். தெரிந்தால் அவ்விறைவனை நாம் காண முடியும், உணர முடியும். அதனை அடிகளார்,

> 'உலகநிலை முழுதாகி ஆங்காங் குள்ள
> உயிராகி' என்றருளுகிறார்கள்.

உயிர்கள் எங்கே வாழ்கின்றன? உலக முழுதும் வாழ்கின்றன. உயிர்கள் வாழ்வதற்கு ஆங்காங்கு இடம் அமைந்துள்ளன. எங்கே? உலகத்தில். உலகம் மலை கடல், ஆறு எனப பிரிந்து ஆங்காங்கு வாழ உயிர்க்கிடமாய் அமைந்துள்ளது உலகம். அவ்வுயிர்க் கூட்டங்களும் அவ்வுயிர்க்கூட்டங்கள் வாழும் இடமுமே உலகம் எனக் காட்சியளிக்கிறது. அந்தப் பேருண்மை நமக்குப் புலனாக வேண்டும். எண்ணற்ற உயிர்க் கூட்டங்களும் அவ்வுயிர்கள் வாழும் எண்ணற்ற இடபேதங்களும் சேர்ந்த முழு நிலையைக் காண்பதெப்படி? உணர்வ தெப்படி? இந்த முழு நிலையிலல்லவா உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. என்ன வியப்பு! வியப்பினும் வியப்பே! இதனை நினைந்து நினைந்து உலகப் பன்மையையும், உயிர்க்கூட்டங்களின் பன்மையையும் நினைந்து நினைந்து உலகம் பலவாய்க்காண முடியாததாய் அமைந்துள்ளதையும், உயிர்க் கூட்டங்கள் அதனினும் பல பிரிவாய் ஒவ்வொன்றினும் பல பிரிவாய அமைந்துள்ள மையை நினைந்து நினைந்து அத்தனையும ஒரு முழுமையாய, இடையீடின்றி தோன்றி வளர்ந்து மடிந்து, வழிவழியாக வந்து கொண்டிருப்பதை உணர்ந்து உணர்ந்து அவ்வுயிர்க்கூட்டங்களும் ஒன்றன்பின் ஒன்றாய் பலப்பல பிரிவாய் பலப்பல இடங் களில் பலப்பல அனுபவங்களோடு காலவரையின்றி, ஆனால் வாழுங்காலவரை உடையதாய் வந்து கொண்டிருப்பதை உணர்ந்து உணர்ந்து நிலைபெறுவோமானால் இறைநிலை எத்தன்மைத்து என்பதனை நாம் அறிய முடியும். அந்த உலக முழுநிலையையும், அந்த உலக வாழ்வினை மேற்கொண்ட உயிர்களின் முழு நிலையினையும, நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்துஇறைநிலை இத்தன்மைத்து என்று நம்மை நினைக்க, உணர வைக்கவே,

> 'உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள
> உயிராகி அமர்ந்த தேவே'

என்று காட்டினார்கள்

அடிகள் இறைவனை உலகநிலை முழுதாகவும் ஆங்காங்குள்ள உயிராகவும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நமக்கும் காட்டித் தாமும் காண்கிறார்கள் என்பதனை நாமறிய வேண்டும். நாமும் அங்ஙனமே முழுநிலையைக் காண முயலவேண்டும். எப்படி?

உலகம் நிலம், நீர், தீ, காற்று, விண் என விரிந்து காணப்படுகிறது. இஃது இயற்கைப் பொருள்கள். இவற்றை ஐம்பெரும்பூதம் என்கிறோம். இவற்றின மாற்று வடிவம், பரிணாமம் தான் உயிர்கள் எடுத்துள்ள உடம்புகள். உடம்புகளும் ஐந்து பிரிவினை உடையன. தொட்டுணரும் உடம்பு, சுவை உணரும் உடம்பு, நாற்றமுணரும் உடம்பு, ஒளி உணரும் உடம்பு, ஓசை உணரும் உடம்பு என ஐம்பிரிவினை உடையது. ஒன்றே உடையது, இரண்டு உடையது, மூன்றுஉடையது, நான்குடையது, ஐந்துடையது என்ற பிரிப்பு நாமறியக்கூடியது. இந்த வேறுபாடுகளெல்லாம் உயிர்க்கூட்டங்களின் உடம்பு வேறுபட்டால் விளைவன. ஆயினும அனைத்துவித உடம்புகளும், ஐம்பெரும் பூதங்களின் பரிணாமமே என்பதனை நாமறிதல் வேண்டும். அந்த ஐம்பெரும் பூதங்களின் பரிணாமத்தால்தான் உணர்ச்சிகளும் பலவாயின. எங்ஙனம்? காற்று தொட்டுணர்வைக் கொடுப்பது, அஃது ஊறு எனப்படும். அதனை வட மொழியில் ஸ்பர்சம் என்கிறோம். இந்தத் தொட்டுணரும் உணர்ச்சி மிகமிக உயர்ந்ததும் இன்றியமையாததும் உயிர்த் தன்மையுடையதுமாகும். உயிருண்மையினைக் கூடத் தொட்டுணரும் உணர்ச்சியால்தான் அறிய முடியும் என்பதனையும் உயிரே காற்றினைப்

பற்றியே உடம்பில் நிலைத்திருக்கிறது என்பதனையும் நாமறிதல் வேண்டும். இங்ஙனமாகவே மற்றைய சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்ற நான்கு உணர்ச்சிகளும், சுவை நீரின் தன்மையால், நாற்றம், மண்ணின் தன்மையால், ஒளி நெருப்பின் பயனாய், ஓசை விண்ணின் இடமாய் வெளிப்படுவன என்று அறிகிறோம். எனவே, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தன் தன்மையைத் தன்னகத்தே கொண்ட நிலம், நீர், தீ, காற்று விண்ணென்ற ஐம்பெரும் பூதங்களின் பரிணாம உடலோடு உயிர்கள் வாழ்வதால்தான், அந்த ஐம்பெரும் பூதங்களின் பயனை அடையவும், வாய்ப்பு உடையனவாய் அவ்வுயிர்கள் உள்ளன என்ற அம்மாத்திரம் இங்கே குறிப்பிட்டேன். விளக்கம் வேண்டுமேல் பின்னால் விரிவாக விளக்கலாம் இந்த உண்மை இங்கே, உலகமும், உயிர்களும் எங்ஙனம் தொடர்பு உடையன என்பதற்காகச் சிறிது கூறியதாகக் கொள்க.

இந்த உண்மை பயனுடைய உலகத்தோடு, பயனடைய வேண்டிய உயிர்கள் தொடர்பு கொண்டதற்குரிய காரண காரியத் தொடர்பு சிறிது அறிதலாகும். அவ்வாறு இயற்கையான உலகத்தில், அதன் மாற்றமாகிய பரிணாமமாகிய உடலோடு கூடிய உயிர்கள் உலகப் பயனாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தினைத் தானே உணர்ந்து அனுபவிக்கும் ஆற்றல் உடையதன்று எங்ஙனம் என்று பார்ப்போம். உதாரணம் ஒன்றே ஒன்று. விரிவு அஞ்சி ஒன்று கூறுவல். உடம்பில் உள்ள கண் உலகப் பொருளைக் காண்பதாகும். கண் ஒளியுடையது. ஒளியிழந்த கண்ணோ, கண்ணில்லாத உடலோ உலகப் பொருளைக் காண மாட்டா. ஒளியுடைய கண்ணே காணுந்தகுதி உடையது. ஒளி நெருப்பின் குணம், பயன என முன்னே கூறப்பட்டது. ஆனால் அவ்வொளியை உடைய கண் தானும் தானே காணாது இருட்டில் ஒரு பொருள் இருக்குமானால் அல்லது உலகம் இருள் சூழ்ந்திருக்குமானால் ஒளியுடைய கண்ணுயிருந்தாலும் இருளில் உள்ள உலகத்தையோ அல்லது இருட்டில் உள்ள பொருளையோ காண முடிவதில்லை. அப்பொருள் மேலும் ஒளிபட வேண்டும். அப்போது தான் கண் அப்பொருளைக் காணும். காணும் கண்ணுக்கும் ஒளி வேண்டும். காணப்படும் பொருள் மேலும் ஒளி பட வேண்டும். உலகமும் உடம்பும் இவ்வாறு தொடர்புடையதாய் அமைந்து உள்ளமையைப் பிற பூதங்களோடும் சோத்து அறிய வேண்டும். அவ்வாறு அறிவோமானால் உயிரின் தன்மையையும் ஓரளவு நாம் உள்ளவாறு உணர முடியும. உடலோடு கூடிய உயிர்தான்; உணருந்தன்மை உடையதுதான். ஆனால் எதனை உணர வேண்டுமோ அதனைத்தானே உணர்ந்து கொள்ளும் ஆற்றல் உடையதன்று. அதுபோல, காணக்கூடிய கண் ஒளியுடையதாயிருந்தாலும் காணப்படும் பொருள்மேலும் உள்ள ஒளியும் நெருப்பின் குணம் எனபதும் பொருளகள் மேல் படும் ஒளியும் நெருப்பில குணம் என்பதனையும அறிகிறோம். அங்ஙனம் உலகப் பொருளைப் புறத்தே காண்பதற்கு எவ்வாறு ஒளி துணையோ அங்ஙனமே உயிர்கள் உணாவதற்கும், அவ்வுயிர்க்குத் துணை வேண்டும. அப்போதுதான் உலகத்தையும் தன்னையும் ஓரளவு உயிர உணர முடியும். உலகமாகிய அறி வற்ற பொருளை உடலில் உள்ள கண்ணாகிய உறுப்பினைக் கொண்டு காண்பதற்கு அறிவற்ற ஒளி துணையாவது போல, அறிவுடைய உயிர் உலகத்தையும், உடம்பையும் உலகப்பயனும சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தினையும் உணர்வதற்கும, இன்பந் துய்ப்பதற்கும் அவ்வுயிாக்குயிராயிருந்து உணர்த்தும் ஓர் ஒளி உடைப் பொருள் வேண்டும். அவ்வாறு உலகத்திலும் இருந்து, உடலிலும் இருந்து, உயிரிலும் இருந்து உணர்த்தும் பொருளாயும், உணரபபடும் பொருளாயும் அது நம் உயிருககுயிராயிருந்து, ஒளியாய்ப் பொருளை விளக்கியும், பொருளை உணருமபடியும் செய்து கொண்டிருக்கிறது என்பதனை, வள்ளலாா நமக்கு விளக்கம செய்வாராய்,

'உலக நிலை முழுதாகி ஆங்காங்குள்ள
உயிராகி உயிாககு உயிராம் ஒளிதானாகி அமாந்த தேவே'

என்று இறையனுபவத்தை விளக்குகிறாாகள்' இந்த நிலையினை எளிதாகப் பேசி விடலாம. விளக்கி விடலாம், பிறர் எல்லாம் ஆம் என்று காரண காரிய எடுத்துக் காட்டால் உண்மைப

1 – 7 – 1968

படுத்தி விடலாம் அவ்வாறு, உலக முழு நிலையையும், அந்த உலகத்தில் உடம்போடு வாழும் உயிர்களின் முழுநிலையையும், அவ்வுயிர்க் கூட்டங்களின் உயிர்க்குயிராய் விளங்கும் ஒரு பெரு நிலையினையும், நாம் நம் அனுபவத்தில் காண்பது எங்ஙனம்? அதற்குச சாதனம் வேண்டுமே. ஏன நம்மால் காண முடிவதில்லை? காண முடியாமைக்கு நம்மிடம் உள்ள இடாப்பாடு என்ன? நம்மிடம் உள்ள குறை என்ன? என்பது நமக்கு விளங்க வேணடும்.

காட்சி ஒருமைக்காட்சி, பிரிப்புக்காட்சி என இருவகைப்படும. இதனை நிர்விகற்பக் காட்சி என்பா. மரம், செடி, கொடி, புழு, பூச்சி, ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்கு, மக்கள என உருவத்தாலும், அறிவாலும் பிரித்துக் காண்பதும், பேசுவதும், உணாவதும், விகற்பக்காட்சி இவையனைத்தும் உலகம் என்று காண்பது நிர்விகற்பமாய ஒருமைக்காட்சி, மக்களிலே ஆண், பெண், கற்றவன், கல்லாதவன், நல்லர், தீயர், கருப்பர், வெள்ளையர், தாய், தந்தை, அண்ணன், தம்பி, முதலாகப் பிரித்துக் காண்பது விகற்பமாய் பிரிப்புக்காட்சி. அனைவரையும மக்களாகக் காண்பது நிாவிகற்பக் காட்சியாகிய ஒருமைக்காட்சி. இப்பிரிவிலும் ஒருமையிலும், எது உண்மையான காட்சி என்று நாம் அறிய முடிகிறதா? ஒவ்வொன்றும் உண்மையாகத்தான் படுகிறது அதறகுரிய காரணம் காட்டும்போது நாமதனை உண்மையென்றே காண்கிறோம். அப்படித்தான் அவைகளும் நமக்குக் காட்சி அளிக்கின்றன ஒருமைக் காட்சியிலும், உண்மை இருக்கிறது. உருவத்தாலும், பிறப்பாலும் செயலாலும், உணாவாலும் ஒரு சமமான மக்களைப் பிரிப்பானேன். வேண்டியதில்லை. ஆண் என்றோ பெண் என்றோ பிரிப்பு உணர்வு எப்போது ஏற்பட்டது? குழந்தையில் ஆண் பெண் வேற்றுமையில்லை ஆண ஆண்தான், பெண் பெண்தான். ஆனால் குழந்தைப் பருவததில அந்த உணர்ச்சி எழுவதில்லை. நாமும் எழுப்புவதில்லை. அதுபோலவேதான், இவன் தந்தை, இவள் தாய், இவர் உறவினர், இவர் அயலார், அவர் தீயர், அவா நல்லவர், இவா நம் நாட்டார், இவா பிறநாட்டாா என்ற பிரிப்பும் நம் உணர்வால் ஏற்றுக் கொண்ட பிரிப்பே அன்றி அங்கு அவர்களிடம் இல்லை. இந்தக் கற்பனை உணாவு நீங்கும்போது இந்தக கற்பனை உணர்வு உண்டாகாதபோது அனைவரும் மகக்ளே என்ற ஒருமை உணர்வே நிலைக்கும், உண்மையாகும. இந்த உணர்வு அறியாமையாலும் உண்டு, அறிந்து தெரிந்த நிலையிலும் உண்டு. அறியாமையில் உண்டாகிற ஒருமை உணர்வு இருட்டில் ஒரு பொருளையும் பிரித்துணர முடியாதபோது பொருள் காணப்படாததால, பொருளில்லை என்று கூறுவதுபோல், பிரிப்புணாச்சி அறியாமல் ஒன்றேன முடிப்பது அறியாமையால் உண்டாகும் நிர்விகற்பக் காட்சி. ஒரு உதாரணம் — ஒருவன் காட்டிடைப் புகுந்தான். அங்கே எண்ணற்ற மரஞ் செடி கொடிகளைக காண்கிறான். அவனை இஃது என்ன மரம், இஃதென்ன செடி? இஃதென்ன கொடி? என்று மற்றொருவன் வினவினன். அப்போது அவன், அதற்கு முன் கண்டறியாத, பெயா கேட்டறியாத அம்மரஞ்செடி கொடிகளைப் பிரிதது உணாந்து, இதன்பெயா இன்னது என்று சுட்டிக் கூற முடியாதவனாய் இவை எல்லாம் மரம், இவை எல்லாம் செடி, இவை கொடி எனக் கூறுவானேயன்றிப் பிரித்துப் பெயர் கூறவும், சுடடவும் மாட்டான, ஏன்? அவனுக்குத் தெரியாது. அதுபோது வேற்றுமை காணப்படாத, அறியாத நிலையில் அவற்றைக காண்கிறானே, அநத ஒருமைக காட்சி, அறியாமையால் விளைந்த நிாவிகற்பக காட்சி. அங்ஙனமேயனறி அறிந்து இது தென்னை, இது மா, இது புளி, இது தேக்கு, இது அகில் எனப் பிரித்துணாந்தபோதும், இவையனைத்தும் மலையிடைக்காட்டிடைப் பிறந்த மரங்களே எனறும் அனைத்தும் மண்வளனைக கொண்டு விதை வேற்றுமையால விளைந்த வேறுபாடேயன்றி, மரமென்ற ஒருமையால் விளைந்தனதான என அறிந்து மரமெனக் காண்கிறானே, அந்தக் காட்சிதான் நிாவிகற்பக்காட்சி. இப்படியே மூலமறிந்து விளைவறிந்து, பயனறிந்து பிரிப்புணர்சசியினினறும் விலகி, ஒருமை உணர்ச்சிக்கு வருதலே உண்மைக் காட்சியாகும். உலகமும், உலகத்து உயிாகளும், உயிாகளுள் மக்களும், மக்களது உணர்ச்சியும் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாய், ஒனறிலிருந்து ஒன்றாய விளைந்த ஒருமையின் விளைவே என்று அறிந்து, உணர்ந்து பிரிப்புணாச்சியினின்றும ஒருமைக் காட்சிக்கு வரும். அறிவுததெளிவின் அனுபவமே நிர்விகற்பக் காட்சியாகும.

ஒரு நெல் விதை. மண்ணிடை விழுந்து முளைத்துச் செழித்துப் பன்னூறு விதைகளைக் கொடுக்கிறது. காண்கிறோம். ஒருமைவிதை பன்மையாகவும் பயன்படுவதையும் காண்கிறோம். பன்னூறு விதைகளும் ஒருமையின் விளைவேயன்றிப் பன்மையில்லை. நெல் ஒன்றே என்று அறிகிறோம். இங்கே ஒரு நினைவு. மாணிக்கவாசகப் பெருமான் இவ்வொருமைக் காட்சியைத் தெளிவு செய்து இறை நிலையை விளக்கி உள்ளார்கள். அதனைக் காண்பதும், நமக்குத் துணையல்லவா? விளக்கம் ஆன்றோர்கள் அருள்வாக்கினால் உறுதிப்படும் என்பதனால் காட்டுகிறேன்.

'ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும் எம்மனைக்கும் நம்பெருமான்
குன்றாத செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ'

என்ற அருமைப் பாட்டை எண்ணுங்கள். இந்த உலக விகற்பமாய் அத்தனையும் எங்கிருந்து முளைத்து கவடுவிட்டு விரிந்து வந்து கொண்டிருக்கின்றன என்பதை அடிகள் நிர்விகற்பக் காட்சியாகக் காட்டுவதைக் காணுங்கள். நமக்கு எவ்வாறு அனைத்தும் ஒரு விதையிலிருந்துதான் விளைந்தது என்று காண முடியும்? காணலாம். நம் உள்ளத்திலுள்ள பொய்யான, கற்பனையாக எண்ணிலாத நெடுங்காலமாக, எண்ணிலாத பல பிறவிகளில் பயின்று வரும் விரோத விகற்ப உணர்ச்சிகள் மாற்றமடைய வேண்டும். மாற்றமடைந்தால், உண்மையான ஒருமைக்காட்சி உடனே முழுமையாக நம் உள்ளத்தில் தோன்றிவிடும். இந்த விகற்ப உணாச்சி எப்படி உண்டாயிற்று? அது ஒரு விசித்திரம். உயிர்த் தோற்றங்களின் வேறுபாடே ஒரு விசித்திரம். ஒன்றேன்றில் தோன்றி உளதாகி மரிப்பதைக் காண்கிறோம். மரித்தும் பிறவா நிலை காண முடிவதில்லை. தோற்றமுண்டேல் இறப்பு உண்டு. தோன்றாமலே நின்று விடுமானால் உலகமே இல்லை. தோன்றியவை மரிக்காமற் போனாலும் உலக வாழ்வு இல்லை. ஆகையால் சுறங்கும் சகடமுமபோல உயிர்க்கூட்டங்கள் சுழன்று சுழன்று வந்து போய்க்கொண்டிருக்கின்றன. அதுதான் அறியாமை. அறியாமை என்பதுதான் என்ன? நான் ஏன் பிறக்கிறேன்? இறந்துபட வேண்டிய காரணம் என்ன? எங்கிருந்து வந்தேன்? எங்கே போய்ச் சேருவேன்? எங்கேதான் போய்ச் சேர வேண்டும்? இந்த வினாக்களுக்கு விடை காண முடியாமல் தவிப்பதே அறியாமை.

'நான் யார்? உன் உள்ளங்களார்? என்னை யாரறிவார்?'

என்ற வினாக்கள் எழுவவில்லை. தந்தை யார்? தாய் யார்? சுற்றம் யாா? தாம் நாம் யாரோ? வநதவாறு எங்ஙனே? போமாறு ஏதோ? என்ற வினாக்களும் எழுவதில்லை. இந்த வினாககளை எழுப்பினேமானாலும் விடைகாண முடிவதில்லை. விடைகாண முயலவதும் இல்லை. விடை காணும வழியில் நம்பிக்கையும் இலலை. விடை காணும் வழியில் செல்வதும் இல்லை. இதுவே நம் வாழ்வு. இதற்குத்தான் அறியாமை எனறு பெயர். எந்த உணமை நிலைகாணாது, காண முடியாது, விபரீதமான, விரோதமான, போக்கில் போய்க் கொண்டிருக்கிறோமோ அதுவரையில் உண்மைநிலை நமக்குத் தெள்ளென விளங்காது. விளங்கவும முடியாது. நாம் காணவும் மாட்டோம். அதனை வள்ளற் பெருமான் நமககு அருளுகிறாகள்.

'கலகநிலையறியாத காட்சியாகி அமர்ந்த தேவே'

என்பது அது. கலக நிலை - பிரிப்புணர்ச்சி, பொய்யறிவு, விகற்பக்காட்சி. இந்த விகற்ப உணர்வுக் காட்சி நீங்கியபொழுதுதான், ஒருமைக்காட்சி உண்டான பொழுதுதான் சமரசம்

என்ற சொல்லின் பொருள் நமக்கு விளங்கும். அனைத்தும் ஒரு பொருளின் தோற்றம் என்ற அடிப்படை உண்மையறிந்து உணர்வதே சமரசம். அதுதான பொய் கலவாத உண்மை. சுத்தம் எனப்படும். அவ்வழியிற செலவதே உண்மை வழிச் செலவதாய சன்மார்க்கம் எனப்படும். அந்த நன்னெறி, சிவநெறி, செந்நெறி, பெருநெறி, குருநெறியே தக்க நெறி தான் சன்மார்க்கம் எனப்படும். அதனையே அடிகளார்

'கலக நிலையறியாத காட்சியாகிக்
கதியாகி அமர்ந்த தேவே'

என்றருளினர்கள். கதி-செலவு, செல்லவேண்டிய வழி. சென்றடையும் பேறு எனப் பொருள் படுதலை அறிக.

இந்த முறை திருமூலர் முதல் தாயுமானவர் வரை வளர்ந்து வநத செந்நெறி முறையாகும். அதன வழி வந்த வள்ளற் பெருமானின் திருவாக்கும் அடியொற்றியறிய வேண்டிய ஒன்றாய் மிளிர்கிறது. இந்தச் சமரச சுத்த சன்மார்க்கத்தில் நின்று, ஐமபுலக் காட்சி தவிர்த்து மாறி நின்று மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைந்து, உளளே அமுதூறி நின்று ஆனந்தப் பெருவாழ்வாம் ஆடல் காணும், அந்த அற்புதத் திருக்கூத்தின் நிர்விகற்பக் காட்சியை காண்பதற்கென்று அடிகளார் அமைத்துக் கொண்ட, அடிகோலி வகுத்துக் கொண்ட அந்தப் பெருநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதற்கு உரிய உயர்ந்த இடமே, சித்தி வளாகம் என்ற திருமாளிகை என்பதனை நாமறிதல் வேண்டும். அந்த நிர்விகற்பக் காட்சியாகிய உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள உயிராகி, உயிருக்குயிராம் ஒளிதானுகிக் கலகநிலை அறியாத காட்சியாகிக் கதியாகிக் காண்கின்ற காட்சியே மெய்ஞ்ஞானக் காட்சியாகும், அனைத்தும் ஒரு பொருளிற்றோன்றின. அனைத்தும் ஒரு பொருளே. அந்தப் பொருளிடத்தி லிருந்து வந்த ஒரு சிறு அணுவே உயிர். இந்த உயிரிலும், அந்த அளப் பெருந்தன்மை வளப்பெருங்காட்சியுளது. எனறு நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து காணும் அற்புதக் காட்சியே மெய்ஞ்ஞானக் காட்சியாகும். அங்கே அனைத்தும் ஒரு பொருளாய, அப்பொருளன்றித் தானென்று ஒரு பொருள் இல்லாமற் போய் விடும். உண்மையில் அனைத்தும் ஒரு பொருளான போது தானென்று ஒரு பொருள்தான் ஏது? அங்கே தானென்று ஒன்று பிரிந்தால இரண்டாய் விடுமே. இரண்டாய் விட்டால் ஒருமை என்ற முழுநிலையேது? தன்னைத் தவிர ஒரு பொருளுமில்லை. அந்த ஒரு பொருளைந் தவிர தானென்று ஒரு பொருள் இல்லை. இந்த உண்மையே ஒன்றே என்ற (ஏகன்) வாசகப் பொருளாம். இந்தப் பேருண்மைப் பெருவாழ்வைப் பெறச் செலுத்தும் நெறியே பெருநெறியாகிய சன்மார்க்கம் என அடிகளாரால் நமக்கு எடுத்துக் கொடுக்கப்பட்ட சிவநெறியாம் செந்நெறி குருநெறி என்றறிக. இதனையே நமக்கு அடிகளார்,

'கலக நிலையறியாத காட்சியாகிக் கதியாகி
மெய்ஞ்ஞானக் கண்ணதாகி யமர்ந்த தேவே' எனறருளினர்கள்.

இறைநிலை இவவாறு ஒனறிலிருந்து விரிந்து பலப்பலவாய் வளர்ந்து ஒன்றாகவே காணும் மெய்ஞ்ஞானக் காட்சியாம் விளங்கிய, விளங்குகிற, உண்மையான பொதுநிலை இதுகாறும் அடிகளாரால தெளிவு செய்யப்படுகிறது. இனி அனுபவத்தில, இறைநிலையைப் பற்றிப்பின் பகுதியாய் விளக்குகிறார்கள். இதற்குச் சிறப்பிலக்கணம் என்று பெயர்' பொது இலக்கணம் தடஸ்தம் என்றும், சிறப்பிலக்கணம் சொருபம் என்றும் கூறப்படும். காணும் பொருளைக் கொண்டு காண வேண்டிய பொருட்குக் காரண காரியத்தொடாபு படுத்தி விளக்குவது பொது இலக்கணம். காண வேண்டிய பொருளின உண்மைத் தனமையை அனுபவமுகத்தான் அனுபவித்தவாறே விளம்புவது சிறப்பிலக்கணம். அங்ஙனமே அடிகளார், உலகநிலை முழுதாகி, ஆங்காங்குள்ள உயிராகி, உயிர்க்குயிராம் எனதாகிக் கலகநிலை அறியாத காட்சியாகிக் கதியாகி,

மெய்ஞ்ஞானக்கண்ணதாகி அமர்ந்த தேவே என்றவரையும், உலகத்தைக் காட்டி, உயிரைக் காட்டி, உயிருக்குயிராம் ஒளிமையைக் காட்டி அதனைக் காணவேண்டிய நிர்விகற்பக் காட்சியாம் கலக நிலையறியாத காட்சியைக்காட்டி அதனை அடைதற்குரிய சன்மார்க்க நெறியாம் கதிகாட்டி, அப்படிக் காணும் மெய்ஞ்ஞானக் காட்சி காட்டிப் பொதுநிலை கூறியயருளியமை கண்டோம். இனி இறைநிலை அனுபவ வாயிலாய்ச் சிறப்பிலக்கணம் காட்டும் பகுதியாய் பின் நிற்பன காண வேண்டும். அனுபவ வாயிலாகக் காணவேண்டிய சிறப்பிலக்கணம் அனுபவமில்லாத நமக்குச் சொல்லளவால் விளங்குவதேயன்றி அனுபவ அளவால் விளங்குவது அருமையன்றோ. ஆகையால் சொல்லளவாலும் விளக்க அதற்குரிய மொழியறிவு, சரித்திர அறிவு, சமய நுட்ப அறிவு, அளவை அறிவு இவை இன்றியமையாதன ஆகையால் அந்த முறை தழுவி, பிறபகுதியாம் சிறப்பிலக்கண அமைதியாகிய இறைநிலை விளக்கம் பின்னொரு கட்டுரையில் ஓரளவில் விளங்க எழுதுகிறேன். இங்கே அந்த மெய்ஞ்ஞானக் காட்சியில் அப்பெரும்பொருள் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் எவ்வாறு விளங்குகின்றன என்பதனை நான்கு படிநிலைகளில் வரைக்கிறார்கள்

இங்குச் சிதாகாசமதாய் பரமாகாச இயல்பாகி, என்பது ஒன்று. இணையொன்றும் இல்லாதாகி என்பது இரண்டு. அலகிலறிவானந்தமாகி என்பது மூன்று. சச்சிதானந்த மயமாகி அமர்ந்த தேவே என்பது நான்கு. இந்த நிலைகள் நான்கும் இறைவனுடைய உண்மைநிலை, பொருள்நிலை, அனுபவநிலை எனப்படும். அப்படிச் சத், சித், ஆநந்தம் ஆகிய மூழுநிலையில் உள்ள அவ்வனுபவப்பொருள்தான் உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள உயிராகி உயிர்குயிராம் ஒளிதானாகிக் கலகநிலை அறியாத காட்சியாகி, கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ணதாகி அமர்ந்த தேவாய் விளக்குகிறது எனக் காட்டிய காட்சியை நாம் சன்மார்க்க நெறி கண்டு கடைப்பிடிக்க வேண்டும். எங்ஙனம்?

அதற்கும் அடிகள் வழி வகுத்துக் கொள்கிறார்கள். அந்த முறையில் பயில்வோமானால் நம்முன்னோர்க்கு மிக எளிது. ஆனால் அடையும் பயனும் மிகமிக உயர்ந்தது. அதன் உண்மையினை அந்தப் பெருநெறியாம் சன்மார்க்க நெறி நின்று பொருட்பேறு பெறுதற்கு அடிகள் காட்டும் முறையினையும் அம்முறையில் அந்நெறியில் நின்றால் பெறும் பேற்றினையும் நமக்கு உண்மையாக இரக்க உள்ளத்தால் அருளும் அருட்பாவைக்காட்டி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து அன்பே
　　நிறைந்துநிறைந்து ஊற்றெழும்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
　　நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந்து ஏத்தும்நாம் வம்மின்உல கியலீர்
　　மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம்சொல் கின்றேன்
　　பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

திருச்சிற்றம்பலம்.

(முற்றும்)

1-7-1968

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
    பக்கம்நின்று கேட்டாலும் பரிந்துள் உணர்ந்தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டி அணைத்தாலும்
    இத்தனைக்கும் தித்திக்கும் இனித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்த நறுங்கனியே
    மெய்ம்மை அறிவானந்தம் விளக்கும் அருள் அமுதே
தீர்த்தாஎன் றன்பரெல்லாம் தொழப் பொதுவில் நடிக்கும்
    தெய்வநடத் தரசே சிறுமொழிஏற் றருளே

— *இராமலிங்க அடிகள்*

விளம்பர உதவி :

A B T பார்சல் சர்வீஸ்

Prop : **ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிட்.**

பொள்ளாச்சி

டாக்டர் நஞ்சப்பா ரோடு : : கோயமுத்தூர்-18

தந்தி : சஞ்சிவி டெலக்ஸ் : 262 போன் : 28366 (8 லைன்)

திருவடிப் புகழ்ச்சி

[தொடர்ச்சி] திருக்குறள் பீடம், குருகுலம் அழகரடிகள்

மறுமலர்ச்சி:

உலகம், பற்பல கண்டுபிடிப்புகளால், உயர்ந்து வருகிறது. 'விஞ்ஞான' வழியில் வியக்கத்தக்க அமைப்புகள் இக்காலத்தில் மலர்ந்திருக்கின்றன; மக்கள் அதனால் நலன்கள் அடைந்துவருகின்றனர்; உலக வாழ்க்கை சிறப்படைந்து வருகின்றது.

இந்தப் புது மலர்ச்சி பெரிதும் வரவேற்கத்தக்கதாகவே இருக்கின்றது; பரவலாய் உலக முழுதும் அளவளாவி, 'ஒன்றே குலம்' என்னும் மனித நாகரிகத்தின் உயர்ந்த எல்லையை, அனைவரும் எட்டிவிடக்கூடிய நிலைமையும் உருவாகி வருகின்றது.

ஒரே குலம் என்னும் கருத்தில், நமது நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் முழக்கத்துடன் இந்நாகரிகம் தலையெடுத்திருந்தது.

தாழ்ந்த பழக்க வழக்கங்களின் காரணத்தால் உயர்வு தாழ்வு என்னும் அடிப்படையில் வேற்றுமை கிளைப்பது இயற்கையேயானாலும், மனித குலம் எனனும் அன்பார்ந்த கண்ணோடி ஒற்றுமை காணும் கண்ணோட்டமே முன்பு 'நாகரிகம' எனனும பெயரால் வழக்கங் கொளவதாயிற்று.

'நாகரிகம்' என்னும் சொல்லுக்குக் 'கண்ணோட்டம்' என்று பரிமேலழகர் உரை தெரிவித்திருக்கின்றார். 'மனித குலம்' என்னுங் கருததாலேதான் மனபகுத எனனும் பெயர் வழக்கமும் உண்டாயிற்று. கண்ணோட்டம் மிக்க, இரக்கம் நிரம்பிய 'ஒன்றே குலம்' என்னும் இந்நாகரிக வாழ்வே, 'ஆன்மநேய ஒருமைப்பாடு' எனவும் அணமைக்காலத்தில் விளக்கம் பெற்றது.

இத்தகைய அழகிய உயர் வாழ்வு இடைக்காலத்தில் ஒளிமங்கி நின்றது. விஞ்ஞானப் புரட்சி இப்பொழுது மீண்டும் அதற்கு மறுமலர்ச்சி தந்து வருகின்றது.

சிக்கலும் தீர்வும்:

ஆனல் இடையிடையே அதற்கு ஒரு தளர்ச்சியும் வளர்ந்துவருதல் காண்கின்றோம்; புது மலர்ச்சியாகிய மலர், மணமற்ற வெறு மலராய்விடுமோ என்று எங்கும் ஓர் ஐயுறவும் நிழலாடுகின்றது. விஞ்ஞான வளர்ச்சியின் பயன் வேறு வகையாய் வெளிப்படலாகாதே.

என்று ஓர் அச்சமும் பிறக்கின்றது; வாழ்க்கையில் அமைதியின்மையால், இக்காலப் புதுமையில் ஏதோ சிக்கல் இருப்பது மட்டும் நன்றாய்த் தெரிகின்றது.

தெளிவு மிக்க பெரியோர், இப் பெருஞ்சிக்கலை அவிழ்த்து மறுமலர்ச்சிக்கு மணம் ஊட்டி, வாழ்க்கை வெம்பிவிடாமல் அது கனிந்து ஒழுகுதற்கு வழிசெய்து வைத்தல் முதன்மையாயிருக்கிறது. அருளுடன இவ்வுண்மையை சிந்தித்த வடலூர் வள்ளலார் போன்ற சான்றோர், அண்மையில் உலகுக்குப் பெரும்பணி செய்திருக்கின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் திருவள்ளுவர் போன்றோர் திருமூலர் போன்றோர் கொடுத்த குரல், இப்போது வள்ளலார் போன்றோர் காந்தியடிகள் போன்றோர் வாயுரைகளிலும் கேட்கின்றது.

வடலூர் வள்ளலார் அருளிச்செய்த திருவடிப் புகழ்ச்சி போன்றவை உலகுக்கு வழங்கிய அத்தகைய பேரறைகூவலாகும். 'ஒன்றே குலம்' என்னும் நாகரிகம் நிலைக்கவேண்டுமானால், 'ஒருவனே தேவன்' என்னும் தெளிவும் கடைப்பிடியும் மக்கள் மேற்கொள்ளவேண்டும் என்று முன்னோர் முழங்கிய குரலே, இப்போது வள்ளலார் வாயிலாக வந்த 'திருவடிப் புகழ்ச்சி'யில் விளக்கம் பெற்றிருக்கின்றது. 'ஒருவனே தேவன்' என்பது காரணம்; 'ஒன்றே குலம்' என்பது காரியம்; காரணத்தைத் தகுதியாக உணர்ந்து தெளிந்து பயன்படுத்தினாலல்லாமல் காரியம் தகுதியாக நிறைவேறுவதற்கில்லை.

ஒருமைக்கு வழி;

ஆம், 'ஒன்றே குலம்' என்னும் ஒற்றுமை, 'ஒருவனே தேவன்' என்னுங் கடவுட் கோட்பாட்டினாலேதான் உறுதியாய் வளர முடியும்.

உலகத்தில் சாதி காரணமாகவும் இனங் காரணமாகவும், தொழில் காரணமாகவும், அப்படியே மொழி சமயம் மதம் நாடு முதலியவை காரணமாகவும் ஒற்றுமை வளர்வதற்கு இடமுண்டு என்று சிலர் கருதக்கூடும்.

ஆனால், அவற்றாலெல்லாம் வளரும் ஒற்றுமைகள் பெரியவை அல்ல, உறுதியுள்ளவை அல்ல என்பதையும் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

மேலும், அவ்வொற்றுமைகள் நிலைத்தவையும் அல்ல; ஏனென்றால், நாடு மொழி முதலியவை நிலைத்தவை அல்ல; காரணங்களாகிய அவை நிலைகுலையும்போது அவை காரணமாக உண்டான ஓரளவு ஒற்றுமையும் நிலைகுலைந்துவிடும்.

சாதி இனம் முதலியவை உயர்ந்தனவும் அல்ல. அவை, பற்று முதலியன பெருக்கி உள்ளத்தில் அழுக்குண்டாக்கி, அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் பகை செற்றம் போர் முதலியவற்றிற்கும் வாயில் கோலி மன்பதை ஒற்றுமைக்கு வெடி வைத்துவிடும்.

இன்னும், இனம் மொழி நாடு முதலிய கோட்பாடுகள் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவையும் அல்ல. மக்களல்லாத மற்றச் சிற்றுயிர்களுக்கோ இவையெல்லாம்பற்றி ஒற்றுமைகொள்ள இடமே இல்லை.

ஆதலால் உலக முழுதும் 'ஒன்றே குலம்' என்னும் ஒற்றுமையை விளைப்பதற்கு இவையெல்லாம் வாயிலாக மாட்டா என்பது தெளிவு; மாறாக, பிளவு கிளைக்கவும் இடம் உண்டு என்பது உறுதி!

இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ்

உலகம் ஒற்றுமை கொள்ளாமல் சீரழிவதற்கு, இனம் மொழி முதலியவற்றின்மேல் வைக்கும் அவாக்களே முக்கிய காரணங்களாய் உள்ளன. உலக முழுதும் நிகழ்ந்தவரும் வரலாறுகளும் பகை போர் முதலியவைகளுமே இவ்வுண்மையை இனிது தெளிவாக்கிவிடும். சாதி நாடு முதலியவற்றால் ஒற்றுமை காணப்போய் முடிவில் பகையும் பிளவுமே காணும் இந்நிலை, குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொண்டோர் நிலையையே ஒக்கும். மிக்க அறியாமை இதனினும் பிறிதில்லை.

தலைவனாகிய ஒரு முழுமுதற் கடவுளின் ஈடுபாடு இல்லாமல், இனம் மொழி முதலியவற்றில் உணர்ச்சி கொள்வோர் நிலைதான் இப்படிச் சீரழிந்து போகின்றது. தலைவனைத் தெளிந்த முதன்மையுடன், நாடு மொழி முதலியவற்றில் கொள்ளும் உணர்ச்சிகள் இப்படிச் சீரழிவதில்லை; நன்முறையில் நிகழ்ந்து, கடமைக்கான ஒற்றுமைகொண்டு, மன்பதைக்கு ஊறின்றித், தொடர்புடையோர்க்கும் நலமே பயந்துவருகின்றது.

நல்ல மருந்து :

'ஒருவனே தேவன்' என்னும் தெய்வந் தெளிதலே இங்ஙனம் எல்லாவற்றிற்கும் இயற்கையில் அமைந்த ஒரே மருந்து! நல்ல மருந்து இம்மருந்து! 'ஒன்றே குலம்' என்னும் போ ஒற்றுமைக்கு, நிலைத்த ஒற்றுமைக்கு என்றும் பிளவு காணமுடியாத தூய ஒற்றுமைககு எல்லா வகைகளுக்கும் எல்லா உயிர்களுக்கும் பொதுவான ஒரே ஒற்றுமைக்குக் கடவுட் கொள்கை ஒன்றுதான் நல்ல மருந்து. ஆன்மநேய ஒருமைப்பாடு என்னும், இவ்வொருமை நாகரிகத்துக்கு வேறு மருந்தே இல்லை.

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கன்றி
மனக்கவலை மாற்றல் அரிது."

என்பது திப்பிய திருமறைப் பொன்மொழி.

உய்யும்வழி இதுவானதனாலேதான், வள்ளலார் போன்றவர்கள்,

"நல்ல மருந்திம் மருந்து"

"அருள் வடிவான மருந்து"

"இருளற ஓங்கு மருந்து"

"இன்புருவான மருந்து"

"சஞ்சலம் தீர்க்கும் மருந்து"

"வித்தக மான மருந்து"

"சேதப் படாத மருந்து"

"பேதப் படாத மருந்து"

"ஏழைகளுக்கும் இரங்கும் மருந்து"

"என்றும் கெடாத மருந்து"

என்றெல்லாம் மேற்கூறிய கருத்துக்களை விளங்க அருளிச் செய்திருக்கிறார்கள்.

கட்டாயத் தேவை :

விஞ்ஞானத்தின் புதுவாழ்வு இம் மெய்ஞ்ஞானத்தினாலேதான் நிலைக்கும்; நெறி தவறாமல் ஆக்கமுகங் கொள்ளும். வலுவுள்ள நாடுகள் சில, விஞ்ஞான வளர்ச்சியாற் கண்ட

ஒற்றுமையைத் தீயவற்றில் திருப்பிச் சிதைக்கும் செயலாகப் படைக் கருவிகளைப் பெருக்கிக் கொண்டு உலகத்தில் அமைதியின்மையையும் அழிவையும் மிகுத்துவரும் கொடுமைக்கு, 'ஒருவனே தேவன்' என்னும் கடவுட் கொள்கையின் ஈடுபாடே மருந்தாய் உதவுமல்லது பிறிதிலை.

நாடு மொழி இனம் முதலியவை காரணமாக உண்டாகும் சிறுசிறு ஒற்றுமைகளும் சிற்சில கடமைகளுக்குத் தேவையே; ஆனால் அவை பலவும், விஞ்ஞானங் காரணமாகப் பெருகிவரும் ஒருமை நாகரிகமும், வெறுமலாச்சியாகிவிடாமல், உண்மையில அவையெல்லாம் தூய நிலைத்த பெரிய ஒற்றுமைக்கு முகங்கொண்டு கலந்து, நனிநாகரிக வாழ்க்கையொழுக்கங்களாய் வளர்ச்சி முறையில் ஆக்கமுகமாக விளங்கவேண்டுமானால், இக்கால நாகரிகம் என்பது ஒருவனே தேவன்' என்னுங் கடவுட் கொள்கையைத் திட்டமாய்த் தெளிந்து கடைப்பிடித்து அந்நிலையில் உருக்கங்கொள்வது கட்டாயமாகும்; இக்காலத்துக்கு இது கட்டாயத தேவை! 'திருவடிப் புகழ்ச்சி' இத்தேவையை நிரப்ப உதவுகின்றது.

வழிபாடு :

இனி, கடவுட் கொள்கையை அறிவளவாக அறிந்திருந்தால்மட்டும் போதாது; அக்கொள்கை பயன் தரவேண்டுமானால், 'ஒருவனே தேவன்' என்று முதல்வனைத் தெளிதலுடன், அவனிடம் ஈடுபடுதலும (அனுபவப்படுதலும்) வேண்டும். இந்த ஈடுபாட்டுணர்வுக்குத்தான் 'ஞானம' என்பது பெயர். ஈடுபடும் செயலைத்தான், முறைகொண்டு வரிசையறிந்து அது நிகழ்வதனால் 'பத்தி செய்தல்' எனபார்கள். உருக்கங்கொண்டு முறையோடு பிளபற்றுதல் என்பது அதன் கருத்து; பொதுவாக அதனை 'வழிபாடு' என்று சொல்லலாம். 'பத்தி' என்பது முறையான உருக்கம்; உருக்கங்கொண்டு முதல்வன் கருத்தின்வழி நிற்றலைவிட, நன்றி மிக்கதும பண்பு மிக்கதும் வாழ்க்கையிற் பயன் மிக்கதும் ஞானத்திற் சிறப்பிப்பதும் வேறில்லை.

கடவுள் கருத்து இன்னதென்பதும் அவனிடம் ஈடுபடும் முறைகளும் பெரியோர் வாய்மொழிகளாலும் நூலுரைகளாலும், தொடக்கத்தில் அறிந்துகொள்ளலாம்; அறிந்து அவை உணர்த்தும் நெறியில் நின்று பொதுவில் உருக்கமும் ஈடுபாடும் கொண்டால், தெளிவான போக்கில் ஈடுபாடு (சரியை) கொள்வதற்குத் தமக்கெனத் தனி வழிகாட்டியாக யாரேனும் தக்கார் தோன்றி உதவிசெய்வர். இச்சிறப்பு ஈடுபாட்டில் உண்மையும் உருக்கமுங் கொண்டு ஒழுகிவரும்போது தமக்குள் மேன்மேல் அகப்புறத் தெளிவுகளோடுகூடிய ஈடுபாடும் (கிரியை) அத்தெளிவின் நுகர்வுகளும் (யோகம்) தாமே உண்டாகும்; இந்த இணக்கத்தின் (யோகம்) பயனாக, முற்றிலும் முதல்வன் கருத்தின்வழி நடந்துகொள்வதற்கு (ஞானம்) இயலும். இவை ஈடுபாட்டு வகைகள்.

இறைவனைத் தெளிந்து இங்ஙனம் படிப்படியே ஈடுபாடும் முதிர்ந்து அப்பெருமான் கருத்தின் வழி ஒழுகும் பெருமைமிக்க சான்றோர்தாம், நாடு மொழி இனம் முதலியவற்றிலும் இழுக்கின்றிக் கடமை காரணமாகப் பணி செய்தல் இயலும். முதல்வன கருத்தினவழி அவைகளை இயக்கிவிடவும் கூடும்; மற்றவாகளெல்லாரும் அவாக் காரணமாக அவற்றில் இறங்கித் தாறுமாறாய் இயக்கி அவற்றின மக்களை நெறிதவறச் செய்துவிடுவா; ஒற்றுமை சிற்சில கண்டாலும, அவ்வொற்றுமைகளைப் பின்னும் ஒருமுகப்படுத்தவும் நன்முகங் கூட்டவும் அறியாமல், மாட்டாமல், திக்கித் திணறிப் பிறரையுங் குலைத்துத தாமும் நிலைகெடுவர். அதனாலேதான் தெய்வத் தெளிதலும் தெளிந்தோர்ப் பேணலும் வாழ்க்கைக்கு இன்றியமையாதன ஆயின.

திருவடி வழிபாடு :

வழிபாடுகளால் உண்டாகும் இத்தகைய உணர்ச்சி முன்னேற்றங்களில் எந்நிலையிலும் பற்றினறிச் செய்யும் வழிபாட்டுணர்ச்சியே (ஞானத்தில் ஞானம்) மேன்மையானது: ஆற்றல் வாய்ந்தது, பயன் சிறந்தது அத்தகைய மேன்மையான வழிபாடுதான் 'திருவடி வழிபாடு' என்பது: திருவடி வழிபாடு எனின், 'பற்றற்ற வழிபாடு' என்பது பொருள்.

திருவடி வழிபாடு. உருவ அருவுருவ அருவ ஞான வழிபாடுகள் நால்வகைக்கும் பொதுவானது அதாவது நான்கு நிலைகளிலும் அது பற்றினறிச் செய்வதை உணர்த்தும் நான்காவதாகிய ஞான வழிபாட்டில் பற்று முற்றும் அறுதல் வாய்ந்தனின. ஞான வழி பாட்டை அது சிறப்பின உணர்த்தும். முழு உருவமும் அன்றி, ஆற்றல் தேங்கிய, ஆற்றல் ஊற்றும திருவடிகளை மட்டுங் கொள்வதால், உருவ வேற்றுமைகளைக் கடந்த, அதாவது உருவ அருவுருவ அருவ வேற்றுமைகளைக் கடந்த பற்றற்ற பண்பு வழிபாடாய் அது சிறப்பதாயிற்று

திருவடிகள் உருவமாய் இருத்தலால் உருவமும், ஆனல் திருவடிகளையுடையார் காணு மையால் அருவமும், இங்ஙனம் உரு அரு என்னும் இரண்டுங்கூடி நிற்றலால் அருஉருவமும் உடையனவாய் இருக்கின்றன. இதனல், சரியை முதலிய நால்வகையார்க்கும் திருவடி வழிபாடு பொதுவாகும்; 'அடி சேர்ந்தார்' என்பவர் இந்நால்வகை நிலைகளிலும் தூயராய் நின்றொழுகியவர் ஆவர். அப்பர் சம்பந்தர் சுந்தரர் மணிவாசகர் என்னும் நால்வரும் ஞான நிலையில அடிசேர்ந்தவர் ஆவர் முறையே இந நால்வகைகளையும் தம் வாழ்க்கையால் விளக்கிக் காட்டிய நம சமய குரவராவர்.

வடலூர் வள்ளலார் அருளிச்செய்த 'திருவடிப் புகழ்ச்சி'யிலும் இவ்வுண்மைகள் விளக்கப்பெற்றிருக்கின்றன.

முதல்வன் பண்புகளில் ஈடுபாடு கொள்ளும் ஞான வழிபாட்டுக்கே சிறப்பாய்த் திருவடிகள் உரியனவாதலின், முதலில் அம் முதன்மை கருதி 84 அடிகள் வரையில் பண்புகளை வள்ளலார் விளக்கியருளினர்; அதன்பின், அப் பண்புகளையுடைய முழு முதற் பொருளின் நிலை 48ம் அடிவரையில் விளக்கப்பெறுகின்றது. பின்பு அம் முதற்பொருளின் பேராற்றலை நினைந்து 64ம் அடிவரையில் விதந்தோதினர்.

அடுத்து, பொருள் நிலையும் அதன் ஆற்றல் நிலையுமென்னும் சிவமும் சத்தியுங்கூடிய நிலையில் இயக்கங்கொள்ளும திருநடனத் திறம் 72ம் அடிவரையிலும், அத்திருநடனத் தின இயக்கத்தை ஏற்றுச செயல்கொள்ளும் நான்முகன் திருமால் உருத்திரன் இந்திரா முதலிய தேவ வகையினர் சிவகணத் தலைவா மறலி என்போர் ஈடுபாட்டு நிலைகள் 92ம் அடி வரையிலும், ஈடுபடுவாருடைய நிலைகட்கேற்ப அருள் வழங்கும் வகைகள் 96-ம் அடி வரையிலும், சமயகுரவா நால்வர்க்கும் திருவடித் திறன் பொதுவில் உரியதாதல் 101-ம் அடிவரையிலும், அடியாா பொருட்டுத் திருவடிகளே சிறப்பாய் இயங்கிய உண்மைகள் 106-ம் அடி வரையிலும் அவரால் விளக்கப்பட்டன.

கடைசியாக, வள்ளற்பெருமான், தம் நிலைகளுக்குப் பற்பல வகையில் உதவியு திருவடித் திறங்களை 122-ம அடிவரையில உருக்கத்துடன் ஓதி, அப்படியே எல்லாக்கும் உதவவல்ல அத்திருவடிகளின் பொதுமையையும் அழிவில்லா இனிமையையும் ஈற்றடிவரை யில் தெளிவித்து அமைகினறார்.

'திருவடிப புகழ்ச்சி' என்னும் இத் திருவருட்பாப் பகுதியை உருக்கத்துடன் திருவடி வழிபாட்டில் நாளும ஓதுகின்ற மெய்யன்பாகட்கு, இதனல இருமை வாழ்வும் இனிது மலாந்து அழிவில் இன்பமும் எளிதாய் இசைந்துவருதல உறுதியேயாம் இவ்வுண்மையைத் தெளிந்த, அன்பா பலர் குருவாரந்தோறும இப்பகுதியை 'அருட்பெருஞ்சோதி அகவ'லுடன் இன்றும் பாராயணஞ்செய்து பதம் பெற்று வருகின்றனா.

1-7-68

வள்ளலார் வழிபட்ட தலங்கள்

1 சென்னை கந்தகோட்டம்

'சமயபுரக் கிழார்'

வள்ளற் பெருமான் வழிபட்ட திருத்தலமாகிய கந்த கோட்டம் சென்னை நகரில் பார்க் டவுன் (சென்னை-8) என்றும் பகுதியில் உள்ளது. கந்தசாமி கோயில் எனவும் முத்துக் குமாரசாமிகோயில் எனவும் இது வழங்கும்.

கோட்டம் என்னும் பெயர்.

பழங்காலத்தில் கோயில்கள் கோட்டம் எனப் பெயர் பெற்றிருந்தன. வச்சிரக் கோட்டம், வேற் கோட்டம், நிலாக் கோட்டம், நிக்கந்தக் கோட்டம், சுடுகாட்டுக் கோட்டம் எனப் பல கோட்டங்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்ததாகச் சிலப்பதிகாரத்தாலறிகிறோம்.

''அமரர் தருக் கோட்டம் வெள் யானைக் கோட்டம்
புகர் வெள்ளை நாகர் தம் கோட்டம் பகல்வாயில்
உச்சிக் கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம் புறம் பணையான் வாழ்கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக் கோட்டம்''

—கனாத்திறமுரைத்த காதை (9-13)

இதற்கு உரை எழுதும் அரும்பதவுரையாசிரியர் ''அமரர் தருக்கோட்டம்-கற்பகம் நிற்கும் கோயில், வச்சிரக் கோட்டம்-வச்சிராயுதம் இருக்கிற கோயில், நிக்கந்தக் கோட்டம் நிக்கந்த தேவரான அருகர் கோயில், நிலாக் கோட்டம்-சந்திரன் கோயில்'' என உரை யெழுதுகின்றார்.

சேரர் தலை நகராகிய வஞ்சியின் கீழ்த்திசையில் குணவாயிற் கோட்டம் என்றொரு கோயிலிருந்த தெனபதூஉம், அரசு துறந்திருந்த இளங்கோவடிகள் அதிலிருந்தா ரென்பதூஉம்.

''குணவாயிற் கோட்டத்தரசு துறந்திருந்த
குடக் கோச் சேர லிளங்கோவடிகட்கு''

என்னும் சிலப்பதிகாரப் பதிகச் செய்யுளடிகளாலும் அதன் உரைகளாலும் அறியப்படும்.

காஞ்சிபுரத்திலுள்ள முருகன் கோயில் 'கச்சிக் குமர கோட்டம்' என்றும், கும்ப கோணத்திலுள்ள கோயிலொன்று 'குடந்தைக் கீழ்க் கோட்டம்' என்றும் வழங்கப்படுவதைக் காண்கிறோம். திருவையாற்றுக் கோயிலுக்குக் 'காவிரிக் கோட்டம்' என்பது பெயர். 'காவிரிக் கோட்டதது ஐயாறுடைய அடிகளோ' என்பது சுந்தரர் தேவாரத் திருவாக்கு.

மணிமேகலையுள் சிறைக்கோட்ட மறக் கோட்டமாக்கிய காதையில், சிறைச்சாலையும் அறச்சாலையும், சிறைக்கோட்டம் அறக்கோட்டம் என வழங்கப்படுதலின், கோட்டம் என்பது இடப் பொதுப் பெயராக வழங்கப்பட்டு வந்ததெனக் கருதலாம்.

முற்காலத்தில் நாட்டின் பிரிவுகளும் கோட்டம் என வழங்கப்பட்டன தொண்ட(டை) நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டம் என்னும் சொல் பிற்காலத்தில் வழக்கொழிந்து போயிற்று இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழகத்தின் ஆட்சி மொழியாகத தமிழ்மொழி ஏற்கப்பட்ட பின்னா ரெவினியு டிவிஷனைக் (Revenue Division) கோட்டம் என வழங்குகிறோம். ரெவினியு டிவிஷனல் ஆபிஸர் (R D. O) கோட்டாட்சித் தலைவர் எனப்படுகிறார்.

இலக்கிய வழக்கிலும் வரலாற்று வழக்கிலும் அருகிப்போன 'கோட்டம்' என்னும் இச்சொல்லை இற்றைக்கு நூற்றுநாற்பதாண்டுகளுக்கு முன்னரே வழக்கிற்குக் கொணர்ந்த சிறப்பு வள்ளற்பெருமானையே சாரும். கந்தசாமி கோயிலைக் கந்த கோட்டமாக்கியவர் அடிகளே.

கந்தகோட்டத்தின் வரலாறு

கந்த கோட்டம் மிகப் பழமையான கோயிலன்று. இது ஏறத்தாழ 300 ஆண்டு களுக்குமுன் ஏற்பட்டதாகும். சாலிவாகன சகம் 1595ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு செங்கற்கட்டிடமாகக் கட்டப்பட்டதெனவும் இப்போதுள்ள கற்கோயில் ஷை சகம் 1780ல் கட்டப்பட்டதெனவும் இங்குள்ள கல்வெட்டால் அறியப்படுகிறது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன் சென்னையில் வேளூர் மாரி செட்டியார் கந்தப்ப ஆசாரியார் என்ற இரு நண்பர்கள் இருந்தனர். இவ்விருவரும் கார்த்திகைதோறும் திருப்போரூர் சென்று வழிபடுவதை நியமமாகக் கொண்டிருந்தனர். இந்நியமப்படி சாலிவாகன சகம் 1595ஆம் ஆண்டு பிரமாதி வருடம் மார்கழித் திங்கள் கார்த்திகையன்றும் திருப்போரூர் சென்றனர். வழிநடந்த களைப்பினால் போரூரில ஒரு குளக்கரையில் படுத்தயர்ந்தனர். அருகிலுள்ள புற்றொன்றில் முருகப் பெருமானின் திருவுருவம் மறைந்து கிடப்பதாகக் கனவு கண்டனர் விழித்தெழுந்து புற்றைத் தோண்டிப் பார்த்து, முருகன திருவுருவொன்று காணப்படவே இதுவும் அவ னருளே என மகிழ்ந்து அதனைத் தம்முடன் சென்னைக்கு எடுத்துவந்து கந்தப்பாசாரியார் முன்னரே கட்டி வழிபட்டுவரும் விநாயகர் கோயிலில் எழுந்தருளச் செய்தனர். முருகனுக்குத் தனிக் கோயில் அமைக்க மாரி செட்டியார் விரும்பினார். முத்துநாயகரால் வழங்கப்பட்ட தோட்டத்தில் செங்கற் கோயில் கட்டப்பெற்றது. பின்னர் அதுவே கற்கோயிலாகக் கட்டப்பெற்றது.

வழிபட்ட பெரியோர்களும் பாடல்களும்

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள், முருகதாச சுவாமிகள் என்னும் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் ஆகிய மூவரும கந்தகோட்டத்தை வழிபட்டுப் பாமாலைகள் சூட்டியுள்ளனர். வள்ளற்பெருமானால் அருளப்பெற்றவை தெய்வமணிமாலை யும் கந்தர் சரணப்பத்தும் ஆகும்.

தண்டபாணி சுவாமிகள் பாடியவை: கந்தகோட்டத் திருப்புகழ், கந்தகோட்டப் பதிற்றுப்பத்தந்தாதி, மயில்மிசை கண்ட பதிகம், தேர்மிசை கண்ட பதிகம், வெருந்து தரிசனப் பதிகம் சண்முக தரிசனப் பதிகம், விமான தரிசனப் பதிகம், கந்தசுவாமிக் கலம்பகம், கந்தசாமிபிள்ளைத் தமிழ், கந்தசாமி பதிகம், கந்தர் தனிவெண்பா என்பனவாம். பாம்பன் சுவாமிகள் பாடியன: கந்தசாமிப் பா, கந்தர் இரட்டை மணி மாலை, கந்தர் ஒருபா ஒருபது, கந்தர் திருவாரம், கந்தர் நானமணி மாலை, கந்தவேள் வேட்கை, சென்னைச் சேய், சென்னை முத்துக்குமாரசுவாமி ஆகியனவாம்.

குளத்தூர் வரகவி கிருஷ்ணப்ப செட்டியார் செல்வக் கந்தர் தலபுராணம் என்ற பெயரில் செய்யுள் வடிவில் ஒரு தல புராணத்தை இயற்றினார். கந்தர் திருப்புகழ், கந்தர் கீர்த்தனை என்பனவும் அவரால் செய்யப்பட்டன. உரைநடையில் தல் புராணம் ஒன்று நமச்சிவாய யோகிகள் என்பவரால் செய்யப்பட்டுள்ளது. அண்மையில் காலஞ்சென்ற திரு. ரசபதி அவர்கள் எழுதிய திருக்கோயில் வரலாறு தேவஸ்தான வெளியீடாக கி. பி. 1959ல் வெளிவந்தது.

கந்த கோட்டத்தைப் பற்றிப் பல பிரபந்தங்கள் தோன்றியிருந்தும் வள்ளற் பெருமானது அருட்பாக்களைத் தவிர மற்றவை யாவும் பெருவழக்காகப் பயிலப் பெறவில்லை என்பது கண்கூடு.

வள்ளற்பெருமானின் வழிபாடு

வள்ளற்பெருமான் பிள்ளைப் பருவம்முதல் முப்பத்தைந்தாண்டுவரை சென்னையில் உறைந்தார்கள். அக்காலத்தில் முதன்முதலாக வழிபட்டதும் பாடல் பாடத் தொடங்கியதும் கந்த கோட்டமே யாகும். அடிகள் சிறுவராயிருந்தபோது தாயாரும் அண்ணன் முதலிய குடும்பத்தாரும் சென்னைக்குக் குடியேறினர். தமையனார் சபாபதிபிள்ளை தம்பி இராமலிங்கர்க்குத் தாமே கல்விப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். பள்ளிக்கு அனுப்பப் பட்டபோது இராமலிங்கர் பள்ளி செல்ல மறுத்துவிட்டார். உலகியற் படிப்பில் அவருக்கு நாட்டமில்லை. கற்க வேண்டுவனவற்றை இறைவனிடத்தே கற்றார். கேட்க வேண்டுவனவற்றை இறைவனிடமே கேட்டார். அடிகளின் கல்வியும் கேள்வியும் இறைவனிடத்துப் பெற்றதே ஒழிய வேறு எவ்வாசிரியரிடத்தும் பெற்றதல்ல. இறைவன் அடிகளைப் பள்ளி பயிற்றாது தானே கல்வி பயிற்றினான். இங்ஙனம் ஓதாதே உற்ற கலைகளையெல்லாம் உணர்ந்த அடிகள் ஒன்பதாம் ஆண்டில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றார். இக்காலமே அடிகள் கந்தகோட்டத்தை வழிபட்டதும் பாடியதும் ஆகும்.

பள்ளிக்குச் செல்லாது வீட்டிலும் தங்காது திரிந்த சிறுவராகிய இராமலிங்கர் கந்த கோட்டம் துலுக்காணத்தம்மன் கோயில் முதலியவற்றைச் சுற்றியும் சூழ்ந்தும் பாடியும் பணிந்தும் காலங்கழிப்பவரானார். இந்நிலையில் கந்தகோட்டத்தை வழிபட்ட பெருமானார் தெய்வமணிமாலையைப் பாடத் தொடங்கினார். அடிகளது அருள்வாக்கில் முதலிற் பிறந்த சொல 'திருஓங்கு' என்பதாகும். திருஓங்கு என முதற் பாடலைத் தொடங்கிய பெருமான் 'தருஓங்கு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே தண்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே' எனப்பாடலை முடிக்கின்றார். இம்மாலையிலுள்ள பாடல்கள் யாவும் 'தெய்வமணியே' என்று முடியப்பெறுவதால் இது தெய்வமணிமாலை எனப் பெயர் பெற்றது. கந்தகோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே தண்முகத் துய்யமணி உன்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே' என்பது இம்மாலையின் முப்பத்தொரு பாடல்களிலும் பயின்றுவரும் இறுதித் தொடராகும். பாடல் தோறும் சென்னையைக் குறிப்பிடும் அடிகள், தருஓங்கு சென்னை, தரமேவு சென்னை, அடி'

இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ்

துன்னும் மதில் சென்னை, தள்ளரிய சென்னை, ததிபெரும் சென்னை, தாமம் ஒளிர் சென்னை, தலைவர் புகழ் சென்னை, தருமமிகு சென்னை, தாய்ஒன்று சென்னை, தரையில் உயர் சென்னை, தாம்பிரிவில் சென்னை, தார்கொண்ட சென்னை, தன்புகழ்செய் சென்னை, தானமிகுசென்னை, சற்றைஅகல் சென்னை, தடமேவு சென்னை, தப்பற்ற சென்னை, சந்தமிகு சென்னை, ஸ்சயம் உயர் சென்னை, தழைவுற்ற சென்னை, தானமிங்கேர் சென்னை, தனாீடு சென்னை, தாய் கொண்ட சென்னை, தற்றகைய சென்னை, தாய்ப்பட்ட சென்னை, தாவலம் சென்னை, தர மருவு சென்னை, தார் உண்ட சென்னை, தளாவிலாச் சென்னை, சத்திக்குரிச் சென்னை, தான்கொண்ட சென்னை எனக் குறிப்பிடுவர். அடிகளின் வாக்கில் சென்னைபெற்ற சிறப் புத்தான் என்னே? தேட்டிலே மிகுந்த சென்னை என்றும் செய்விளக்கும் புகழுடைய சென்னை என்றும் கவினசேர் சென்னை என்றும் பிறவிடங்களிலும் கூறுவர் அடிகள்.

தெய்வமணிமாலை எளிய இனிய செஞ்சொற்களாலாயது. தோத்திரத்திற்குச் சிறந் தது. தோன்றியநாள் தொடங்கி இன்றளவும் பல்லாயிரக்கானவர்களை ஈர்த்து மகிழ்விப் பது. பெருமானது திருவாக்கினின்றும் தெய்வமணிமாலை பிறந்ததுமே சென்னை மக்கள் சிறுவராகிய இராமலிங்கரின் சிறப்பை உணரத்தொடங்கினர். சிறுவரைச் சிறுவராகக் கருதவில்லை. அவதார புருடராகவே கருதினர். சிறியோரும் பெரியோரும் தெய்வமணி மாலைப் பாடல்களை மனப்பாடம் செய்துகொண்டு பாடத்தொடங்கினர். அன்பர் ஒருவர் முன்வந்து தெய்வமணிமாலையை அப்போதே அச்சிட்டார் அடிகளது அருட்பாடல்களுள் முதன் முதலில் அச்சானது தெய்வமணிமாலையும் கந்தர் சரணப்பத்துமே ஆகும். அம் முதற்பதிப்பின் தலைப்பு (முகப்பேடு)

> ''உ — சிவமயம் — சென்னைக கந்தர் தெய்வமணி மாலை - சரணப்பத்து — இவை பாளையம் முத்து செட்டியாரவர்கள் கேட்டுக் கொண்டபடி, சிதம் பரம் இராமலிங்கப்பிள்ளை அவர்களாலியற்றப்பட்டு, காயாறு ஞானசுந்தர ஐயர் அவர்களால் சென்னை சாஸ்த்திர விளக்கச் சங்கத்தைச சார்ந்த வித்தியானத்த அச்சுககூடத்தில் பதிப்பிக்கப்பட்டன''

என்று காணப்படுகிறது. இதில் அச்சிடப்பட்ட ஆண்டு குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் இது அடிகளார் ஒழிவிலொடுக்க நூலை அச்சிற் பதிப்பித்த 1851ஆம் ஆண்டுக்கு முற்பட்டதாக இருக்கும் என்றே தொன்றுதொட்டுவரும் கேள்வியால் அறியக்கிடக்கிறது எனத் திருவருட்பா பதிப்பாளர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் எழுதுகின்றனர்.

அடிகளாரை அன்று புறஉலகுக்குக் காட்டிக்கொடுத்தது தெய்வமணிமாலையே. அன்று முதல் இன்றுவரை கந்தகோட்ட விஷயமாக மக்களாற் பெரிதும் பயிலப்பட்டு வருவதும் தெய்வமணிமாலை ஒன்றே. அத்தெய்வமணிமாலையுள் பலராற் பெரிதும் பயி லப்பெறும் 'ஒருமையுடன்' என்ற தொடக்கத்தையுடைய பாடலைக்கூறி இக்கட்டுரையை நிறைவு செய்வோம்,

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

1-7-68

பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின் கருணைநிதி வேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

—தெய்வமணிமாலை 8

(அடுத்த இதழில் திருத்தணிகை)

திருவருட்பா விழா

இராமலிங்கா பணி மன்றத்தின் திருவருட்பா விழா இவ்வாண்டு ஸ்ரீ சென்ன மல்லீசுவரர், சென்னகேசவப் பெருமாள் திருக்கோயில் அனுபூதி மண்டபத்தில் 27-4-68 முதல் 4-5-68 முடிய எட்டு நாள்கள் இனிதாக நடைபெற்றது. முன்னாள் முதலமைச்சர் திரு. மீ. பக்தவத்சலம், திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள், டாக்டர் திருஞான சம்பந்தம், பன்மொழிப் புலவர் அப்பாதுரை, திரு. எம். ஏ. மாணிக்கவேலர், டாக்டர் வி. ஆ. தேவசேனபதி, பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் ஆகிய பெரு மக்கள் எண்மர் முறையே தலைமை தாங்கினர். திரு. சு. பாலச்சந்திரன், திரு. அ. சுந்தரமூர்த்தி, திரு. சி. பாலசுப்பிரமணியம், திரு. ஊ. வ. தட்சிணாமூர்த்தி, திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன் திரு. இரா. மாணிக்கவாசகம், திரு. கு. அழகிரிசாமி, திரு. நா. பார்த்தசாரதி ஆகிய பேரன்பர் எண்மர் சிறப்புரையாற்றினர். அருட்பா அரசு, கீதாபோதகர் திரு. நா. கிரிதாரி பிரசாத் அவர்கள் எட்டு நாளிலும விரிவுரை யாற்றினார். பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்கள் முதல் நாளில் விழாவைத் தொடங்கி வைத்தார். விழாவின் நிறைவு நாள் பத்ம பூஷண விருது பெற்ற கலைக்களஞ்சிய ஆசிரியர் திரு. பெ. தூரன் அவர்கட்குப் பாராட்டு விழாவாக அமைநதது. முதல் நாளில் தொடக்கத்தில் வந்தோரனைவரையும் தலைவர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் வரவேற்க, நிறைவுநாளில், செயலாளர் திரு. ஔவை நடராஜன் நன்றி நவின்றார்.

திரு. பெ. தூரன் அவர்கள் சிறந்த கவிஞர். நல்ல தமிழ்த் தொண்டர். கலைக் களஞ்சியத்தை உருவாக்கிய அவருக்கு அவரது தகுதி நோக்கி நமது இந்திய அரசு 'பத்ம பூஷண்' என்னும் விருது வழங்கிச் சிறப்பித்தது. இச் சிறப்பினைப் பெற்ற தூரனாரை இராமலிங்கர் பணி மன்றம் திருக்கோபுரமும் ஆடல்வல்லானும் பொறிக்கப் பெற்ற பொற் கேடயமளித்துப் பொன்னாடை போர்த்திப் பாராட்டியது இனிதினிது. தூரனார் பல்லாண்டு வாழ்ந்து பயன் மிக்க தொண்டுகள் இன்னும் பல செய்து சிறப்புறுக என வாழ்த்துகின்றோம்.

கங்கை வெள்ளமோ, கடல் மடை திறந்ததோ, கோடையிடியோ எனக் கேட்டாரை வியப்புறச் செய்யுமாறு எட்டு நாளும் விரிவுரை செய்த திரு. கிரிதாரிப் பிரசாத் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள் உரிய.

இவ்வாண்டு திருவருட்பா விழாவை எமது திருக்கோயிலில் வைத்துக் கொள்வோம் எனக் கூறி ஆர்வத்தோடு தமது திருக்கோயிலில் விழாவை வைத்துக் கொண்டவர் மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்களாவார். வழி வழியாக வரும் வள்ளண்மை யுடைய மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் நீடு வாழ்ந்து நாட்டுக்கும் நமக்கும் நலம் பல புரிக என வாழ்த்துகின்றோம்.

எமது பணி மன்றத்தலைவர் திரு. மகாலிங்கம் அவர்கள் வழக்கம் போல் இவ்வாண்டும் இவ் விழாவைப் பெரும் பொருட் செலவில் அழகாக நடத்தியிருக்கின்றார்கள். சன்மார்க்கத் திறத்தில் பெருஞ் செயல்களைப் பேரார்வத்தோடு தொடங்கி நடத்தி வரும் தலைவரவர்களது பணிகள் வெல்க! வாழ்க!

— ஆசிரியர்

1-7-68

மதம் மதம் என்று எல்லாவற்றையும் யான் கொள்ளேன். மதத்தின் பெயரால் செய்யப்படுங் கொடுமைகளை யான் ஏற்கமாட்டேன். பண்டை நூல்கள் தெய்விகமானவைகளே. ஆனாலும், அவைகளிலுள்ள பொருள்கள் என் அறிவிற்குப் பொருந்தியனவா யிருத்தல் வேண்டும். இல்லையேல் நூல்களின் கடவுள் தன்மையையும் யான் மறுப்பேன்.

— காந்தியடிகள்

விளம்பர உதவி :

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

72, செங்குப்தா தெரு.

கோயமுத்தூர்—9.

Kodahanallur Sundaraswamigal

Professor K. R. R. SASTRY

The nineteenth century in South Indian religious history has been dominated by great personalities. One of the most marvellous of such types was Saint Ramalingam. Eight years after Chidambaram Ramalinga Swamigal's birth was born pious Kodahanallur Sundaraswamigal who exerted a powerful spiritual influence on the many devotees who came under his notice. One Sivanandaswami of Tinnevelly, a disciple of Sri Sundaraswamigal, is believed to have a full collection of the many mysterious incidents of the Swami's life. Mr. K. Ramabhadra Sarma has written an appreciative and sympathetic life of the Swamigal in the 'Lokopakari' (Tamil). A more discriminating and valuable account is that by the late B. V. Kameswarier of Pudukotah published by the "Janamitran" Press, a free use of which has been kindly permitted to me by the editor of the "Janamitran".

BIRTH AND TRAINING

Sundaram was born of Yagneswara Sastri and Kamakshi Ammal at Gangaikondan (Tinnevelly Dt.) in the Srivatsa Gotra with the Anusa (Anuradha) star in the Risabha Lagna on 2-12-1831 (Per Arimalam Kamakshinatha Josyar). Descended as he was in the collateral line of the illustrious Appayya Dikshitar, Siva-Bhakti was running in his veins. Not eighteen months had passed after the birth of this child when his parents passed away. The boy's maternal uncle took him to Pattamadai. The fifth year saw Aksarabhyasa (instruction in the alphabet) and he was invested with the sacred thread in his seventh year. Under Sundara Sastrigal of Viravanallur boy Sundaram learnt the Prasthana-Traya-viz., Brahmasutra-Bhasya, Upanisad-Bhasya and Gita-Bhsya-and the orthodox training in Vyakarana, Tarka and Purvamimamsa was also had under this learned Guru Sundaram was leading an austere Brahmachari's life and had already begun to specialize in Suta-Samhita, which was bound to take him to many parts of the Tamil country

MARRIAGE AND TRAVELS

His maternal uncle Venkatasubbier had Sundaram married to Janaki, daughter of Ramasubbier, one of the orthodox devotees of Siva. Sundaram was invited to stay at Adaichani and presented with Banalinga, Nataraja and Sivakami (Parvati) Murtis by his father-in-law for worship. Sundaram had also Upadesa from Visweswara Sastri of Adaichani. Sundaram, like another great contemporary of his, Sri. Ramakrisha Paramahamsa (vide the interesting parallel drawn between the two by the late Mr. B. V. Kameswarier in his sketch in Tamil) initiated his wife also into this path of Knowledge (Jnana) so that she could be a true partner. By this time, his reputation as an Illustrious exponent of Suta-Samhita had spread to distant districts.

From Bana-Tirtha and Kalyana-Tirtha near the source of the Tamaraparni, Sundaram went on a pilgrimage to all the sacred spots in the course of that river as far as Trichendur. The quest of a pilgrimage to the North has always been a phase in the life of true Hindu devotees in this land; and Sundaram with his devotees went to Mathurai, Tiruvanaikaval, Tiruvaiyar, Mayavaram, Shiyali, Tiruvenkadu, Chidambaram, Vriddhachalam, Kalahasti and reached Kasi-the place of Moksa par excellence.

Every Hindu is ordained to begin some mark of sacrifice after his return from Kasi. Sundaram practised Mauna (silence) and attained further stages in his Samadhi. On an invitation from Kodahanallur, Sundaram finished Suta-samhita according to the Panchaha practice in five days. Sudhamalli was visited by Sundaram and on the second day when Sundaram was explaining to the reading of the text by Seshachala Dikshitar of Kadayam, Sundaram heard the call from within and at once crossed the second Asrama and became a true vidwat-Sannyasi.

SWAMI'S PREACHINGS

Our Swami, who was now in his 23rd year, was living in the Sankaracharya Math at Tinnevelly. As his spiritual practices were demanding a secluded locality, Swamiji hied to the bamboo bushes near the Kodahanallur bank. Kodahanallur being the locality where Swamiji attained higher stages in his life as a Yogi before his thirtieth year, our Swami has since been known as Kodahanallur Swamigal in the Tamil land.

SWAMI AND SOUTH INDIAN TEMPLES

At Swamiji's istance, a devotee presented a golden stick to Kantimati Amman, the presiding Deity at Tinnevelly. Swamiji collected sufficient funds and celebrated

the Laksa-Dipa–the feast of 1,00,000 lamps–in the Tinnevelly temple in 1864. While at Kurukkuthurai, the seat of a famous Subrahmanya's shrine near Tinnevelly, many devotees hastened to him. His advice to them was always intended to take them to the next higher stage in their religious careers.

Saundarya Pandyan Pillai, a true disciple of Sundara Swamigal, and Swamigal started to Pudukottah. Suta-Samhita, one of the most sacred of the Vedic lore, was explained to an appreciative audience at Pudukottah. Swamiji went to Kumbakonam, Chidambaram and Tiruvannamalai and returned to Tinnevelly. Then he went back to Pudukottah and Arimalam Sivaraman Chettiar, one of his chief disciples, took him to Arimalam and the Swamigal had the Astabandhana Kumbhabhiseka of the Sri Minakshi Temple there. Swamigal had a round of visits to many villages of Chettinad and performed the Kumbhabhiseka of Tiruvaiyar. It was here that Mahavaidyanathier, the great musician, became his disciple.

On his return the residents of Gangaikondan waited on Swamiji to have the Kumbhabhiseka of Anandavalli and Kailasanther. Forthwith along with Sivaraman Chettiar he went to Colombo on invitation and returned with sufficient wealth and performed Kumbhabhiseka at Gangaikondan. Prof. M. A. Sundaram Pillai of the Tiruvandrum College requested the Swamigal to reduce all his marvellous talks to writing and the Swamigal agreed to it.

SWAMIGAL'S SIDDHI

Swamigal went to Kulasekharapatnam and had his Suta-Samhita expositions. Prior to his return to Arimalam, Swamigal should have met Saint Ramalingam at Chidambaram. Two great men met each other at Chidambaram and Ramalingam is said to have prophesied the nearing of the Samadhi of Sundara Swamigal. At Arimalam, the abode of that true disciple Sivaraman Chettiar, Swami collected his talks on Vedagama Sampradaya-Prakaranam ending with the Mahavakya Prakaranam into "Nijananda-Vilasa" his third work, and gave it to his staunch disciples. At Arimalam, an Annadana Chhatram (place where food is distributed among the poor) was built at Swami's instance and twenty-two Kumbhabhisekas owe their celebration to the strenuous efforts of the Swamigal. To the gathering of eminent disciples, after ordaining his disciples to worship the Bana-Linga entrusted to him, Swamigal attained Siddhi on 6th Arpisi, 1881 at Arimalam. Sivaraman Chettiar had a Samadhi erected at the sacred spot wherein the Bana-Linga of the pious Sundara Swamigal was intalled.

SWAMIJI's CONTRIBUTION

As one of the foremost Siva-Bhaktas who had attained a high stage of spiritual power, Swamiji had a wide following. *Sadasiva and his other disciples had the benefit*

of Swamiji's Tamil works on "Sivanubhuti Rasayana", "Swanubhava-Rasamanjari" and "Nijananda-Vilasa".

Above, all Swamiji like his contemporary Sri Ramakrisha Paramahamsa had the Nirvikalpa Samadhi while very young. Both had many pious non-twice-born castemen as disciples. As B. V. Kameswarier puts it, while Paramahamsa shone amidst us owing to the blessing of Goddess Kali, Sundara Swamigal had to go through the portals of Vedic learning through a Guru. The saintly Kodahanallur Swami with his Vibhuti (Sacred ash), Rudraksa (Sacred beads) and meditation of the Panchaksara Mantra has left behind him a number of staunch disciples and his Arimalam Samadhi is, to this dey, the resort of thousands of Chettiars and other pious devotees.

(From the author's book 'Sublime Biagraphies, Tamil Mysticism')

Printed by Kondah, Kasi. Seetharamon at Sree Agastya Printers, 85, III Main Road, C. I. T. Nagar (Ext.) Madras-35 and Published by N. Mahalingam, B.Sc., M. I. E., President The Ramalinga Mission for the Ramalinga Mission, A. V. M. Rajeswari, Kalyana Mantapam, 9/15 Edward Elliots Road, Mylapore, Madras-4.

Editor : OORAN ADIGAL

Regd. No. R. N. 14835/68

இராமலிங்கர் பணிமன்ற முத்திங்களிதழ்
JOURNAL OF THE RAMALINGA MISSION

ஆண்டுக் கட்டணம் ரூ. 4-00

மூன்று திங்களுக்கு ஒன்றாக ஓராண்டுக்கு நான்கு இதழ்கள் வெளிவரும். ஒவ்வொரு இதழும் 80 பக்கங்கள் கொண்டதாகும். தமிழில் 70 பக்கமும் ஆங்கிலத்தில் 10 பக்கமுமாக அமையும். அன்பர்கள் ஆதரவு தர வேண்டுகிறோம்.